காரனாகத் திரும்பி வருவேன்...” என்று முணுமுணுத்த வண்ணம் சென்றான்.

முத்து குடியிருந்த இடம் புல் முளைத்து விட்டது.

முத்து சென்னைக்குப் போய்ச் சேர்ந்தான். அந்த மாபெரும் நகரத்தை இமை கொட்டாமல் ஆச்சரிய மிகுதியினால் வாயைப் பிளந்த வண்ணம் பார்க்கலானான். அவனோ நாட்டுப்புறத்தான், யாரையும் தெரியாது. “எங்கே போவது? என்ன செய்வது? வேலை எங்கே கிடைக்கும்?” என்ற கேள்விகள் அவன் உள்ளத்தை அடிக்கடி முற்றுகையிட்டன. எத்தனையோ நாட்கள் கடந்துவிட்டன. ‘வேலைக்கு எப்படி வழி செய்வது?’ என்று புரியாமலேயே திண்டாடினான்.

ஒரு நாள் சாயந்திரம், வேலை தேடுவதற்காகப் புறப்பட்டவன், கால்போன வழியே நகரத்து எல்லையைச் சற்றுத் தாண்டிச் சென்றுவிட்டான். அங்கே ஒரு மைதானத்தில் பெரிய கொட்டில் கட்டப்பட்டிருப்பதையும், அதில் எத்தனையோ எருமைகளும் பசுக்களும் கட்டியிருப்பதையும் பார்த்தான். அதில் தன்னைப்போல அழுக்குத் துணி உடுத்தியவர்கள் வேலை செய்துகொண்டிருப்பதையும் கண்டான். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, அவர்களிடம் சென்று, சிறிது நேரம் பேசிவிட்டுத் தன் அபிப்பிராயத்தைச் சொன்னான். அவர்கள் முத்துவின்பால் அனுதாபம் கொண்டு, தங்கள் முதலாளியைப் பார்க்கச் சொன்னார்கள். அவர்கள் சொன்னபடியே அவன் அவரைப் போய்ப் பார்த்தான். அவன் காரியம் கை கூடியது. அந்தப் ‘பால் பண்ணை’யில் அவனுக்கு மாடு கறக்கும் வேலை கொடுக்கப்பட்டது. அதில் அவன் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தான்.


நாட்களுக்குமேல் நாட்கள் ஓடின. அவன் வெகு ஊக்கத்துடன் தனக்கு இட்ட வேலையைச் செய்து வந்தான். ஆகவே முதலாளிக்கு அவன்மீது தனிப் பற்றுதலும் நம்பிக்கையும் ஏற்பட்டது.

இதே சமயம்தான் தங்கம் எழுதியிருந்த கடிதமும் கிடைத்தது. முத்துவின் நிலைமையைப் பற்றிக் கேட்டிருந்தாள்; பணம் வேண்டும் என்று எழுதியிருந்தாள்; ‘எப்பொழுது வரப்போகிறீர்கள்?’ என்றும் கேட்டிருந்தாள்.

முத்து அவளுக்குப் பணம் அனுப்பி வைத்தான். ‘நான் இங்கு சுகமாக இருக்கிறேன். நான் சேர்க்கும் பணத்தை முதலாளியிடமே கொடுத்து வைத்திருக்கிறேன். பால் வியாபாரத்தில் இங்கே நல்ல லாபம் கிடைக்கிறது. வியாபார நுட்பங்கள் எல்லாம் நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டேன். இன்னும் சிறிது காலம் வேலை பார்த்துப் பணம் சேகரித்துக் கொண்டு, நானே இந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம் என்றிருக்கிறேன். நல்ல லாபம் கிடைக்க ஆரம்பித்ததும் நீ இங்கேயே வந்துவிடலாம்’ என்றும் பதில் கடிதம் எழுதினான்.

இரண்டு வருஷங்கள் சென்றன. முத்து சிந்துவிலிருந்து பசுக்களும் எருமைகளும் வரவழைத்தான். அதிர்ஷ்ட தேவதை அவன் பக்கத்தில் இருந்தாள். அவன் கை வைத்த காரியங்கள் எல்லாம் பொன் ஆயின. வெற்றி அவனுக்குக் கை கட்டிச் சேவை செய்தது. பால், வெண்ணெய், நெய் வியாபாரம் செய்யத் தொடங்கினான். உண்ண உணவின்றி ஒரு காலத்தில் தவித்த முத்து, பணம் சம்பாதித்துக் குவிக்கலானான்.

சில நாட்களுக்கெல்லாம் தங்கமும் சென்னை வந்து சேர்ந்தாள். முத்துவுக்குச் சோற்றுக் கவலை தீர்ந்தது. இருவரும் ஆனந்தமாக வாழ்க்கை நடத்தலாயினர். முத்து இரவு பகல் எந்நேரமும் தன் காரியத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்தான். ஆனால் தங்கத்துக்கு அந்த நகர வாழ்வு கட்டோடு பிடிக்கவில்லை. ‘பணத்துக்கு



ஒருவர்:—உன் கட்சிக்கு ஒரு வக்கீலை வைக்கிறதுதானே......

மற்றவர்:—வேண்டாங்க, நான் உண்மையைச் சொல்லிவிடுவதாக இருக்கேனுங்க.

தான். வயலில் வேலை செய்யும்பொழுது, 'பொன்னி!' என்று முத்து கூப்பிட்டால் போதும், அது எங்கிருந்தாலும் அவனிடம் ஓட்டமாய் ஓடி வந்துவிடும். வளர்ப்பு நாயைப் போல, பொன்னி முத்துவுடன் கூடவே சுற்றும். ஒன்பது மாதக் கன்றுக் குட்டியாக இருந்தபொழுதிலிருந்தே முத்து அதை அன்புடன் வளர்த்து வந்தான். ஆகவே, பொன்னி இல்லாமல் முத்துவுக்குப் பொழுது போவதே இல்லை.

தன் மனைவி தங்கத்தைத் தாய் வீட்டுக்கு அனுப்பி விட்டு முத்து சென்னைக்குப் போய் ஒரு வேலை தேடிக் கொண்டு, பட்டினிச் சாவிலிருந்து தப்ப வேண்டும் என்று திட்டம் போட்டான்.

ஆனால் ரயில் சார்ஜுக்குக் கையில் காசு இருந்தால்தானே? பொன்னியை விற்று விட்டால்......? பொன்னியை விற்கக் கூடாது என்று தங்கம் தடுத்தாள். ஆனால் முத்துவுக்கு வேறு ஏதாவது வழி புலப் பட்டால்தானே? பணம் எங்கிருந்து வரும்? எல்லாம் போனபின் மிஞ்சியிருந்தது பொன்னி மட்டுமேதான். சென்னைக்குப் போகும் செலவிற்கு, அதை விற்றுத்தான் ஆகவேண்டும். வேறு வழியே இல்லை.

கொடுமைகளைப் பொறுத்துப் பொறுத்து வாழ்க்கையை ஓட்டி வந்த முத்து கல்லாகி விட்டான். என்ன கஷ்டம் வந்தாலும் பொன்னியை விற்கக் கூடாது என்று திட சங்கற்பம் செய்து கொண்டிருந்த முத்து, சித்தத்தைக் கல்லினும் கடினமாக்கிக் கொண்டு, பொன்னியை விற்றுவிடுவது என்ற முடிவுக்கு வரவேண்டியதாயிற்று.

தங்கத்தின் தகப்பன் பக்கத்துக் கிராமமொன்றில் தலையாரி வேலை பார்த்து வந்தான். அவனுக்குச் சொந்தமாக ஐந்து ஏக்கரா நிலமும் இருந்தது. தங்கம் தன் கணவனைத் தன் பிறந்த வீட்டுக்கு வந்துவிடுமாறு அழைத்தாள். அவளுடைய தகப்பனும், தன் மருமகனைத் தன் வீட்டிலேயே வந்து தங்குமாறு வருந்தி அழைத்தான். ஆனால் மானமிழந்து, மாமனார் வீட்டுச் சோற்றைத் தின்ன முத்துவுக்குச் சிறிதும் மனம் இல்லை. ஆகவே அவன் தங்கத்தை மட்டும் அவள் தகப்பன் வீட்டுக்குக் கொண்டு போய் விட்டுவிட்டுத் திரும்பி வந்தான்.

அந்தக் கிராமத்தில் எல்லாருக்கும் நல்லவராக இருந்தவர் பெரிய பண்ணை முதலியார்தான். முத்துவும் அவருக்கு மிகவும் மரியாதை செலுத்தி வந்தான். முதலியாருக்குப் பசுக்கள் என்றால் ரொம்பவும் பிரியம். அதுவும் பொன்னியை வழியில் எங்காவது கண்டுவிட்டால் போதும், அதைக் கூப்பிட்டு முதுகைத் தட்டிக் கொடுத்து, அன்புடன் சொறிந்து கொடுப்பார். பொன்னி அவர் வீட்டுக்குப் போனால், நன்றாக இருக்கும் என்பதை முத்து நன்கு அறிந்திருந்தான். ஆகவே பொன்னியை ஓட்டிக் கொண்டு, அவர் வீட்டுக்குச் சென்றான்.

“என்ன அப்பா, முத்து! எங்கே வந்தாய்?” என்று முதலியார் விசாரித்தார்.


“என் சொத்துச் சுதந்திரம் எல்லாம் போய்விட்டது எசமானுக்குத் தெரிந்திருக்கும். ஆகவே, நான் பட்டணத்துக்குப் போகப் போகிறேன்” என்றான் முத்து.

“என்ன செய்வது அப்பா! எல்லாம் கால பலன். ஜமீந்தார் அநியாய ஆட்சி செலுத்துகிறார். அவருடைய கணக்குப் பிள்ளை தனக்குத் தோன்றியதைச் செய்கிறான். கேட்பார் கிடையாது. ஜமீந்தாருக்குத் தன்னைத் தவிர பிறர் கஷ்டத்தைப் பற்றிச் சிறிதாவது சிந்தனை இருந்தால் தானே?” என்று சொல்லிக் கொண்டே முதலியார் பொன்னியைப் பார்த்தார்.

“நம் தலையிலே எழுதிய எழுத்துப்படித் தானே நடக்கும். உங்கள் ஆசீர்வாதம் வேண்டும். ரயில் சார்ஜுக்குக் கையில் காசு கிடையாது. பொன்னியை ஓட்டி வந்திருக்கிறேன். இருபது ரூபாய் வேண்டும். பொன்னியை உங்கள் கொட்டிலில் கட்டிக் கொள்ளுங்கள். இன்றைக்கே நான் பட்டணம் போகலாம் என்றிருக்கிறேன்” என்று முத்து கண்ணீர் ததும்பச் சொன்னான்.

முதலியார் உள்ளே சென்று இருபது ரூபாயை எடுத்து வந்து கொடுத்தார். முத்து பணத்தை வாங்கிக் கொண்டே பொன்னியைப் பார்த்தான். பொன்னியும் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றது. என்ன உருக்கமான காட்சி! பொன்னியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு முத்து கண்ணீர் சொரிந்தான். பிறகு அதனிடம் பிரியா விடை பெற்றுச் சென்றான்.

அவன் எட்டுத் தப்படிகள் கூட எடுத்து வைத்திருக்க மாட்டான். 'அம்மா!...' என்று குரல் கேட்டது. பொன்னி கூப்பிடுகிறது என்பது முத்துவுக்குத் தெரியாதா? இருந்தாலும் உள்ளத்து உணர்ச்சியை அடக்கிக் கொண்டு, “பொன்னி உனக்கு அதிர்ஷ்டமிருந்தால் நான் பண


திரள் திரளான
ரசிகர்களை வசீகரிக்கும்
நேத்திரானந்தமான காட்சிகள்
செவிக்கினிய கானங்கள்......
ஆனந்தமயமான பொழுதுபோக்கு
மோகினி
ஜுபிடரின் சிறப்பான சித்திரம்
சென்ட்ரல்


For MEN of ACTION!
MGB
SHARK LIVER OIL
உழைப்பவர்களுக்கு!
A-1500
D-100
குழந்தைகள் : அரை முதல் ஒரு டீஸ்பூன்.
முதிர்ந்தவர்கள் : இரண்டு முதல் மூன்று டீஸ்பூன்கள்.
16, 10, 4
SHARK LIVER OIL
GOVERNMENT OIL FACTORY, Calicut..




எனது ஆல்பத்தில் ஒரு பக்கம்!

போட்டோ ஆல்பத்தின் ஒவ்வொரு பக்கமும் கவர்ச்சி கரமாக விளங்க என்ன வேண்டும்?

தேவைகள் மிகவும் சுலபமானவை. எளிதில் கிடைப்பவை.

முதலாவதாக ஒரு கேவார்ட்ஸ் ரோல் பிலிம் அல்லது பிளேட்.

இரண்டாவதாக ஒரு கேவார்ட்ஸ் பேப்பர் இவைகளே.



இந்தியாவில் மொத்த விற்பனையாளர்கள்:


அல்லைய்ட்
போட்டோகிராபிக்ஸ்
லிமிடெட்

பம்பாய் - கல்கத்தா - மதராஸ்


"பளிச்சென
விளங்கும்
ஆபிஸ் இது!
"ஆமாம். நான் வர்
ணம் வரவழைத்த
போது பிராண்டை
குறிப்பாக சொல்லி
யனுப்பினேன்
ஷாலிமார் பெயின்ட்
என்று அடிக்கடிப்போல்
சொல்லுங்கள்
46
YEARS OF
MANUFACTURING
EXPERIENCE



அவளுக்கு
வியாதிக்குப் பிறகு
அவனுக்கு
அவர்களுக்கு
வளரும் போது
விடோபெரின்
ஒரு
I.T.L.
தயாரிப்பு.
தயாரிப்பவர்கள்:
மைசூர் இண்டஸ்ட்ரியல் அண்டு டெஸ்டிங்
லாபரடேரி லிமிடெட், மல்லேஸ்வரம், பெங்களூர்
விநியோக ஏஜண்டுகள்: மெஸர்ஸ். பெஸ்ட் அண்டு கம்பெனி, லிமிடெட்
தபால் பெட்டி நெ. 63, மதராஸ்



கல்பகா
வாஷிங் சோப்
இருவித அனுகூலங்கள் உள்ளது
★
சுத்தமாக சலவை செய்கிறது
துணிகளை பாதுகாக்கிறது
KALPAKA SPECIAL BAR
KALPAKA OIL MILLS LTD. COCHIN
KALPAKA OIL MILLS LIMITED
EDACOCHI P.O.

14-11-48 முதல் 3-வது வாரம்



டிக்கெட் விபரம்:— 1-வகு ரூ. 3—12—0;
2-வகு ரூ. 2—10—0; 3-வகு ரூ. 1—10—0;
பெஞ்ச் 0—13—0: தரை 0—6—6

கல்கி
பொருளடக்கம்

மலர் 8	நவம்பர் 14	சர்வதாரி ஐப்பசி 29
இதழ் 16		

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

1946-ம் வருஷம் ஜுலை மாதம். இந்திய அரசியல் சரித்திரத்திலே குறிப்பிடத்தக்க மாதம். பிரிட்டனிலிருந்து வந்த மந்திரி சபைக் கோஷ்டி, டில்லியிலே இந்திய அரசியல் தலைவர்களுடன் தாங்கள் கொண்டு வந்திருந்த அரசியல் திட்டத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தது. 'தேசத்தின் தலைவிதி எப்படியாகப் போகிறதோ?' என்று எல்லோரும் புது டில்லியை ஆவலாக நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்த முக்கியமான சமயத்திலே ஒரு நாள் "பண்டித ஜவாஹர்லால் நேரு காஷ்மீரில் கைது செய்யப்பட்டார்!" என்ற செய்தி வந்ததைக் கேட்டுத் தேசமுழுவதும் திடுக்கிட்டுப் போய்விட்டது.



"சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி!" என்பது பழமொழி. காஷ்மீர சமஸ்தான சர்க்கார் சும்மா இருக்காமல், "வெளியார்கள் எங்களுடைய அனுமதி இல்லாமல் எங்கள் நாட்டுக்குள் நுழையக் கூடாது; எங்கள் அரசியலில் தலையிடவும் கூடாது" என்பதாக ஒரு தடை யுத்தரவைப் பிரயோகித்தார்கள். இந்தத் தடை யுத்தரவு சும்மா இருந்த பண்டித நேருவை வம்புக்கு இழுப்பதுபோல இருந்தது. ஜவாஹர்லால்ஜி தடை யுத்தரவைப் பொருட்படுத்தாமல் உடனே காஷ்மீருக்குப் போனார். அங்கே சிறைப் படுத்தப்பட்டார்.

டில்லியிலே தேசத்தின் எதிர்காலத்தை உருவாக்கக் கூடிய முக்கியமான திட்டங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும்போது நேருஜி காஷ்மீருக்குப் போகலாமா என்பதைப் பற்றி அப்போது நம்முடைய தலைவர்களிடையே கூடக் கொஞ்சம் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது.

ஆனால், நேருஜி அன்று காஷ்மீரம் சம்பந்தமாக எடுத்துக்கொண்ட நடவடிக்கை எவ்வளவு நியாயமானது, சரியானது என்பதைப் பின்னால் நிகழ்ந்த சம்பவங்கள் ரூபித்து விட்டன. நேருஜி காஷ்மீர விடுதலைப் போராட்ட இயக்கத்தில் அன்று எடுத்துக்கொண்ட சிரத்தையினால்தான் இன்று காஷ்மீரம் இந்திய யூனியனுடன் பூரண தேசநாடாக விளங்குகிறது; இல்லாவிட்டால், அது எப்போதோ பாகிஸ்தான் வலைக்குள் விழுந்திருக்கும்.

காஷ்மீர விடுதலைப் போராட்டத்தில் நேருஜிக்குப் பக்கபலமாக இருந்துவரும் ஷேக் அப்துல்லா ஒரு உத்தம தேசாபிமானி, பெருந்தியாகி, சிறந்த வீரர்.

இந்த நவம்பர் 13ஆ இந்தியா தேசமெங்கும் நேருஜியின் பிறந்த தினம் கொண்டாடப்படுகிறது. இந்தச் சுப தினத்தில் நாம் ஜவாஹர்லால் நேருவையும் அவருடைய தோழர் அப்துல்லாவையும் இந்த இரு வீரர்களுக்கும் தாய்நாடான காஷ்மீரையும் வாழ்த்துகிறோம்.

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 15

என்ன செய்தி?

கோவை விபத்து

கோயமுத்தூரில் சென்ற வாரம் நிகழ்ந்த ஒரு மோட்டார் விபத்து தமிழ் நாட்டின் தலைசிறந்த பிரமுகர் ஒருவரைப் பலி கொண்டுவிட்டது. ஸ்ரீ வி. சி. வெள்ளிங்கிரிக் கவுண்டர் அவர்கள் தேசபக்தி மிக்க செல்வர்; நெடுநாளையக் காங்கிரஸ் வாதி; தர்ம சிந்தனைக்குப் பெயர் போனவர். கோயமுத்தூர் ஜில்லாவில் ஸ்ரீ வி. சி. வெள்ளிங்கிரிக் கவுண்டரைப் போல் பொதுஜன அபிமானத்துக்குப் பாத்திரமான இன்னொரு பிரமுகர் இல்லையென்றே சொல்லலாம். அத்தகையவர் மோட்டார் யமனுக்குப் பலியாகி அகால மரணமடைய நேர்ந்தது அறிந்து பெருந் துயரமடைகிறோம். அவருடைய சகோதரர் ஸ்ரீ வி. சி. பழனிசாமிக் கவுண்டர் எம். எல். ஏ. அவர்களுக்கும் மற்றும் உறவினர் நண்பர்களுக்கும் கோவை வாசிகளுக்கும் நமது இதய பூர்வமான அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாய் திறவாததேன்?

திருவாங்கூரின் அரசியல் சக்கரம் அதி வேகமாகச் சுழல ஆரம்பித்திருக்கிறது! அந்தச் சமஸ்தானத்தில் தமிழ் நாடு காங்கிரஸைச் சேர்ந்தவர்கள், தங்களுக்கு நீதி கிடைக்காததால் சத்தியாக்ரகம் செய்வதென்று முடிவு செய்து தேதியும் குறிப்பிட்டு விட்டார்கள். மேற்படி காங்கிரஸ் காரியக்கமிட்டி தற்காலிகமாகக் கலைக்கப்பட்டு, காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ நத்தானியல் சத்தியாக்கிரகி கோஷ்டியின் முதல் தலைவராகவும் நியமிக்கப் பெற்றிருக்கிறார்.


மலபாரைச் சேர்ந்த மலையாளிகள் சென்னை மாகாணத்திலிருந்து பிய்த்துக் கொண்டு ஐக்கிய கேரள மாகாணத்தில் சேர விரும்பும்போது, திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள பத்து லட்சம் தமிழர்கள் தமிழ்நாட்டுடன் சேர விரும்புவதில் தவறு என்ன இருக்கிறது? ஐக்கிய கேரள மாகாணம் அமைய வேண்டும் என்று வாய் கிழியக் கத்துவோர், மேற்படி தமிழர்கள் தமிழ் நாட்டுடன் ஐக்கியமாகும் விஷயமாக வாய் திறவாமல் இருப்பதன் மர்மம் என்ன? தமிழர்களில் பெரும்பாலோரும் தங்களுடைய பிரதேசங்கள் சென்னை மாகாணத்துடன் சேருவதையே விரும்புகிறார்கள் என்பது சில மாதங்களுக்கு முன் நடந்த தேர்தலில் சிறிதும் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிந்து விட்டது. அப்படியிருந்தும் தமிழர்களின் கோரிக்கையெல்லாம் இது வரையில் செவிடன் காதில் சங்கு ஊதிய கதையாகவே முடிந்திருக்கிறது.

தவம் பலிக்குமாக!

அவர்களுடைய கோரிக்கை நிறைவேறுவதற்குற்ற முறைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை யென்பது ஒருபுறமிருக்க, அவர்கள் மீது படுமோசமான விதத்தில் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன. நியாயமாக மந்திரி சபையில் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸுக்கு ஸ்தானம் அளித்து, திருவாங்கூர் நிர்வாகத்தில் தமிழர்களுக்கும் பங்கு உண்டு என்பதை அநுஷ்டானத்தில் காட்டியிருந்தால் நிலைமை முற்றுவதற்கு இடம் ஏற்பட்டிராது. ஆனால் திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள லட்சக்கணக்கான தமிழர்களைத் திருவாங்கூர் சர்க்கார் அன்னியர்களாகக் கருதிவிட்டனர் என்பதே திருவாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் வாதிகளின் புகாராகும். எனவே இந் நிலைமையில் தங்களுடைய சுய நிர்ணய உரிமையை ஸ்தாபித்துக் கொள்ள அவர்களுக்குச் சத்தியாக்கிரகம் செய்வதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது?

இப்போது கூட நிலைமை மிதமிஞ்சிப் போய்விடவில்லை. திருவாங்கூர்த் தமிழர்களின் கோரிக்கைக்கு இணங்கி அவர்களுடன் ஏதாவது ஒரு சமரசம் செய்து கொள்வதன் மூலம் திருவாங்கூர் சமஸ்தானக் காங்கிரஸ் வின் தகராறைத் தவிர்த்துத் தன்னுடைய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம். இன்றேல், அவர்களுடைய சத்தியாக்கிரக இயக்கத்துக்குத் தமிழ் நாட்டில் ஏகோபித்த ஆதரவு கிடைத்து, அவர்களுடைய முயற்சி பலிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உஷார், யுத்தக் கப்பல்!



மாநிலம் புகழ மாண்பு உயர்ந்தது!

சுடச் சுடப் பாலின் நிறமோ ருசியோ குன்றுவதில்லை. சுடச் சுடச் சுருள் தங்கத்தின் மாற்று அதிகமாகுமே யன்றிக் குறைவதில்லை.

அதுபோலவே பிற்போக்காளர்களின் அவதூறும், பிறநாட்டுப் பத்திரிகைகளின் கண்டனமும், பாகிஸ்தானிகளின் பித்தலாட்டப் பிரசாரங்களும் இந்தியாவின் பெருமையை இம்மியளவும் குறைக்க முடியவில்லை. அதற்கு மாறாக பாரத நாட்டின் பெருமை முன்னிலும் பன்மடங்கு அதிகமாகி, பாரெங்கும் வியாபித்திருக்கிறது.

சென்ற ஒரு மாதமாக ஐரோப்பாவில் திக்விஜயம் செய்து இந்தியாவுக்குத் திரும்பி வந்துள்ள இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு அவ்வாறு கூறியிருப்பதைக் கேட்கும் எந்த இந்தியர்தான் பெருமிதமும் பேரானந்தமும் அடையாதிருக்க முடியும்?

"சுதந்திர இந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறியவும், வெளிநாடுகளில் இந்தியாவுக்குள்ள மதிப்பை அளவிடவுமே நான் சென்றேன். உலக நாடுகளிடையே இந்தியாவின் கௌரவம் மிகவும் அதிகமாகியிருப்பதைக் காண மகிழ்ச்சி அடைகிறேன். இத்தகைய ஆச்சரியகரமான மாறுதலுக்கு நமது பண்டைய பண்பாடுகளும், இந்தியாவின் சரித்திரச் சிறப்பும், மகாத்மா காந்தியின் மகிமையும் தான் காரணமாகும். மகாத்மா காந்தியின் பெருமையையும் சக்தியையும் உலகம் முழுதும் உணர்ந்திருக்கிறது. குறிப்பாக ஆசிய நாடுகள் எவ்வித பேதமுமின்றி இந்தியாவின் தலைமையையே நாடி நிற்கின்றன. எனவே அந்த கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது இந்திய ஜனங்களின் கடமையாகும்" என்று புதுடில்லிக்குத் திரும்பி வந்துள்ள ஜவாஹர்லால்ஜி குறிப்பிட்டிருக்கிறார்.

• • •

லண்டனில் நடந்த காமன்வெல்த் மகாநாட்டில் பண்டித ஜவாஹர்லால் நேருதான் பிரதான புருஷராக விளங்கினார் என்பது பிரிட்டிஷ் பத்திரிகைகளும் பிரமுகர்களும் ஒப்புக்கொண்ட உண்மையாகும்.

காமன்வெல்த் நாடுகளுக்குள்ள சம்பந்தமானது, பரஸ்பரம் நல்லெண்ணத்தையும் உண்மையான சிநேகபாவத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமே யல்லாது, பிரிட்டிஷ் என்ற வார்த்தையோ, அல்லது எட்டுச்சுரைக்காய் போன்ற ஒப்பந்தங்களோ அவைகளுக்குள் நல்லுறவை நிலைக்கச் செய்ய முடியாதென்பதை ஜவாஹர்லால்ஜி வற்புறுத்தியதால், பிரிட்டிஷ் காமன்வெல்த் என்பதிலிருந்து பிரிட்டிஷ் என்ற வார்த்தையையே எடுத்துவிட்டார்கள்! எனவே, இனி இந்தியா பரிபூரண சுதந்திரக் குடியரசு என்ற அந்தஸ்துக்கு அணுவளவும் குந்தகமின்றி பிரிட்டனுடன் உறவு வைத்துக் கொள்ளலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

• • •

மானிட வர்க்கத்தில் சிரேஷ்டமானவரும், மகாத்மா காந்தியின் பூரண அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமானவரும், முப்பது கோடி மக்களின் முதல் பிரதிநிதியுமான ஜவாஹர்லால்ஜியின் பொன்மொழிகளைக் கேட்க நாற்பத்தெட்டு தேசப் பிரதிநிதிகள் ஆர்வம் கொண்டதும் இந்தியாவுக்குப் பெருமையே.

பாரிஸில் கூடியுள்ள ஐக்கிய நாடுகள் சபையினர் பண்டித நேருவைப் பரிவுடன் அழைத்து, அவர் கூறிய அரும் பெரும் யோசனைகளைச் சிரத்தையுடன் கேட்டதன் மூலம் தங்களுக்கும் மேற்படி சபைக்கும் கௌரவத்தைத் தேடிக்கொண்டார்கள் என்று கூறுவது மிகையாகாது.

ஏனெனில் பண்டித ஜவாஹர்லால் நேருவைப் போன்றவர்கள் சர்வதேச மகாசபையும் கௌரவிக்கும் தகுதி வாய்ந்த மகான்களல்லவா?

அந்தச் சபையில் பேசிய ஜவாஹர்லால்ஜி, இந்தியா எவ்வாறு சுதந்திரம் பெற்றது என்பதை ஒரே வாக்கியத்தில் தெளிவாக்கியிருப்பது, மிகத் தெளிவான விஷயங்களிலும் எண்ணிக்கையற்ற சிக்கல்களைக் கற்பித்துக் குழப்பும் ஐ. நா. சபைக்கு ஒரு புதுமையாக இருக்கலாம்.

"ஒரு காலத்திலும் அநீதிக்குத் தலை வணங்குவதில்லை; அவ்வாறு தலை வணங்காமல் இருப்பதன் விளைவாக எத்தகைய இன்னல்கள் நேருவதாயினும், அவற்றைக் கண்டு அஞ்சுவதில்லை என உறுதி கொண்டோம்" என்று நமது மாபெரும் தலைவர் கூறி, இந்தியா சுதந்திரம் பெற்ற இரகசியத்தைச் சர்வதேச சபையினருக்குத் தெரிவித்தார்.

இன்று மேற்படி சபையும் அதே வழியைப் பின்பற்றுமாயின் உலகம் எத்தனையோ கஷ்ட நஷ்டங்களிலிருந்து விடுதலை பெறும் என்பதில் சந்தேகமென்ன?

வல்லரசாயினும் சிற்றரசாயினும் அது இழைக்கும் அநீதியைச் சகிப்பதில்லை என்று சர்வதேச சபை உறுதி கொள்ளுமாயின், பின்னர் உலகத்தில் அமைதி ஏற்பட அதைக் காட்டிலும் பலமான அஸ்திவாரம் வேறெதுவும் இருக்க முடியாது.

அதை விட்டுவிட்டு மேற்படி சபை சட்ட நுணுக்கத்தை ஆராய்ந்து கொண்டு எந்தப் பிரச்னையையும் மாதக் கணக்கில் இழுப்பதால்தான் எதுவும் உருப்படியாக முடியாததுடன், உலக அமைதிக்கு எந்த க்ஷணத்திலும் ஆபத்து நேரிடலாம் என்ற நிலைமையும் நீடித்து வருகிறது.

உலக நாடுகளின் துக்கத்தையும் துன்பத்தையும் தீர்ப்பதற்குற்ற அருமருந்து காந்திமகானின் புனிதக்கொள்கைகளே என்பதையும் பண்டித நேரு முதன்முறையாக சர்வதேச மேடையில் பிரகடனம் செய்திருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கைகளை இந்தியா பூரணமாக ஒப்புக் கொள்கிறது. அந்தக் கொள்கைகளை நிறைவேற்றவும் இந்தியா உறுதி கொண்டிருக்கிறது. அது போலவே, மகாத்மா காந்தியின் உபதேசங்களை உலக நாடுகள் பின் பற்றினாலன்றி, தற்போது மேற்படி சபையில் நடந்து வரும் எல்லையற்ற வாதங்களும் பிரதி வாதங்களும் உலக அமைதியை நிலைநிறுத்திவிட முடியாது.

இந்தியாவின் பிரதம மந்திரி கூறியுள்ள மற்றொரு முக்கிய விஷயத்தையும் உலக மகாசபை உன்னி நடக்குமாயின் மானிட வர்க்கத்தைப் பீடித்து வரும் பல்வேறு இன்னல்களும் பறந்தோடி விடும் என்று நிச்சயமாகக் கூறலாம்.

அதாவது உலக நாடுகளிடயே நிலவும் துவேஷமும் பலாத்காரமும் வாழையடி வாழையாகத் துவேஷத்தையும் பலாத்காரத்தையுமே வளர்க்கின்றன என்றும், அத்தகைய துவேஷமும் பலாத்காரமும் ஒழிந்தாலன்றி உலகில் அமைதியோ, மானிட வர்க்கத்துக்கு க்ஷேமமோ ஒரு காலத்திலும் ஏற்பட முடியாதென்றும் ஜவாஹர்லால்ஜி சுட்டிக் காட்டியிருக்கிறார்.

* * *

"ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி" என்பதைப் போல் "உலகத்துக்கு இளைத்தது ஆசியா" என்றிருந்தது!

சென்ற இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக உலகம் முழுதும் அமெரிக்காவும் ஐரோப்பாவும் ஆதிக்கம் செலுத்தி வந்ததால், ஆசிய நாடுகள் இருக்குமிடம் தெரியாமல் இருந்து வந்தன.

உலகம் என்றால் அமெரிக்காவும் ஐரோப்பாவும் மாத்திரமே என்று ராஜதந்திரிகள் நினைத்தனர்; அத்தகையோர் ஆசியா ஒன்றிருக்கிறது என்பதையே மறந்து விட்டார்கள்!

இனியும் அவ்வாறு மறந்திருக்க முடியாது என்று பாரிசில் நிகழ்த்திய பிரசங்கத்தில் நமது அருமைத் தலைவர் எச்சரித்திருக்கிறார்.

ஐரோப்பிய நாடுகள் ஆசியாவை,—உலகத்தின் பாதி ஜனத் தொகைக்கு மேற்பட்ட ஆசிய நாடுகளை அலட்சியம் செய்து வந்ததேன்?

ஆசிய நாடுகள் பெரும்பாலும் அடிமைப்பட்டு ஐரோப்பிய நாடுகளின் காலனிகளாக இருந்து வந்ததே அத்தகைய நிலைமைக்குக் காரணம்.

ஆனால், இனி ஆசிய நாடுகளை எவரும் அசட்டை செய்ய முடியாது.

அந்த நாடுகள் பலவற்றிலும் இருந்துவந்த ஐரோப்பிய ஆதிக்கம் ஒழிந்து விட்டது. மீதியுள்ள நாடுகளிலும் மேற்படி ஆதிக்கம் ஒழியும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

ஆசிய நாடுகள் சர்வதேச அரங்கத்திலும் விசேஷ ஸ்தானங்களைப் பெற்றிருக்கின்றன.

எனவே, ஜவாஹர்லால்ஜி குறிப்பிட்டிருப்பது போல் ஆசியாவில் நிகழும் எந்தச் சம்பவமும் ஐரோப்பாவைப் பாதிக்காமல் இருக்க முடியாது; அது போலவே ஐரோப்பாவில் நிகழும் எதுவும் ஆசியாவைப் பாதிக்காதிருக்க முடியாது.

உலக அமைதியை ஸ்தாபிக்கப் போவதாக இடைவிடாது தடபுடல்

செய்துவரும் ஐரோப்பிய ராஜ தந்திரிகள் மேற்படி உண்மையைக் கவனிக்கவில்லை என்பதை, சர்வதேச மேடைகளில் அவர்கள் நிகழ்த்திவரும் பிரசங்கங்கள் நிரூபிக்கின்றன.

* * *

மகா பயங்கரமான இரண்டு யுத்தங்கள் உலகத்தை ஆட்டிவைத்து விட்டன.

ஆனால் அந்த யுத்தங்களின் படிப்பினையையோ அல்லது சரித்திரத்தின் படிப்பினையையோ வல்லரசுகள் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

ஏகாதிபத்திய ஆட்சியும் காலனி ஆட்சியும் இன்னும் பல நாடுகளில் ஒழிந்தபாடில்லை. இன்னும்கூட ஆசியாவிலுள்ள பல நாடுகள் அடிமைப்பட்டுக் கிடக்கின்றன.

இந்தோனேஷ்யாவில் இன்னும் டச்சு ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடி முன்னிருந்தது போல் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

இந்தியாவில் பாக்கியுள்ள சுண்டைக் காய் சாம்ராஜ்யத்தைக் கைவிட மனமின்றி பிரெஞ்சு சர்க்கார் மிகவும் மோசமான பித்தலாட்ட வேலைகளைச் செய்து வருகின்றனர்.

ஜெர்மனியிலும் ஜப்பானிலும் வல்லரசுகளின் வாத்தியார் வேலை முடிய இன்னும் எத்தனை வருஷங்களாகுமோ, தெரியவில்லை.

மேற்படி பிரச்னைகளைத் தீர்க்க வழி ஏதுவும் செய்யாமல், வல்லரசுகளும் சர்வதேச சபையும் "உலக அமைதி" என்ற மந்திரத்தை இடைவிடாது ஜபித்து வருகின்றன!

இந்நிலைமையில், பண்டித ஜவாஹர்லால் நேருவின் தெளிவான உபதேச மொழிகள் அவர்களுடைய செவிகளில் ஏறுமா? மகா யுத்தங்களைத் தூண்டும் நெருப்புப் பொறிகளான துவேஷத்தையும் பலாத்காரத்தையும் ஒழித்து இந்தியாவின் உதாரணத்தைப் பின்பற்ற வல்லரசுகள் முன்வருமா? அதற்கான கைங்கரியத்தில் ஐக்கிய நாடுகள் சபை அந்தரங்க சுத்தியுடன் ஈடுபடுமா?

கரடி வருகிறது!



சீனப் பொதுவுடைமைக்காரர்கள் மஞ்சூரியாவைக் கைப்பற்றிக் கொண்டதோடு நிற்கவில்லை. இப்போது வட சீனாவிலும் படையெடுத்திருக்கிறார்கள்.

பாட்டைக் கேளுங்க!

★

1. இலங்கையிலே நாங்கள்படும் பாட்டைக்கேளுங்க!
இங்கிலீசுக் காரன்சொன்ன வாக்கைப்பாருங்க!
விலங்கைப்போல நடத்தமாட்டோம் என்றுசொன்னாங்க!
வித்தியாசம் காட்டமாட்டோம் உறுதியின்னாங்க!

2. தங்கவீடு, சட்டிப்பானை கும்பாத்தாரேன்னு
தரகுவர்க்குத் தந்திரமாய்க் கூட்டிவந்தாங்க!
எங்களைப்போல் நினைப்போமின்னு எடுத்துரைத்தாங்க
இலவசமாய் ரயில்செலவும் எடுத்தளித்தாங்க!

3. கங்குல்வரை கஷ்டப்பட்டுக் காட்டைவெட்டினோம்!
கரடிபுலி களைவிரட்டித் தோட்டமாக்கினோம்!
அங்கமெல்லாம் நோவஅரும் பாடுகள்பட்டோம்!
அய்யாமார்கள் சொன்னபடி ஆடியேவந்தோம்!

4. சிங்கம்வாழும் காடுஇப்போ தங்கமாச்சுது!—இனி
சிங்களவர் ராச்சியமாம்! உரிமைபோச்சுது!
எங்கள்நாடு சொந்தமாச்சு என்றுசொல்லுறார்!
'ஏதுரிமை?' என்றுகப்பல் ஏறச்சொல்லுறார்!

5. தங்களுக்கு வேலைசெய்யத் தெரியுமென்கிறார்
தனத்தையெல்லாம் வாரிக்கொண்டு போறோமென்கிறார்!
சங்கையோடே வாழ்வதற்குச் சம்பளமில்லை — பெண்கள்
தங்கநகை காதில்போட ஆசையுமில்லை!

6. பொங்கித்தின்னும் சட்டிகூடச் சொந்தமில்லையே!
போகச்சொன்னால் கையிலொரு காசுமில்லையே!
சங்கரனே! எங்களைப்பார்! தயைபுரிவீரா?
தமிழர்கூட்டம் வாழவழி காட்டிடுவீரா?

—கொஸ்லாந்தை சி. சுயராஜ்



மாந்தருக்குள் ஒரு தெய்வம்

53. சாந்த மூர்த்தி

கல்கி

காந்திஜி தரையில் விழுந்து மூர்ச்சையடைந்த பிறகும் மீர் ஆலமும் அவருடைய நண்பர்களும் சும்மா விடவில்லை. மேலும் அவரைத் தாக்கி அடித்தார்கள். எஸ்ஸப் மியானும் தம்பி நாயுடுவும் காந்திஜிமீது அடி விழாமல் தடுக்க முயன்றபோது, அவர்களும் அடிக்கும் உதைக்கும் பாத்திரமானார்கள். இந்தக் காட்சியைச் சாலையிலே போய்க் கொண்டிருந்த சில ஐரோப்பியர்கள் பார்த்துவிட்டு விரைந்து வந்தார்கள். அவர்கள் சமீபித்ததும் மீர் ஆலமும் அவருடைய தோழர்களும் தப்பி ஓடப் பார்த்தார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சி பலிக்கவில்லை. அவர்களை ஐரோப்பியர்கள் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டார்கள். இன்னும் சிலர் காந்திஜியைத் தூக்கி எடுத்து மிஸ்டர் கிப்ஸனுடைய ஆபீஸ் அறைக்குக் கொண்டு போனார்கள். மூர்ச்சை தெளிவதற்குரிய சிகிச்சையும் செய்யப்பட்டது. காந்திஜி கண் விழித்தபோது, ரெவரண்ட் டோக் என்னும் நண்பர் தம்மைக் குனிந்து பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

"இப்போது உடம்பு எப்படியிருக்கிறது?" என்று டோக் கேட்டார்.

"உடம்பு சரியாய்த்தானிருக்கிறது. பல்லிலும் விலாவிலும் மட்டும் வலியிருக்கிறது. மீர் ஆலம் எங்கே?" என்று காந்திமகான் கேட்டார்.

"அவனும் அவனுடைய சகாக்களும் கைது செய்யப்பட்டனர்" என்றார் டோக் பாதிரியார்.

"அது எப்படி? கூடவே கூடாது! அவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும்!" என்றார் மகாத்மா காந்தி.

"அதைப்பற்றி இப்போது என்ன? பிறகு பார்த்துக் கொள்ளலாம். உங்களுடைய உதடு, கன்னம் எல்லாம் காயமாகி இரத்த விளாறாக இருக்கிறது. முதலிலே சிகிச்சையைப் பற்றிக் கவனிக்க வேண்டும். போலீஸார் உங்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகத் தயாராயிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய ஜாகைக்குத் தாங்கள் வருவது நலம். வந்தால் நானும் என் மனைவியும் எங்களால் இயன்ற சௌகரியங்கள் செய்து கொடுக்கிறோம்."

"போலீஸாருக்கு வந்தனம். ஆனால் நான் ஆஸ்பத்திரிக்குப் போக விரும்பவில்லை. உங்களுடைய வீட்டுக்கே வருகிறேன். என்னை அழைத்துப் போங்கள்."

இவ்வாறு காந்திஜி கூறியதற்குக் காரணம் டோக் பாதிரியாரிடம் மகாத்மாவுக்கு இருந்த அன்பும் நம்பிக்கையுந்தான்.

* * *

ரெவரண்ட் டோக் ஸ்காட்லாந்து தேசத்திலிருந்து தென்னாப்பிரிக்காவுக்கு வந்தவர். காந்திஜியைப் பற்றியும் அவருடைய அஹிம்சா இயக்கத்தைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தவர்.

மேற்படி சம்பவம் நடந்ததற்கு ஆறு மாதத்துக்கு முன்னால் டோக் பாதிரியார் காந்திஜியை நேரில் சந்தித்து அறிமுகம் செய்து கொள்வதற்காகச் சென்றார். "ரெவரண்டு டோக்" என்ற பெயரைப் பார்த்ததும், அவர் தம்மைக் கிறிஸ்துவ மதத்தில் சேர்க்க வந்திருப்பதாக மகாத்மா நினைத்தார். ஆயினும் அவரைச் சந்திக்க இசைந்தார். டோக் பாதிரியாருடன் சில நிமிஷம் சம்பாஷிப்பதற்குள்ளேயே அவர் எப்பேர்ப்பட்ட உத்தம

புருஷர் என்பதைக் காந்திஜி தெரிந்து கொண்டார். "உங்களுடைய போராட்டத்தில் என்னை உங்கள் நண்பனாகக் கருதுங்கள். என்னால் முடிந்த அளவு தங்களுக்கு உதவி செய்வது என் கடமை" என்றார் டோக்.

ரெவரண்டு டோக் கிறிஸ்துவ மதத்தில் பாப்டிஸ்ட் மிஷன் என்ற உட்பிரிவைச் சேர்ந்தவர். அந்த உட்பிரிவைச் சேர்ந்த வெள்ளைக்காரக் கிறிஸ்துவர்களுக்கு மத போதனை செய்து அதற்காக அவர்களிடமிருந்து வருமானம் பெற்று வந்தார். சத்தியாக்கிரஹ இயக்கத்துக்கு ஆதரவு தருவதின் காரணமாக அவருடைய ஜீவனோபாயத்துக்கு ஆபத்து நேரிடலாம் என்று காந்திஜி கருதினார். அதாவது வெள்ளைக்காரக் கிறிஸ்துவர்கள், "உங்களுடைய போதனை எங்களுக்குத் தேவையில்லை" என்று சொல்லி விடலாம் அல்லவா? இது பற்றி மகாத்மா பிரஸ்தாபித்த போது, டோக் பாதிரியார் "அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஏசுநாதருடைய உண்மையான தர்மத்தைப் பின்பற்றி நான் நடக்கிறேன். வெள்ளைக்காரக் கிறிஸ்துவர்கள் என்னைக் கைவிட்டால் விடட்டும். என்னைக் காப்பாற்றுவதற்குக் கடவுள் இருக்கிறார்!" என்றார்.

இதுமுதல் காந்தி மகானுக்கும் டோக் பாதிரியாருக்கும் அத்தியந்த சிநேகம் ஏற்பட்டு வளர்ந்திருந்தது. ஆகையினாலேதான், படுகாயப்பட்டிருந்த காந்திஜி ஆஸ்பத்திரிக்குப் போவதற்குப் பதிலாக டோக் பாதிரியாரின் வீட்டுக்குப் போக இசைந்தார்.

• • •

டோக் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும் டாக்டருக்குச் சொல்லியனுப்பினார்கள். இதற்கிடையில், ஆசியாக்காரர்களைப் பதிவு செய்யும் உத்தியோகஸ்தர் மிஸ்டர் சாம்னி காந்திஜியைப் பார்க்க வந்தார். மிஸ்டர் சாம்னியின் காரியாலயத்துக்குக் கொஞ்ச தூரத்திலேதான் மகாத்மா அடிபட்டு விழுந்த சம்பவம் நடந்ததல்லவா? ஆகையால், காந்திஜியின் தேக நிலைமையைப் பற்றி நேரில் தெரிந்துகொண்டு போவதற்காகவும் அநுதாபம் தெரிவிப்பதற்காகவும் மிஸ்டர் சாம்னி வந்தார்.

அவரைப் பார்த்ததும் காந்திஜி கூறியதாவது:—"தங்களுடைய காரியாலயத்துக்கு நான் வந்து கொண்டிருந்தேன். விரல் அடையாளம் கொடுத்துப் பதிவுப் பத்திரம் பெறுவதற்காகவே வந்தேன். வழியில் இப்படி நடந்துவிட்டது. அதனால் பாதகமில்லை. அவசியமான பத்திரங்களை உடனே எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் இங்கேயே பெயர்ப் பதிவு பெற்றுக் கொள்ளக் கோருகிறேன். எனக்கு முன்னால் வேறு எந்த இந்தியரையும் பதிவு செய்யக்கூடாது. முதலில் பதிவு செய்வது நானாக இருக்க வேண்டும்."

இவ்விதம் மகாத்மா கூறியதைக் கேட்ட மிஸ்டர் சாம்னி "அதற்கென்ன அவசரம் வந்தது? இப்போது டாக்டர் வரப் போகிறார். அவர் உங்களைப் பார்த்துச் சிகிச்சை செய்யட்டும். நிம்மதியாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ரிஜிஸ்டரின் தலைப்பிலே இடம் விட்டு விட்டு, மற்றவர்களைப் பதிவு செய்கிறேன். உடம்பு நன்றாய்க் குணமான பிறகு பதிவு செய்து கொள்ளலாம்" என்றார்.

"இல்லை இல்லை; முதன் முதலில் நான் பதிவுசெய்து கொள்வதாகச் சபதம் செய்திருக்கிறேன். கடவுள் என்னை உயிரோடு வைத்திருப்பதால் அந்தச் சபதத்தை நிறைவேற்றியே தீரவேண்டும். தயவுசெய்து இவ்விடமே கொண்டு வாருங்கள்!"

அதற்குமேல் மறுத்துச் சொல்ல இயலாமல் ரிஜிஸ்டரையும் பத்திரங்களையும் எடுத்து வர மிஸ்டர் சாம்னி சென்றார்.

அடுத்தபடியாக, சர்க்காரின் அட்டர்னி ஜெனரலுக்கு மகாத்மா பின்வரும் தந்தியை அனுப்பினார்:—"மீர் ஆலத்தின் பேரிலும் அவருடைய தோழர்கள் பேரிலும் நான் குற்றம் சாட்டவில்லை. அவர்கள்மேல் வழக்குத் தொடரப்படுவதையும் விரும்பவில்லை. தயவுசெய்து எனக்காக அவர்களை உடனே விடுதலை செய்துவிட வேண்டும்!"

போலீஸார் ஏற்கெனவே மீர் ஆலம் கோஷ்டியைக் கைது செய்திருந்தார்கள். காந்தி மகாத்மாவின் மேற்படி தந்தியின் பேரில், அட்டர்னி ஜெனரல் உத்தரவுப்படி, அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால் ஜோகானிஸ்பர்க் ஐரோப்பியர்கள் அதை விரும்பவில்லை. அவர்களில் சிலர் அட்டர்னி ஜெனரலுக்கு ஒரு கடுமையான கடிதம் எழுதினார்கள்.

"குற்றவாளிகளைத் தண்டிப்பது பற்றிக் காந்திஜியின் கொள்கைகள் ஒரு மாதிரியாக இருக்கலாம். அந்தக் கொள்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியாது.

காந்தியை அடித்த சம்பவம் அவருடைய சொந்த இடத்தில் நடக்கவில்லை; பொதுச் சாலையில் நடந்தது. ஆகையால் அது பொதுஜன விரோதமான குற்றம். சம்பவத்தை நேரில் பார்த்த பல ஐரோப்பியர்கள் சாட்சி சொல்லத் தயாராயிருக்கிறார்கள். ஆகையால் குற்றவாளிகளைக் கட்டாயம் கைது செய்து விசாரணை நடத்தி தண்டிக்க வேண்டும்.''

பிரபல ஐரோப்பியர்கள் கையொப்பமிட்டிருந்த இந்தக் கடிதத்தின் பேரில் அட்டர்னி—ஜெனரல் மறுபடியும் மீர் ஆலம் கோஷ்டியைக் கைது செய்ய உத்தரவிட்டார். விசாரணை நடந்து குற்றவாளிகளுக்கு மூன்று மாதம் கடுங்காவல் தண்டனையும் கிடைத்தது. ஆனால் காந்திஜியின் கொள்கையை மதித்து, அவரைச் சாட்சி சொல்வதற்குக் கோர்ட்டுக்கு அழைக்காமல் விட்டு விட்டார்கள்.

• • •

டாக்டர் வந்து காந்திஜியைப் பார்த்தார். கன்னத்திலும் மேல் உதட்டிலும் பட்டிருந்த பெருங் காயங்களுக்குத் தையல் போட்டுக் கட்டினார். விலாக்களுக்கு மருந்து தடவினார். தையலை எடுக்கும் வரையில் பேசக்கூடாது என்றும், திரவபதார்த்தந்தான் சாப்பிடலாம் என்றும் கண்டிப்பாகச் சொன்னார். ஒரு வாரம் படுக்கையை விட்டு நகரக் கூடாதென்றும் அப்புறம் இரண்டு மாதம் வேலை எதுவும் செய்யக் கூடாது என்றும் கூறினார்.

ஆகவே, காந்திஜி கட்டாயமாக மௌன விரதம் கைக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் முக்கியமான காரியம் ஒன்று பாக்கியிருந்தது. நல்ல வேளையாகக் கையிலே எழுதும் சக்தி இருந்தது. காகிதம் பேனா தருவித்து, இந்திய சமூகத்துக்குப் பின் வரும் வேண்டுகோளை எழுதினார்:—

"டோக் பாதிரியாரின் வீட்டில் பத்திரமாயிருக்கிறேன். டோக்கும் அவருடைய மனைவியும் என்னை நன்றாய்ப் பாதுகாத்து வருகிறார்கள். என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

என்னை அடித்தவர்கள் தாங்கள் செய்த காரியத்தின் பலாபலனை உணர்ந்து செய்யவில்லை. நான் தவறு செய்வதாக நினைத்தார்கள். தங்களுக்குத் தெரிந்த ஒரே முறையைக் கையாண்டு என்னைத் திருத்தப் பார்த்தார்கள். ஆகையால் அவர்கள் பேரில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

முஸ்லிம்கள் என்னை அடித்து விட்டார்கள் என்ற காரணத்தினால் ஹிந்துக்கள் முஸ்லிம்கள் பேரில் கோபங் கொண்டால், அது பெருந்தவறாகும். நான் இன்று சிந்திய இரத்தம் இரண்டு சமூகங்களையும் சாசுவதமாக ஒன்று பிணைப்பதற்குச் சாதனமாயிருக்க வேண்டும். இதுவே என்னுடைய மனமார்ந்த பிரார்த்தனை. ஆண்டவன் அருள் புரியட்டும்.

நடந்துவிட்ட சம்பவத்தின் காரணமாக இந்திய சமூகத்துக்கு நான் கூறிய யோசனையில் மாறுதல் எதுவும் இல்லை. ஆசியாக்காரர்கள் தாங்களே வலியச் சென்று பதிவு செய்து சர்டிபிகேட் வாங்கிக்கொள்ள வேண்டும். விரல் அடையாளம் கொடுப்பதற்கு மனச்சாட்சி இடம் கொடாதவர்கள் அவ்விதம் சொல்லி சர்க்காரிடமிருந்து விலக்குப் பெறலாம். மற்றவர்கள் எல்லாரும் இந்திய சமூகத்தின் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.

சத்தியாக்கிரஹ தத்துவத்தை நன்கு உணர்ந்தவர்கள் கடவுளைத் தவிர வேறு யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. இந்தியர்கள் 'யாராவது ஏதாவது சொல்வார்களோ?' என்ற கோழைப் பயம் காரணமாகத் தங்கள் கடமையைச் செய்யத் தவறக் கூடாது. நாமாகப் பதிவு செய்து கொண்டால், கறுப்புச் சட்டம் ரத்தாகும் என்று சர்க்கார் வாக்குக் கொடுத்திருக்கின்றனர். ராஜி ஒப்பந்தத்தில் நமக்குரிய பகுதியை நிறைவேற்றி வைப்பது நம்முடைய கடமையாகும்.''

இவ்விதம் இந்திய சமூகத்துக்குக் காந்திஜி விக்ஞாபனம் எழுதி முடித்ததற்கும் மிஸ்டர் சாம்னி ரிஜிஸ்டர்களையும் பத்திரங்களையும் கொண்டு வருவதற்கும் சரியாயிருந்தது. காந்திஜி கஷ்டப்பட்டு வலியைப் பொறுத்துக்கொண்டு கையெழுத்துப் போட்டு விரல் அடையாளமும் கொடுத்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த மிஸ்டர் சாம்னியின் கண்களில் கண்ணீர் ததும்பியது.

இவ்வளவு காரியங்களும் அரைமணி நேரத்துக்குள் முடிந்து விட்டது. ஆயினும் காந்திஜி இம்மாதிரி தம்மைச் சிரமப்படுத்திக் கொள்வதைப் பார்த்து மிஸ்டர் டோக்கும் அவருடைய மனைவியும் வருத்தமடைந்தார்கள். காந்திஜி குணமடைவதற்கு இடையூறாகலாம் என்றும் பயந்தார்கள்.

பிறகு, டோக் பாதிரியார் அந்த அறையிலிருந்தவர்களை யெல்லாம் சமிக்ஞை மூலம் அப்புறப் படுத்தினார். இனிமேல் ஒன்றும் எழுதவும் கூடாது, உடம்பை அசைக்கவும் கூடாது என்று காந்திஜியை வற்புறுத்தினார். அதன்பேரில் காந்திஜி இன்னும் ஒரு விஷயம் எழுதிக் காட்டினார். "அருள் ஒளியே! வழி காட்டுவாய்!" என்று தொடங்கும் கிறிஸ்துவப் பிரார்த்தனை கீதத்தை யாராவது பாடினால் தமது மனம் நிம்மதி அடையும் என்று எழுதினார். டோக் தம்பதிகளின் குமாரி, ஆலிவ் என்னும் சிறுமி, அந்த அறையின் வாசற்படியில் நின்று மேற்படி கீதத்தை இனிய குரலில் பாடினாள். அதைக் கேட்டுக் காந்திஜி மன அமைதி பெற்றார்.

• • •

டோக் குடும்பத்தார் அச்சமயம் காந்திஜிக்குச் செய்த சேவையின் பெருமையைச் சொல்லி முடியாது. குடும்பத்தைச் சேர்ந்த யாராவது ஒருவர் எப்போதும் காந்திஜியின் பக்கத்தில் இருந்து பணிவிடை செய்தார்கள். அந்த வீட்டில் காந்திஜி படுத்திருந்தவரையில் வீடு ஏதோ சத்திரம் சாவடி என்று சொல்லும்படி ஆயிற்று. காந்திஜியின் நிலைமை பற்றி விசாரிப்பதற்காக ஓயாமல் இந்தியர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவரை மற்றவர்கள் பார்க்கலாம் என்று டாக்டர் அனுமதித்த பிறகு கூட்டம் இன்னும் அதிகமாயிற்று. ஜவுளி மூட்டை தூக்கிச் சென்று தெருவிலே விற்கும் இந்தியர்கள் உள்படப் பெரிய முதலாளிகள் வரையில் எல்லாரும் வந்துகொண்டிருந்தார்கள். டோக் தம்பதிகள் அனைவரையும் அன்புடன் முகமன் கூறி வரவேற்று, டிராயிங் அறையில் உட்காரச் செய்து, சமயம் அறிந்து மகாத்மாவைப் பார்க்க அனுமதித்து வந்தார்கள். காந்திஜி இது விஷயமாக எழுதியிருக்கிறார்:—

"நான் அவருடைய வீட்டில் இருந்த வரையில் என்னைக் கவனிப்பதும் என்னைப் பார்க்க வந்தவர்களைக் கவனிப்பதுமே அவருக்கு வேலையாயிருந்தது. இராத்திரி நேரத்தில் கூட இரண்டு மூன்று தடவை டோக் என் அறைக்கு மெள்ள நடந்து வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போவார். அவருடைய வீட்டில் வசித்த காலமெல்லாம் அது என்னுடைய வீடு என்ற எண்ணமே என் மனதில் குடி கொண்டிருந்தது. இன்னொருவர் வீட்டில் இருக்கிறோம் என்ற எண்ணமே தோன்றவில்லை. என்னுடைய சொந்த உற்றார் உறவினர் யாரும் டோக் தம்பதிகளைக் காட்டிலும் அதிகப் பரிவுடன் என்னைப் பராமரித்திருக்க முடியாது."

காந்திஜிக்கும் டோக் பாதிரியாருக்கும் ஏற்பட்ட சிநேகம் பிற்காலத்தில் அணுவளவும் மாறவில்லை. மறுபடியும் காந்திஜி சத்தியாக்கிரஹப் போர் ஆரம்பிக்க நேர்ந்த போது, டோக் பாதிரியின் நேசர்களான ஐரோப்பியக் கிறிஸ்துவர்கள் டோக் மீது கோபம் கொண்டார்கள். அதனால் டோக் கஷ்டப்படவும் நேர்ந்தது. ஆயினும் அவர் என்னளவும் மனம் சலிக்கவில்லை.

சத்தியாக்கிரஹப் போர் தீவிர நிலையை அடைந்திருந்த சமயத்தில், டோக் பாதிரியார் ரோடேஷியாவில் காலமானார். அவருடைய மரணம், அவரை எதிர்த்தவர்களின் மனதைக்கூட மாற்றிவிட்டது. பாப்டிஸ்ட் தேவாலயத்தில் வெள்ளைக்காரக் கிறிஸ்துவர்கள் அனுதாபக் கூட்டம் நடத்தினார்கள். காந்திஜி, கச்சாலியா சாஹிப் முதலிய இந்தியர்களை மேற்படி அனுதாபக் கூட்டத்துக்கு அழைத்துப் பேசும்படியும் செய்தார்கள்.

காந்தி மகாத்மாவின் அஹிம்சையின் மகிமைக்கு டோக் குடும்பம் சிறந்த உதாரணம் ஆகும். வெறும் பலாத்கார இயக்கமாயிருந்தால், எதிரிகளின் கூட்டத்திலிருந்து இத்தகைய அருமையான ரத்தினம் போன்ற சிநேகிதர்கள் கிடைக்கக் கூடுமா?

சென்னையில் டெல்லி

பகீரதன்

அடடா! பெரிய யுத்தக் கப்பல், நமது சொந்தக் கப்பல் கம்பீரமாக நிமிர்ந்து நின்று கொண்டிருந்தது. வெள்ளை வெளேரென்று தெற்கு நோக்கி நின்று கொண்டிருந்த 'எச். எம். ஐ. எஸ். டில்லி'யின் முன் பக்கத்தில் நமது தாயின் மணிக்கொடி வெற்றிக் கொடியாக நிமிர்ந்து பறந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் என்னையறியாமலே என் உடல் பூராவும் ஒரு புது உணர்ச்சி அலை அலையாகப் பாய்ந்து ஓடியது.

கப்பலின் பின் கோடி வழியாக ஏறிப் பார்ப்பதற்கு வசதி செய்திருந்தார்கள். அந்த வாசற்புறத்திலே இரண்டு கடற்படை சோல்ஜர்கள் தோளிலே துப்பாக்கியைச் சாத்திக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக ராணுவ நடை போட்டுக் கொண்டிருந்தனர். அந்தக் காட்சி ஒரு யுத்தக் கப்பலின் சூழ்நிலையை அங்கே உண்டாக்கி யிருந்தது.

அங்கிருந்த உத்தியோகஸ்தர்களிடம் எங்கள் பாஸைக் காட்டினோம். உடனே ஒருவர் எங்களைக் கப்பலில் கொண்டு போய் விட்டார்.

பத்திரிகைக்காரர்களில் ஒரு சிறுபகுதியை 'வழி காட்டி' ஒருவர் அழைத்துச் சென்று கப்பல் பூராவையும் காட்டி ஒவ்வொன்றைப் பற்றியும் விவரமாக எடுத்துச் சொன்னார். நாங்கள் கேட்ட பல கேள்விகளுக்கும் மரியாதையுடனும் உற்சாகத்துடனும் பதில் சொன்னார்.

"இந்தக் கப்பல் எவ்வளவு நீளம்? ஹார்பரில் பாதியை அடைத்துக் கொண்டு நிற்கிறதே?" என்று ஒரு நண்பர் கேட்டார்.

"இது 550 அடி நீளமும் 60 அடி அகலமும் 7,500 டன் நிறையும் உள்ளது" என்று விறுவிறுவென்று பதில் சொல்லி விட்டு, "இதோ பார்த்தீர்களா?" என்று கையைக் காண்பித்தார். இரண்டு பீரங்கிகள் அங்கே நீட்டிக் கொண்டிருந்தன. அதனுடைய வாயில் நமது கப்பல் என்ற அடையாளத்துக்காக ஒரு யானை போட்டிருந்தது. "இந்த பீரங்கிகள்தான் ஆறு அங்குல அகலமுள்ள பெரிய பீரங்கிகள். இதுபோல ஏழு பீரங்கிகள் இருக்கின்றன. இவற்றை எந்தத் திக்கை நோக்கி வேண்டுமானாலும் திருப்பிக் கொள்ளலாம். இதில் 112 பவுண்டு நிறையுள்ள குண்டையும் 32 பவுண்டு நிறையுள்ள துப்பாக்கி மருந்தையும் போட்டு இந்த மின்சார 'ஸ்விட்ச்'சைத் தட்டிவிட்டால் 'டுமீர்' என்ற பயங்கர சத்தத்துடன் பத்து மைல்களுக்கு அப்பால் உள்ள எதிரியின் கப்பலில் விழுந்து அதை நாசமாக்கி விடும்" என்று கூறியபோது ஒரு எதிரி கப்பலை நாசப்படுத்தியது போலவே இருந்தது.

அங்கிருந்து பக்கத்திலிருந்த ஏணி வழியாக மேலே சென்றோம். அந்த ஏணியிலே வழிகாட்டி தரையில் நடப்பது போல் விடுவிடு வென்று ஏறினார். நான் ஒவ்வொரு படியையும் எண்ணி ஏறுவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. மேலே கப்பலின் பக்கவாட்டில் உள்ள பீரங்கிகளைக் காண்பித்து, "இது நாலு அங்குல அகலமுள்ள பீரங்கி. இதுபோல இந்தக் கப்பலைச் சுற்றி எட்டு பீரங்கிகள் இருக்கின்றன. இது கப்பலையும் சுடும்; ஆகாய விமானங்களையும் சுடும்" என்று சொல்லிவிட்டு வேறு பகுதிக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு வரிசை வரிசையாக வைத்திருந்த பொருள்களைப் பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தது. "நீங்கள் யுத்த சமயங்களில் அடிக்கடி கேள்விப்பட்டிருப்பீர்கள் 'டார்பிடோ' என்று. அதுதான் இது. இது நமது விரோதிகளின் நீர்மூழ்கிக் கப்பலைச் சுட்டு நாசமாக்கும் கருவி. இது போன்ற எட்டு டார்பிடோக்கள் இந்தக் கப்பலில் இருக்கின்றன" என்று அவர் கூறி முடிப்பதற்குள், "ஏன் ஸார்! தண்ணீருக்குள் வரும் நீர்மூழ்கிக் கப்பலை நீங்கள் எப்படிக் கண்டு பிடிப்பீர்கள்?" என்று எங்களில் ஒருவர் கேட்டு வைத்தார்.

உடனே வேறொரு இடத்திலிருந்த ஒரு இயந்திரத்தைக் காண்பித்து, "இதில் பார்த்தால் நீர்மூழ்கிக் கப்பல்கள் எந்தத் திக்கில் எவ்வளவு ஆழத்தில் எத்தனை மைல் வேகத்தில் வருகின்றன என்பதைக் கண்டு பிடித்துவிடலாம்" என்று சொல்லிவிட்டு, எங்களை இன்னும் மேலே அழைத்துக் கொண்டுபோய் இன்னொரு இயந்திரத்தைக் காண்பித்தார். அது எதிரியின் விமானம் எந்தத் திக்கில் இருந்து எப்படி வருகிறது

என்பதைக் காண்பித்துவிடுமாம். அப்படி எதிரி விமானம் என்று தெரிந்துவிட்டால், அந்த விமானங்களைச் சுடுவதற்கென்று பிரத்தியேகமாக வைத்திருக்கும் பீரங்கிகளையும் எங்களுக்குக் காட்டினார். பன்னிரண்டு விமானம் சுடும் பீரங்கிகள் 'டில்லி'க் கப்பலைச் சுற்றிலும் இருக்கின்றன.

“இரவில் எதிரி விமானங்கள் வந்தால் என்ன செய்வீர்கள்?” என்று ஒரு அதிர்வேட்டுப் போட்டார் ஒருவர்.

அதற்கும் வழிகாட்டி சளைக்கவில்லை; வேறொரு இடத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் அங்குள்ள ஒரு இயந்திரத்தைக் காண்பித்தார். அது 'ஆட்டோமாட்டிக்' இயந்திரமாம். அதைவேலைசெய்ய விட்டுவிட்டால் எதிரி விமானம் இரவில் எங்கிருந்து வந்தாலும் தானே கண்டு பிடித்துச் சுட்டு வீழ்த்திவிடுமாம். அதைப் பற்றி அவர் சொல்லும்போது ஆயிரத்து ஓர் இரவு கதைகளில் வரும் அற்புதங்களைப் போலவே இருந்தது எனக்கு!

கப்பலின் இன்னொரு பகுதிக்கு அழைத்துச் சென்று அந்த வழிகாட்டி சொன்னார்: “நீங்கள் எல்லாம் பத்திரிகைக்காரர்கள். சண்டைக் காலங்களில் சமுத்திரத்தில் கடற்கண்ணிகளைப் போட்டு அதன் மூலம் கப்பலுக்குச் சேதம் விளைவிப்பார்கள் என்று படித்திருப்பீர்கள். அது போன்ற கடற்கண்ணிகளைக் கண்டுபிடித்துவிடும் 'பாரவான்' என்னும் கருவி. இதுபோல இரண்டு பாரவான்கள் இருக்கின்றன.”

அந்தப் பாரவான்கள் முதலை மாதிரி வாயை வைத்துக்கொண்டு, 'நம்மைத் தூக்கிக் கடலில் போட மாட்டார்களா, ஏதாவது கடற்கண்ணிகள் அகப்படாதா?' என்று பார்த்துக் கொண்டே இருந்தன.

இதற்குள் எங்களோடு வந்த ஒரு அவசரக்காரர் கப்பல் என்ஜினைப் பார்க்கவேண்டும் என்று துடியாய்த் துடித்தார். விசேஷ அனுமதியின்பேரில் கப்பல் என்ஜினைப் பார்க்கச் சென்றோம். இப்படியும் அப்படியுமாக வளைந்து வளைந்து சென்ற இரும்பு ஏணிகள் மூலம் அந்த வழிகாட்டி எங்களையெல்லாம் ஏதோ ஒரு சுரங்கத்துக்குள் அழைத்துக் கொண்டு செல்வது போல் அதல பாதாளத்துக்குச் சென்றார். அங்கு 'குளுகுளு' வென்று காற்று வந்து கொண்டிருந்தது. சமுத்திரக்கரை ஓரமாக வந்து விட்டோமோ என்று நினைத்து, “இப்பொழுது எங்கிருக்கிறோம்!” என்று கேட்டேன்.

அவர் 'கடகட' வென்று சிரித்துவிட்டு “சமுத்திர ஜல மட்டத்துக்கு முப்பதடிக்குக் கீழே இருக்கிறோம்!” என்று சொன்னார். சுற்றிப் பார்த்தேன்; என்னுடன் வந்தவர்கள் எல்லோரும் இருந்தனர். ஆனால் காற்று எங்கிருந்து வருகிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. “தண்ணீருக்குள்ளே இருக்கிறோம் என்கிறீர்களே! மின்சார விசிறிகூடக் கிடையாது, காற்று இப்படிக் குளுகுளுவென்று வீசுகிறதே!” என்றேன்.

அவர் அங்கிருந்த ஒரு குழாயைக் காண்பித்து, “இதுதான் காற்றுக் குழாய்! இது வழியாகத்தான் இப்பொழுது காற்று அடிக்கிறது. கப்பலின் மூலை முடுக்கு எல்லா இடங்களிலும் இந்தக் குழாய் சென்று நல்ல காற்றை ஊதிக்கொண்டே இருக்கும். அதற்காக ஒரு மிஷின் எப்பொழுதும் வேலை செய்துகொண்டே இருக்கிறது” என்று அவர் சொன்னபோது, யாரோ விசில் அடித்ததுபோல் சத்தம் கேட்டது. அடுத்தாற்போல் அசரீரி சொல்லுகிறது என்பார்களே, அதுபோல யாரோ பேசுவது கேட்டது. உடனே அங்கு வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் திடுதிடென்று மேலே ஓடினார். எங்களுக்கெல்லாம் ஒன்றுமே புரியவில்லை. சினிமாக்களிலே ராக்ஷஸர்கள் குகையிலே காரியம் நடப்பது போலிருந்தது. இருந்தாலும் தைரியமாக, “அது என்ன சத்தம்? ஏன் இங்கிருந்து ஒருவர் ஓடினார்?” என்று கேட்டோம்.

அங்குள்ள ஒலிபெருக்கியைக் காண்பித்து, “இதிலிருந்துதான் சத்தம் வந்தது. இதுபோன்ற ஒலிபெருக்கிகள் இந்தக் கப்பல் முழுவதும் நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. இந்தக் கப்பலில் சுமார் 750 பேர் மூலை முடுக்குகளிலெல்லாம் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு இதன் மூலம் உத்தரவுகள் வந்துகொண்டே இருக்கும். அதன்படி வேலை செய்யவேண்டும். இங்கிருந்து போனாரே, அவரைக் கேப்டன் இப்பொழுது கூப்பிட்டார்” என்று சொன்னார்.

“750 பேர் என்கிறீர்களே, எல்லாரும் எந்த ஊர்க்காரர்கள்?” என்று கேட்டோம்.


“இமய மலையிலிருந்து கன்னியாகுமரி வரையில் உள்ள இந்துஸ்தானத்தின் எல்லா மாகாணத்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால் பாதிக்கு மேலே தென்னிந்தியர்கள் தான்!” என்றார் அவர்.

“அதிருக்கட்டும், இந்த இடத்தில் உங்களுக்கு ஏதாவது வேண்டுமானால் என்ன செய்வீர்கள்?” என்று கேட்டேன்.

அங்கிருந்த டெலிபோனைக் காண்பித்து, "இதுமாதிரி கப்பலில் எல்லா இடத்திலும் டெலிபோன் இருக்கின்றன. அதன் மூலம் நாம் யாருடன் வேண்டுமானாலும் பேசிக் கொள்ளலாம்" என்று சொல்லி, கப்பல் என்ஜினைப் பற்றிச் சொன்னார்:

"இந்தக் கப்பல் ரயில் என்ஜின்போல நீராவி வேகத்தில்தான் ஓடுகிறது. இதில் ஆறு பாய்லர்களும் நாலு என்ஜின்களும் இருக்கின்றன. இதிலுள்ள என்ஜின் 72,000 குதிரை வேகம் கொண்டவை. மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் இந்த 7,500 டன் நிறையுள்ள கப்பலை இழுத்துக் கொண்டு போகும். சாதாரண காலங்களில் இரண்டு என்ஜின்களும் இரண்டு பாய்லர்களும்தான் வேலை செய்யும். சண்டை சமயத்தில் மூன்று பாய்லர்களும் மூன்று என்ஜின்களும் வேலை செய்யும். எதிரி கப்பல்கள் எங்கேயாவது ஒளிந்திருந்தால் அதைத் தேடும்போதோ, அல்லது நாம் எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளும் போதோ ஆறு பாய்லர்களும் நாலு என்ஜின்களும் வேலை செய்யும். அப்படி நாம் தப்பித்துக் கொள்ளும்போது நமது கப்பல் எதிரியின் கண்ணுக்குத் தெரியாமல் புகையால் மூடிக்கொண்டு வருவதற்குச் சாதனமும் இருக்கிறது. அதோடு, இதன் அடிப்பாகத்தை ஆறு அறைகளாகத் தடுத்து, ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு பாய்லர் வைத்திருக்கிறது. ஆகையால் எதிரியின் கப்பல் இதன் அடிப்பாகத்தைத் தாக்கி உடைத்து விட்டால் ஆபத்து ஒன்றும் ஏற்பட்டுவிடாது. ஒரு பாய்லர் உள்ள அறை மட்டும்தான் உடைந்து போகும். அதைச் சீக்கிரம் ரிப்பேர் செய்து விடலாம்" என்று கூறி முடித்தார்.

"என் ஸார், இந்த பாய்லர்களுக்குச் சமுத்திர ஜலத்தையே உபயோகித்துக் கொள்வீர்களா?" என்று ஒரு குறுக்குக் கேள்வியைப் போட்டபோது, "சமுத்திர ஜலத்தையே 'டிஸ்டில்டு வாட்டராக'—அதாவது, சுத்தமான தண்ணீராகச் செய்வதற்கு இரு இயந்திரங்கள் வேலை செய்து கொண்டே இருக்கின்றன. அப்படிச் சுத்தப்படுத்தும் தண்ணீர் சரியாக இருக்கிறதா என்று ஐந்து நிமிஷத்துக்கு ஒரு தரம் ஒரு என்ஜினியர் பார்த்துக் கொண்டே இருப்பார்" என்று சொல்லிவிட்டு, "இங்கிருந்துதான் கப்பலை ஓட்ட வேண்டும் என்றாலும் மேல் தளத்தில் இருக்கும் தலைமை மாலுமியின் உத்தரவுப்படிதான் நடக்க வேண்டும்"



என்று சொல்லி, எங்களை மேலே அழைத்துக் கொண்டு சென்றார்.

ஒருவர், "என் ஸார், திடீரென்று மின்சார விளக்குகள் நின்று போய்விட்டால் என்ன செய்வீர்கள்? இந்தச் சுரங்கத்திலும் இரும்பு ஏணிகளிலும் ஏறவே முடியாதே!" என்று கேட்டார்.

"அப்படி ஒன்றும் நேர்ந்துவிடாது. இரண்டு மூன்று டைனமோக்கள் இருக்கின்றன. எல்லாமே மோசம் செய்து விட்டால் இந்த லைட்டுகள் உபயோகப்படும்" என்று பக்கத்தில் அரிக்கன் லைட் மாதிரி இருந்த ஒன்றை எடுத்துக் காண்பித்தார். எனக்கு ஒரே சிரிப்பாக இருந்தது. "கடைசியில் உங்கள் கதியும் இந்த அரிக்கன் விளக்கில்தானா இருக்கிறது!" என்றேன். உடனே அவர் அந்த விளக்கின் அடியில் கை வைத்தார். 'பளிச்' என்று பிரகாசமாக எரிந்தது. "இதுபோன்ற அவசர விளக்குகள் கப்பலில் இல்லாத இடமே கிடையாது!" என்றார்.

இப்படிப் பேசிக் கொண்டே வரும்போது, வழியில் கப்பலில் உள்ள வொர்க் ஷாப், ஆஸ்பத்திரி, 'காண்டீன்' முதலியவற்றையெல்லாம் காண்பித்துக் கொண்டே வந்தார். ஒரு இடத்துக்கு அருகில் வரும்பொழுது

சுகமான சமையல் வாசனை வந்தது. "சமையலறைப் பக்கம் வருகிறோமோ?" என்று கேட்டேன். "ஆமாம்" என்று சொல்லி அந்த அறையைத் திறந்து காண்பித்தார். நம்பவே முடியவில்லை; தமிழ்ப் படங்களிலே வேதாளம் வேலை செய்வது போல ஒரு இயந்திரம் உருளைக் கிழங்கை வெட்டிக் கொண்டிருந்தது. மற்றொரு இயந்திரம் முட்டைக்கோஸை நறுக்கிக் கொண்டிருந்தது. இப்படிப் பல இயந்திரங்களுடன் சில மனிதர்களும் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தனர். "800 பேருக்குச் சமையல் ஆக வேண்டாமா?" என்று சொல்லிக் கொண்டே, என்னை அங்கிருந்து அழைத்துக் கொண்டு போய் ஒரு விஸ்தாரமான அறையில் உட்கார வைத்தார்.

அந்த அறையில் நமது இந்தியாவின் தந்தையும் மாந்தருக்குள் ஒரு தெய்வமுமான காந்திமகான் படமும், பிரதம மந்திரி ஜவாஹர்லால் படமும் மாட்டப்பட்டிருந்தன. இரண்டு பீரோக்கள் நிறையப் புஸ்தகங்கள். பல மொழிகளில் வெளியாகும் தினப் பத்திரிகை, வாரப் பத்திரிகைகள் எல்லாம் இருந்தன. ரேடியோ ஒன்று பாடிக் கொண்டிருந்தது. ஒரு இடத்தில் கிராமபோனில் நங்கள். தங்களுக்கு வேண்டிய ரிகார்டுகளைப் போட்டு ஆனந்தமாகப் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தனர். இன்னொரு மூலையில் 'கேரம்' ஆடிக் கொண்டிருந்தனர்.

கடைசியாக எங்களைக் கப்பலின் ஒரு தளத்திற்கு அந்த வழிகாட்டி அழைத்துச் சென்று, "பம்பாய்த் துறைமுகத்தை 'எச்.எம். ஐ.எஸ். டில்லி' வந்தடைந்ததும், நமது பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு இங்கு நின்றுகொண்டுதான் பேசினார். நாங்கள் இருநூறு பேர் பிரதம மந்திரிக்கு இங்குதான் ராணுவ மரியாதை செய்தோம்" என்று கூறிவிட்டு, எங்களுக்கு ஒரு ராணுவ செல்யூட் செய்தார்.

இவ்வளவு நேரம் இந்தக் கப்பலைச் சுற்றிக் காட்டிச் சிரமம் பாராது விளக்கிச் சொன்னதற்காக எங்களுடைய வந்தனங்களைத் தெரிவித்தோம். அதற்கு அவர் "நீங்கள் எங்களுக்கு வந்தனமே சொல்ல வேண்டியதில்லை. நாங்கள் சென்ற ஊர்களிலே சென்னை வாசிகளாகிய நீங்கள்தான் எங்களை உற்சாகத்துடன் வரவேற்றீர்கள். சங்கீதம், நடனம், விருந்து, ஆயிரக்கணக்கான மக்களின் வரவேற்பு—இவையெல்லாம் வேறு எங்குமே எங்களுக்குக் கிடைக்கவில்லை" என்று சொல்லி "ஜே ஹிந்த்!" என்றார். நாங்களும் பதிலுக்கு "ஜே ஹிந்த்!" என்று சொல்லிவிட்டுத் திரும்பினோம்.



இருபத்தாறாம் அத்தியாயம்

பேச்சு யுத்தம்

வீட்டு வாசலிலே நின்ற ராகவனுக்கும் வீட்டுக்குள்ளே வந்த ராகவனுக்கும் மிக்க வித்தியாசம் காணப்பட்டது. ராட்சத சுபாவம் எங்கேயோ போய்விட்டது. முகத்திலும் பேச்சிலும் இனிமை ததும்பியது. இந்த மாறுதலைப் பார்த்துச் சீதா சந்தோஷம் அடைந்தாள். கோபமோ தாபமோ நம்மிடம் எது இருந்தாலும் மற்றவர்களிடம் காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்ளுகிறாரே என்று சந்தோஷப்பட்டாள்.

முதலில் தாமாவையும் பாமாவையும் வரவேற்று ராகவன் குதூகலமாகப் பேசினான். பிறகு தாரிணியைப் பார்த்து, "ஏது ஏது? உங்களைப் பார்ப்பது மூன்றாம் பிறை பார்ப்பது போலாகி விட்டதே!" என்றான்.

"பூரண சந்திரன் சிலசமயம் பிறையாக மாறுவது இயல்புதானே!" என்றாள் தாரிணி.

"பூரண சந்திரன் எப்போதும் பூரண சந்திரன்தான்! நம்முடைய பார்வைக்குச் சில சமயம் பூரண சந்திரனாகத் தோன்றுகிறது. சில சமயம் பிறையாகத் தோன்றுகிறது!" என்றான் ராகவன்.

தாரிணி பதில் சொல்வதற்குள்ளே "ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்; சூரியனோடு சேர்ந்தால் சந்திரன் அடியோடு மறைந்து தான் போகும்!" என்று சொல்லி விட்டுச் சூரியாவைப் பார்த்தான். "நீ எப்போது அப்பா, வந்தாய்?" என்று கேட்டான்.

சூரியனையும் சந்திரனையும் பற்றி ராகவன் சிலேடையாகப் பேசியது கேட்டுச் சூரியாவினுடைய முகம் சிவந்து போயிருந்தது. தன்னுடைய மனக் குழப்பத்தைக் காட்டிக் கொள்ளாமல், "வந்து அரை மணி நேரம் ஆயிற்று, மாப்பிள்ளை ஸார்! நானும் தாரிணி தேவியும் சேர்ந்துதான் வந்தோம்!" என்றான்.

தாமாவும் பாமாவும் இப்போது பேச்சில் குறுக்கிட்டு, ராகவன் அன்றிரவு சாலையில் கிடந்த உடலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றது பற்றி அவனைப் பாராட்டிப் பேசினார்கள். அதற்கு ராகவன் "இது என்ன பிரமாத விஷயம்? யாரும் செய்ய வேண்டிய கடமைதானே? வேறு விஷயம் பேசுங்கள்!" என்றான்.

தாமா, "உங்களுக்குப் பிரமாதமில்லை. எங்களுக்கெல்லாம் பிரமாதமாகத்தான் தோன்றுகிறது. பாவம்! அன்றைக்கு உங்கள் மனைவி ரொம்பக் கலவரமடைந்துபோயிருக்க வேண்டுமே!" என்றாள்.

"ஆமாம்; அன்றைக்கு அப்புறம் இவளைத் தனியாக வீட்டில் விட்டுப் போகவே முடியவில்லை. அதற்காகத் தான் என் தாயாருக்கு உடனே கடிதம் எழுதி வரவழைத்தேன்."

"உங்கள் தாயார் ரொம்ப 'ஸ்வீட் லேடி' என்று கேள்வி. சீதா சொல்லியிருக்கிறாள். எங்களுக்கு அவரை நீங்கள் அறிமுகம் செய்து வைக்கப் போவதில்லையா?"

"இப்போது தானே இரண்டு நாள் ரயில் பிரயாணம் செய்து விட்டு வந்திருக்கிறாள்? என் தாயார் கொஞ்சம் கர்நாடகம்; வழியில் சாப்பிடவே இல்லையாம். ஸ்நானபானம் எல்லாம் செய்து முடிப்பதற்கு ஒரு மணி நேரம் ஆகும்" என்றான் ராகவன்.

"எப்படியும் உங்கள் தாயாரைப் பார்த்து விட்டுத்தான் நாங்கள் போகப் போகிறோம்" என்று தாமாவும் பாமாவும் ஒரே மூச்சில் சொன்னார்கள்.

• • •

"அம்மா! உங்களைப் பார்த்து விட்டுத் தான் அவர்கள் போகப் போகிறார்களாம்!" என்று உள்ளே போய்ச் சொன்னாள் சீதா.

"ஏண்டி, பெண்ணே! இந்தப் பிசாசுகள் எல்லாம் இங்கே எதற்காக வருகின்றன? நீயும் இதையெல்லாம் பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்கிறாயே? இப்படித் துப்புக் கெட்டவளை நான் பார்த்ததேயில்லை!" என்றாள் காமாட்சி அம்மாள்.

"அம்மா! இவர்கள் பார்ப்பதற்கு ஒரு மாதிரி இருக்கிறார்களே தவிர, உண்மையில் ரொம்ப நல்லவர்கள்!" என்றாள் சீதா.

"நல்லவர்களாவது, பொல்லாதவர்களாவது? இவர்களையெல்லாம் வீட்டுக்குள்ளேயே வர விடக்கூடாது! நான் ரொம்பக் களைப்பாயிருக்கிறேன், இன்னொரு நாளைக்குப் பார்க்கிறேன் என்று சொல்லி விடு!" என்றாள் காமாட்சி அம்மாள்.

• • •

சீதா டிராயிங் அறைக்குத் திரும்பிச் சென்று, "அம்மாவுக்குத் தலைவலியாயிருக்கிறதாம். இன்னொரு நாளைக்கு எல்லாரையும் சாவகாசமாகப் பார்த்துத் தெரிந்து கொள்ளுவதாகச் சொல்லுகிறாள்" என்றாள்.

இந்தச் சமயத்தில் டெலிபோன் மணி அடித்தது. ராகவன் போய் ரிஸீவரை எடுத்துப் பேசினான்.

"என்ன? ஓஹோ! மதோங்கர் விஷயமா? குற்றவாளியைப் பிடித்து விட்டார்களா?-யார் அது? அடேடே! —என்ன துணிச்சல்?—ரொம்ப சரி!— எனக்குத் தெரிந்ததைச் சாட்சி சொல்ல நான் எப்போதும் தயார்!— இல்லை, எங்கும் போகவில்லை!— ஊர்லேதான் இருப்பேன்!—ரைட் ஓ!"

தாரிணியும் சீதாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். இருவருடைய கண்களிலும் கவலைக் குறியும் பயமும் தென்பட்டன.

ராகவன் டெலிபோன் பேசிவிட்டுத் திரும்பி வந்ததும், "என்ன? என்ன?" என்று ஒரே மூச்சாக எல்லாரும் கேட்டார்கள்.

"மதோங்கரைக் கொன்ற குற்றவாளியைப் போலீஸார் கண்டு பிடித்து விட்டார்களாம். மதோங்கரிடம் வெகு காலமாக வேலை பார்த்துவந்த வேலைக்காரன்தான் கொலை செய்தானாம். அவனே குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டானாம்......" என்று ராகவன் சொல்லி வந்தபோது, சீதா குறுக்கிட்டு, "அது எப்படி இருக்க முடியும்?" என்றாள்.

அப்போது "சீதா!" என்று தாரிணியின் குரல் கேட்டது. சீதா அவள் முகத்தைப் பார்த்தாள். தாரிணியின் கண்களில் தோன்றிய எச்சரிக்கையை உணர்ந்து கொண்டாள்.

"சீதா! நீ எதற்காக இதில் தலையிட்டு அபிப்பிராயம் சொல்கிறாய்? பெண் பிள்ளைகளாகிய நமக்குப் போலீஸ் விஷயமெல்லாம் என்ன தெரியும்?" என்றாள் தாரிணி.

"சீதாவுக்குத் தனக்குத் தெரியாத விஷயத்தில் அபிப்பிராயம் சொல்வதில் ஒரு திருப்தி" என்றான் ராகவன்.

சீதா மெதுவாகச் சுதாகரித்துக் கொண்டு, "ஆமாம்; எனக்கென்ன தெரியும் அதைப்பற்றி? ஏதோ வார்த்தைக்குச் சொன்னேன். சாட்சி, சம்மன் என்று ஏதோ சொன்னீர்களே? அது என்ன?" என்றாள்.

"சாட்சி என்றால், சாட்சி என்று ...ர்த்தம்!" என்றான் ராகவன்.

"நீங்கள் எதற்குச் சாட்சி சொல்ல ...வண்டும் என்று கேட்டேன்."

"தெருவிலே கிடந்த உடலைக் கண்டு ...டித்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு ...பானதற்குச் சாட்சி......"

"அப்படியானால் சூரியாவும் சாட்சி ...சால்ல வேண்டும் அல்லவா?"

"ஆமாம்; அவனுக்கும் கோர்ட்டில் ...ஜராகும்படி சம்மன் வரும்."

"அதுதான் கேட்டேன். சூரியா ...ாகூருக்குப் பயணம்வைத்திருக்கிறான். ...பாக வேண்டாம் என்று நீங்கள் ...சால்லுங்கள்!" என்றாள் சீதா.

"ஓகோ! லாகூருக்குப் பயணமா? ...வண்டாம் என்று நாம் எதற்காகச் ...சால்ல வேண்டும்? சொன்னாலும் ...வன் கேட்கப் போவதில்லை. மேலும் ...கேஸ் விசாரணை நாளைக்கே ஆரம் ...த்து விடாது! ரொம்ப நாள் பிடிக் ...ம்!" என்றான் ராகவன்.

உடனே புது ஞாபகம் ஏதோ வந்த ...னாக, "சூரியா மட்டும் போகப் ...பாகிறானா? வேறு யாராவது துணை ...ண்டா?" என்று கேட்டான்.

"தாரிணி அக்காவும் கூடப் போகி ...ளாம்!" என்றாள் சீதா.

"தாரிணி! இது உண்மையா? ...ாகூரில் இப்போது என்ன விசே ...ம்?" என்று ராகவன் கவலை நிறைந்த ...ரலில் கேட்டான்.

"அதைப் பற்றித்தான் இவ்வளவு ...ரம் நாங்கள் விவாதம் செய்து ...காண்டிருந்தோம். நீங்களே ...ளுங்கள், மிஸ்டர் ராகவன்! இந் ...யா சுதந்திரம் அடைய வேண்டு ...ம்! சுதந்திரம் அடைந்ததும் ...தேச ராஜாக்கள், ராணிகள், ...வான்கள், திவான்களுடைய ...ண்கள் எல்லாரையும் ஒரேயடி ...கத் துவம்ஸம் செய்துவிட வேண்டு ...ம்! பெரிய உத்தியோகங்களை ...ல்லாம் தொலைத்துவிட வேண்டு ...ம்......அதற்காக இவர்கள் லாகூர் ...ாகிறார்களாம்! எப்படியிருக்கிறது ...தை?" என்று சொல்லி விட்டுத் ...மா இடிஇடி என்று சிரித்தான். ...மாவும்கூடச் சேர்ந்து சிரித்தாள்.

"சரி; ஆனால் லாகூருக்கு எதற்காகப் போக வேண்டும்? இந்தியாவின் சுதந்திரத்தை லாகூரிலே யாராவது ஒளித்து வைத்திருக்கிறார்களா?" என்று ராகவன் கேட்டதும் மறுபடியும் ஒரு பெருஞ் சிரிப்பு எழுந்தது.

"விஷயம் இன்னதென்று தெரிந்து கொள்ளாமலே 'ஓஹோ!' என்று சிரிக்கிறீர்கள். அதில் என்ன பிரயோஜனம்? ஓட்டைச் சிரிப்புச் சிரித்துவிட்டால் எல்லாம் சரியாய்ப் போய்விட்டதா!" என்றான் சூரியா.

"எல்லாரும் கொஞ்சம் பேசாமலிருங்கள். சிரிக்கவே கூடாது. கப் சிப்!......மிஸ்டர் சூரியா விஷயம் இன்னதென்று விளக்கமாகச் சொல்லட்டும். அப்படியும் நம்முடைய மூளையில் விஷயம் ஏறாவிட்டால் குதுப் மினார் உச்சியில் ஏறித் தலைகீழாக விழுந்து உயிரை விட்டு விடுவோம்!" என்றாள் பாமா.

"இனிமேல் யாராவது சிரித்தால் சூரியா கையில் அகப்பட்டதை எடுத்து எறிந்து மண்டையை உடைத்து விடுவார்! ஜாக்கிரதை!" என்றாள் தாமா.

தாஜ்மகாலில் அவன் பொம்மையை எடுத்தெறிந்து தாரிணியைக் காயப்படுத்தியது பற்றியே இவ்விதம் தாமா குறிப்பிட்டாள்.

சூரியா அதனால் தனக்கு ஏற்பட்ட அவமான உணர்ச்சியை அடக்கிக் கொண்டு மேலே சொன்னான்:— "ஆமாம்; சில சமயம் அப்படிக் கோபம் வரத்தான் செய்கிறது. ஜனங்கள் இப்படிக் கொஞ்சங்கூடச் சிந்தனா சக்தி இல்லாமலிருக்கிறார்களே என்று. இங்கிலீஷ் கல்வி முறை அப்படி நம்முடைய மூளையைக் கெடுத்திருக்கிறது. இரண்டாவது ஹென்ரி விவாகம் செய்து கொண்ட தேதியும், ஏழாவது ஹென்ரி விவாக ரத்து செய்து கொண்ட தேதியும், முதலாவது சார்லஸ் பட்டமிழந்த தேதியும், மூன்றாவது ஜார்ஜுக்குப் பைத்தியம் பிடித்த தேதியும், — இப்படிப்பட்ட விஷயங்களையே மூளையில் போட்டுத் திணித்து விட்டால், சிந்தனை செய்யும் சக்தி நமக்கு எப்படி இருக்கும்? 'லாகூரில் யாராவது சுதந்திரத்தை ஒளித்து வைத்திருக்கிறார்களா?' என்று ராக



வன் கேட்டார். எங்கேயும் யாரும் சுதந்திரத்தை ஒளித்து வைக்கவில்லை. அது நம் கண் முன்னே ஜோதி மயமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. நாம் தான் பார்க்கும் சக்தி யில்லாத குருடர்களாகப் போய்விட்டோம். இந்தியாவின் சுதந்திரத்துக்கு இப்போது முக்கிய தடையா யிருப்பது ஹிந்து - முஸ்லிம் பிளவு. நாளுக்கு நாள் இந்தப் பிளவு அதிகமாகி வருகிறது. பஞ்சாப்பிலே சிலர் 'முஸ்லிம்களுக்குத் தனி ராஜ்யம் வேண்டும்' என்று கூடக் கேட்கத் தொடங்கி யிருக்கிறார்கள்: இது எல்லாம் பிரிட்டிஷாரின் இராஜதந்திரச் சூழ்ச்சி. இந்தச் சூழ்ச்சிக்குப் பதில் சூழ்ச்சியைக் கண்டு பிடிக்கத்தான் லாகூரில் சோஷலிஸ்ட் கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது. ஹிந்து — முஸ்லிம் பிளவுப் பிரசாரத்துக்கு விதை பஞ்சாப்பிலேதான் போட்டிருக்கிறார்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் [redacted]னம் என்று பிரசாரம் [redacted]தொடங்கியிருக்கிறார்கள். [redacted]களும் அங்கே போய்க் [redacted]டு யோசனை செய்யப் போகிறோம்......"


"ஓகோ! இனிமேல்தான் யோசிக்கப் போகிறீர்களோ?" என்று ஏளனக் குரலில் கூறினான் ராகவன்.

"யோசனை யெல்லாம் தயாராயிரு... கிறது. அதைக் காரியத்தில் நி... வேற்றத் திட்டம் போடவேண்டிய... தான் பாக்கி. ஹிந்து — முஸ்லி... பிளவை இப்போது வளர்த்து வருகி... வர்கள், — பிரிட்டிஷ் ஏகாதிபத்திய... தின் கையாள்களாக இருந்து வருகி... வர்கள், — பதவி மோகங் கொண்... அரசியல் வாதிகளும், அதிகாரமோக... கொண்ட சர்க்கார் உத்தியோகஸ்த... களுந்தான்!......"

"உத்தியோகஸ்தர்களைப் பற்... ஏதாவது குறை சொல்லாவிட்டா... அன்றைக்கு உனக்கு இராத் தூக்... வராது போலிருக்கிறது!" என்று... சௌந்தரராகவன்.

"சர்க்கார் உத்தியோகஸ்தர்க... தான் இந்தியாவிலேயே படிப்புள்... அறிவாளிகள். அவர்கள் அன்... ஆட்சியை இங்கே நிலை நாட்டுவ... தங்களுடைய படிப்பையும் அறி... யும் செலவழித்து வருகிறார்கள். அ... களைக் குற்றம் சொல்லாமல் வே... யாரைக் குற்றம் சொல்வது?"

"நன்றாகக் குற்றம் சொல்; வே... டாம் என்று சொல்லவில்லை. ... னுடைய குற்றச் சாட்டுகளை எ... னால் தாங்கிக் கொள்ள முடியும்...



ங்களுடைய அபாரமான யோசனை ன்னவென்று சொல்!"

"சமூக வேற்றுமையும் துவேஷமும் மல் வகுப்பாரிடையேதான் உற்பத்தி ாகின்றன. அவர்களுடைய பிரசாரத் னால் பாமர ஜனங்களும் கெட்டுப் ாகிறார்கள். பாட்டாளி மக்கள், ராமத்துக் குடியானவர்கள் முதலிய ர்களிடையில் துவேஷம் இன்னும் ரவவில்லை. துவேஷத்துக்குக் காரண ம் கிடையாது. ஏழை முஸ்லிமும் ழை ஹிந்துவும் ஓர் இனம்; பாட் ாளி முஸ்லிமும் பாட்டாளி ஹிந்து ம் ஒரு சாதி; அம்மாதிரியே முத ாளி முஸ்லிமும் முதலாளி ஹிந்து ம் ஒரே சாதி. இதை எடுத்துக் ாட்டி முஸ்லிம் பாமர மக்களி டையே தீவிரப் பிரசாரம் செய்யப் ோகிறோம்......"

"உங்களுடைய அபார யோசனை ாக்கின் தலையிலே வெண்ணெய் வைத்துப் பிடிக்கிற கதைதான். ஒரு ளும் நடக்கப் போவதில்லை. சண்டை ன்று வரும்போது ஏழை முஸ்லிமும் ணக்கார முஸ்லிமும் தொழிலாளி ஸ்லிமும் முதலாளி முஸ்லிமும் ராளி முஸ்லிமும் ஐ. ஸி. எஸ். முஸ்லிமும் ஒன்று சேர்ந்து கொள்வார்கள். ஒரு நாளும் ஏழை முஸ்லிம்கள் ஏழை ஹிந்துக்களுடன் சேர மாட்டார்கள். ஆகையால் நீயும் உன்னுடைய சகாக்களும் சுதந்திரத்தைப் பிடிப்பதற்கு இந்த வழியை மட்டும் நம்பி யிருக்கும் வரையில், எங்கள் உத்தியோகங்களுக்கு ஆபத்தில்லை. ...... உங்கள் அப்பாவின் திவான் வேலைக்கும் ஆபத்தில்லை!" என்று தாமா பாமாவைப் பார்த்துச் சொன்னான் ராகவன்.

அப்போது சூரியா, "நீங்கள் சொல்வது சரியென்றே வைத்துக் கொள்வோம். ஆனால் அந்த ஒரு வழியை மட்டும் நாங்கள் நம்பி யிருக்கவில்லை. இதெல்லாம் உபகரணங்கள் தான். ஆனாலும் இந்தியா தேசம் வெகு சீக்கிரத்தில் சுதந்திரம் அடையப் போவது என்னமோ நிச்சயம். அதற்கு அருமையான சந்தர்ப்பம் சீக்கிரத்தில் வரப் போகிறது. ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன் படுத்திக் கொள்ளாமல் ஏமாந்துவிடக் கூடாது. நல்ல வேளையாகத் தீர்க்க திருஷ்டியுடன் நமக்கு வழி காட்டக்கூடிய தலைவர் ஒருவர் கிடைத்திருக்கிறார். இந்தியா

வுக்குச் சுதந்திரம் அளிக்கப் போகும் தலைவர் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் தான். ஹரிபுரா காங்கிரஸில் எங்களைப் போன்ற இளைஞர்களை யெல்லாம் தனியாகக் கூட்டி அவர் பேசினார். ஜெர்மனியிலும் இத்தாலியிலும் அவர் நேரிலே பார்த்து விட்டு வந்த விஷயங்களை எடுத்துக் கூறினார். 'வெகு சீக்கிரத்தில் உலக யுத்தம் வரப்போவது நிச்சயம்; அப்போது தான் இந்தியாவின் சந்தர்ப்பம்' என்று சொன்னார். அதற்கு இப்போதிருந்தே நாம் தயாராக வேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறினார்......"

"ஒரு நாளும் உலக யுத்தம் வரப் போவதில்லை. நானுந்தான் ஐரோப்பாவுக்குப் போய் விட்டு வந்திருக்கிறேன். இங்கிலாந்தில் பிரிட்டிஷார் யுத்தத்துக்குத் தயாராயில்லை. ஆகையால் யுத்தம் வராது. ஹிட்லரும் முஸோலினியும் வெறும் மிரட்டலினால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவுக்குத் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொண்டு போவார்கள்!" என்று சொன்னான் சௌந்தரராகவன்.

இந்தச் சமயத்தில் தாரிணி சீதாவின் கையைப் பிடித்துக் கொண்டு "இவர்களுடைய பேச்சு யுத்தம் இப்போதைக்கு முடியாது போலிருக்கிறது. சீதா! உன்னிடம் எனக்கு ஒரு காரியம் இருக்கிறது. வா!" என்று சொல்லி வீட்டுக்குள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

இருபத்தேழாம் அத்தியாயம்

பிரயாண காரணம்

அவர்கள் தனிமையை அடைந்ததும், "சீதா! குற்றவாளி பிடிபட்டான் என்கிற செய்தியைக் கேட்டாயல்லவா!" என்றாள் தாரிணி.

"ஆம், அக்கா! ஆச்சரியமாயிருக்கிறதே! நான் கூடத் தெரியாத்தனமாய் ரஷியா பேகத்தைப் பற்றிப் பேச்சு எடுத்து விட்டேன். நல்ல சமயத்தில் நீங்கள் தடுத்தீர்கள்!" என்றாள் சீதா.

"சகோதரி! அந்த ஒரு விஷயம் நம் இருவருக்கும் மட்டும் தெரிந்த இரகசியமாயிருக்கட்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் உன் புருஷரிடம் கூடச் சொல்லாதே! அவர் பதட்ட சுபாவமுள்ளவர் என்பதை இதற்குள் தெரிந்து கொண்டிருப்பாய். விஷயத்தைச் சொன்னால் 'ஏன் உடனே சொல்லவில்லை?' என்று உன் பேரிலேயே திருப்பிக் கொண்டாலும் திருப்பிக் கொள்வார்."

"அது வாஸ்தவந்தான். நான் இனிமேல் ரொம்ப ஜாக்கிரதையாயிருக்கிறேன். ஆனால் உங்களுக்கு என்ன தோன்றுகிறது. அக்கா! போலீஸ்காரர்கள் சொன்ன விஷயம் உண்மையாயிருக்குமா? அப்படியானால்?..."

"நமக்கு என்ன தெரியும், சீதா! அது உண்மையாகவே இருக்கலாம். காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல் நாம் ரஷியா பேகத்தைச் சந்தேகித்தது பிசகாயிருக்கலாம். அவளோ உன்னிடம் ஒன்றும் விவரமாகச் சொல்லவில்லை. எவ்வளவோ தேடியும் நானும் அவளைச் சந்திக்க முடியவில்லை. அன்றிரவு நடந்த சம்பவத்தை நாம் இருவரும் மறந்து விடுவதுதான் நல்லது."

"அன்றிரவு நான் அநாவசியமாக அடைந்த பீதியையும் கலக்கத்தையும் நினைத்தால் இப்போது வேடிக்கையாயிருக்கிறது. அது போகட்டும். நீங்கள் எங்கேயோ லாகூருக்குப் போகிறேன் என்கிறீர்களே! அதை நினைத்தால் தான் எனக்குக் கவலையாயிருக்கிறது. நீங்களும் சூரியாவும் அடிக்கடி இங்கே வந்து கொண்டிருந்தால் எனக்கு உற்சாகமாயிருக்கும். நீங்கள் வந்தால் இவர்கூட உற்சாகமாயிருக்கிறார்......"

"சீதா! நான் இங்கே அடிக்கடி வருகிறதென்பது இனிமேல் இயலாத காரியம். உன் மாமியாருக்கு நான் வருவது விருப்பமாயிராது......"

"என் மாமியாரைப்பற்றித் தவருக எண்ணுகிறீர்கள். அவர் ரொம்ப நல்லவர். ஒரு தடவை பழகிவிட்டால் தெரிந்துகொள்வீர்கள். பாமாவையும் தாமாவையும் போலிருந்தால் ஒரு வேளை அவருக்கு அவ்வளவாகப் பிடிக்காது. ஆனல் உங்களை நிச்சயமாக அவருக்குப் பிடித்து விடும்."

"அப்படியானல் இப்போதே அவரை நான் பார்த்து விடுகிறேன்! பிறகு எப்போது சந்தர்ப்பம் கிடைக்குமோ, என்னமோ? உன் மாமியாரின் வாக்கை நீ தட்ட வேண்டாம். டிராயிங் அறைக்கு நீ போய் எல்லாருடனும் பேசிக் கொண்டிரு. நானே தற்செயலாகப் பார்த்ததுபோல் பார்த்துப் பேசிக் கொள்கிறேன்."

"அதுதான் சரி: நீங்கள் என் மாமியாரை ஐந்து நிமிஷத்தில் மயக்கி விடுவீர்கள், அக்கா!" என்று சொல்லிவிட்டுச் சீதா சென்ருள்.

* * *

பூஜை அறையில் காமாட்சி அம்மாள் கண்ணை மூடித் தியானத்தில் அமர்ந்திருந்தாள். "அம்மா! என்னை ஞாபகம் இருக்கிறதா?" என்று சொல்லிக்கொண்டே தாரிணி அவளுக்கு நமஸ்காரம் செய்தாள்.

காமாட்சி அம்மாள் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்து பார்த்தாள். தாரிணி என்று தெரிந்துகொண்டதும், "பெண்ணே! நீ நன்ருயிருக்க வேண்டும். இந்த ஊரிலே தான் இருக்கிருயா?" என்று கேட்டாள்.

"இந்த ஊரில் கொஞ்ச நாளாக இருந்தேன். சீக்கிரத்தில் இந்த ஊரை விட்டுப் போகப்போகிறேன்."

"அப்படியா?" என்று காமாட்சி அம்மாள் கூறிய குரலில், "நல்லவேளை!" என்பதும் தொனித்தது.

"அம்மா! உங்களுக்கு நான் கொடுத்த வாக்குறுதியை இதுவரை நிறைவேற்றினேன் அல்லவா? இனிமேலும் நிறைவேற்றுவேன்! நீங்கள் கவலைப்படவேண்டாம்!"

"எனக்கு ஒரு கவலையும் இல்லையடி அம்மா! எப்படியாவது எல்லாரும் நன்ருயிருக்கவேணும்; அவ்வளவுதான்! தினம் தினம் சதா சர்வ காலமும் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியிடம் இதைத்தான் நான் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன்! என்னுடைய மூத்த பிள்ளை எனக்கு உதவாதவனுகப் போய்விட்டான். ராகவனை நம்பித்தான் நான் இந்த உயிரை வைத்துக்கொண் டிருக்கிறேன். அவனுக்கு உன்னுலே ஒரு கெடுதலும் வரக்கூடாது. அவ்வளவுதான்."

"ஒருநாளும் வராது, அம்மா! உங்கள் பிள்ளை, உங்கள் நாட்டுப் பெண்,— இந்தக் குடும்பத்துக்கே என்னுல், ஒரு கெடுதலும் வராது. அதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன!" என்ருள் தாரிணி.

* * *

இரண்டு தினங்களுக்குப் பிறகு சௌந்தரராகவன் தாரிணியின் அறைக்குச் சென்ருன். அங்கே அச்சமயம் சூரியாவும் இருந்தான். இருவரும் பிரயாணம் கிளம்புவதற்குத் தயார் செய்து கொண்டிருந்ததை ராகவன் கவனித்தான்.

"அப்படியானல் உங்களுடைய லாகூர்ப் பிரயாணம் நிச்சயந்தான் போலிருக்கிறது" என்ருன்.

"ஆமாம்: இன்று இரவு வண்டியில் புறப்படுகிருேம்" என்று தாரிணி சொன்னுள்.

ராகவன் சூரியாவைப் பார்த்து, "இதோ பார், சூரியா! நீ லாகூருக்குப் போ, அல்லது ராவல்பிண்டிக்கு வேறுமானுலும் போ! அதற்கும் அப்பால் காபூலுக்குப் போனுலும் சரிதான். மத்திய ஆசியாவின் பாலைவனங்களுக்குப் போவது இன்னும் பொருத்தமாயிருக்கும். சோஷலிஸம், கம்யூனிஸம் முதலிய கானல் நீரைத் தேடுவதற்குப் பாலைவனங்கள் தானே ஏற்ற இடம்? — ஆனல் தாரிணியை உன்னுடன் அழைத்துக் கொண்டு போகாதே! அதனுல் உனக்கும் நன்மையில்லை; அவளுக்கும் நன்மையில்லை!" என்ருன்.

சூரியா மலர்ந்த முகத்துடன் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, "மாப்பிள்ளை, ஸார்! கடைசியில் சொன்னீர்களே,—அதிலேதான் தவறு செய்

கிறீர்கள். தாரிணிதேவியை நான் அழைத்துப் போகவில்லை. அவர்தான் என்னை வற்புறுத்தி அழைத்துப் போகிறார்!" என்றான்.

"தாரிணி! இது சரிதானா?" என்று ராகவன் கேட்டான்.

"ஆம்; நான் சரித்திர ஆராய்ச்சி செய்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? அதற்காகப் பஞ்சாபுக்குப் போகவேண்டியிருக்கிறது. பஞ்சாப் மட்டும் என்ன? இந்தியா தேசம் முழுவதுமே சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எனக்கு இருக்கிறது. எத்தனை நாளைக்கு நிருபமாவை நான் அழைத்துப் போக முடியும்?. அவளுக்குக் கணவன் இருக்கிறார்; குடும்பம் இருக்கிறது. ஆகையினாலேதான் சூரியாவைப் பிடித்தேன்!"

ராகவன் முகத்தில் அருவருப்புத் ததும்பக் கூறினான்:—"ஒரு காலத்தில் இந்தப் பாரத தேசத்தின் பெருமையெல்லாம் பெண் குலத்திலே இருந்தது. புருஷர்கள் எக்கேடு கெட்டுப் போனாலும் பெண்கள் தர்மத்தைப் பாதுகாத்து வந்தார்கள். இப்போது அதற்கும் ஆபத்து வந்து விட்டது!"

"அப்படி என்ன ஆபத்து வந்திருக்கிறது?" என்று தாரிணி கேட்டாள்.

"நம்முடைய முன்னோர்களின் காலத்தில் இப்படித்தானா பெண்கள் தனி வழியே பிரயாணம் சென்றார்கள்?"

"நான் தனியாகப் புறப்படவில்லையே? புருஷத் துணையுடன் தானே போகிறேன்?"

"நல்ல புருஷத் துணை! புருஷத் துணை என்றால், எந்தப் புருஷனுடன் வேணுமானாலும் கிளம்பி விடலாமாகும்? கலியாணம் செய்து கொண்ட புருஷனுடனேதான் கிளம்பலாம். அது தான் ஹிந்து தர்மத்துக்கு அழகு."

"தகப்பனாருடனும் அண்ணன் தம்பிகளோடும் கிளம்பக் கூடாதா?"

"கிளம்பலாம். ஆனால்......"

"நீங்கள் கேட்கப் போவது எனக்குத் தெரியும். அதற்குப் பதில் சொல்கிறேன். இராஜபுத்திர நாட்டில் 'ராக்கிபந்த்' என்ற ஒரு வழக்கம் இருந்தது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அந்தக் காலத்தில் ஸ்திரீகள் ரொம்பவும் அபாயத்துக்கு உட்பட்டிருந்தார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அவசியமாயிருந்தது. அண்ணன் தம்பி இல்லாத ராஜபுத்திரப் பெண்கள் வேறு குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களைச் சகோதரர்களாகக் கோருவார்கள். அப்படிக் கோரப்பட்ட ராஜபுத்திர வாலிபன் அந்தப் பெண்ணின் கையில் ஒரு காப்புக் கயிற்றைக் கட்டுவான். பிறகு தன் உயிரைக் கொடுத்தாவது அவளைப் பாதுகாப்பது அவனுடைய கடமை. அம்மாதிரி சூரியாவிடம் நான் பாதுகாப்புக் கோரியிருக்கிறேன்."

"போதும், போதும்! உன்னுடைய சரித்திர ஆராய்ச்சியையெல்லாம் நீயே வைத்துக் கொள். எனக்கு அவகாசம் இல்லை. தாரிணி! உன்னிடம் நான் தனிமையில் சில வார்த்தைகள் பேசவேண்டும்" என்றான் ராகவன்.

அவனுடைய முகத்தில் ஏற்பட்டிருந்த கிளர்ச்சியையும் பரபரப்பையும் பார்த்த தாரிணி, "உங்களுடைய கொள்கையின்படி ஸ்திரீகளிடம் புருஷர்கள் தனிமையில் பேசலாமா? அது தர்மத்துக்கு விரோதமில்லையா!" என்று கேட்டாள்.

ஒரு கணம் ராகவன் திகைத்திருந்துவிட்டு, "உனக்குத்தான் அதில் ஆட்சேபம் இல்லையே? அதனால் எனக்கும் ஆட்சேபம் இல்லை. இது விளையாட்டு இல்லை, தாரிணி! ரொம்பவும் முக்கியமான விஷயம்!" என்றான்.

இச்சமயம் சூரியா, "எனக்கும் புறப்படுவதற்கு முன்னால் செய்ய வேண்டிய சில காரியங்கள் இருக்கின்றன. நான் போய் வருகிறேன். தாரிணிதேவி! பிரயாணத் திட்டத்தில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டால், உடனே சொல்லி அனுப்புங்கள்!" என்று கூறி விட்டு வெளியேறினான்.

சூரியா போனபிறகு சற்று நேரம் அந்த அறையில் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. ராகவனே பேச்சை ஆரம்பிப்பான் என்று எதிர்பார்த்த தாரிணி அது நடவாதென்று கண்டு, "தனிமையில் பேசவேண்டிய முக்கியமான விஷயம் என்ன? சொல்லுங்கள்!" என்றாள்.

கலைகளை வளர்த்த கொடை வள்ளலுக்கு ஞாபகச் சின்னம்

ரஜனி

கொழும்பு, நவம்பர் 2.

சென்ற சனிக்கிழமை கொழும்பு நகர மண்டபத்தில் ஸ்தல ஸ்தாபன மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகா தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. காலஞ் சென்ற ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரின் சேவைகளைப் பாராட்டி நான்கு மந்திரிகளும் பார்லிமெண்டு அங்கத்தினர்களும் நகர மேயரும் பேசினார்கள். பல பௌத்த சந்நியாசிகளும் இந்தக் கூட்டத்துக்கு வந்து கலை வளர்ச்சிக்கு ராஜா ஸர் செய்த பணியைப் புகழ்ந்தனர். தமிழிசை இயக்கத்துக்கு உயிர் நாடியா யிருந்தவர் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் என்று தபால் போக்குவரத்து மந்திரி ஸ்ரீ ஸி. சிற்றம்பலமும் கல்வி மந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி ஸ்ரீ கே. கனகரத்தினமும் சொன்னார்கள்.

தந்தையைப் போன்ற தயாள குணம் படைத்திருக்கும் ராஜா ஸர் முத்தையாச் செட்டியாருக்கும் புகழ்மாலைகள் சூட்டப்பட்டன. ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரின் ஞாபகார்த்தமாகச் சென்னையிலும் கொழும்பிலும் இரண்டு கலைக் கழகங்கள் திறவ வேண்டுமென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதற்குத் தெளிவான நடவடிக்கைகள் எடுப்பதற்காகப் பிரதம மந்திரி சேனநாயகாவைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டியையும் பொதுக் கூட்டம் நியமித்தது.

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரின் நன்கொடையினால் இலங்கையிலுள்ள பல கல்வி ஸ்தாபனங்கள் பயனடைந்திருக்கின்றன. முக்கியமாகச் சிதம்பரத்திலுள்ள அண்ணாமலை சர்வகலாசாலையை இலங்கையர்கள் தங்களுடைய கலாசாலையாகவே மதித்து வருகிறார்கள். சிதம்பரம் சர்வகலாசாலையின் ஒவ்வொரு வகுப்பிலும் இலங்கையிலிருந்து சென்ற ஏராளமான மாணவர்களை இன்றும் காணலாம்.

கடலும் காலமும் விழுங்கிய கோவில்கள்

சிங்கள மன்னர்கள் ஆட்சி புரிந்த காலத்திலே இலங்கையில் சீரும் சிறப்புமா யிருந்து பிறகு பாழடைந்துபோன பௌத்த ஆலயங்களைப் பல லட்ச ரூபாய் செலவில் சிங்களவர்கள் புனருத்தாரணம் செய்து வருகிறார்கள். ருவன் வெளிசயா ஆலயப் புனர் அமைப்புக்கு மட்டும் இதுவரை பல லட்ச ரூபாய்கள் செலவாகிவிட்டன. பௌத்த ஆலயங்களைப் போலவே பல நூற்றாண்டுப் பழமை வாய்ந்த ஹிந்து ஆலயங்கள் பலவும் இலங்கையிலிருக்கின்றன. அவைகளையும் புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்ற ஓர் ஆவல் ஹிந்துக்களிடையில் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

திருக்கேதீஸ்வரம் என்ற க்ஷேத்திரமும் திரிகோணமலையிலுள்ள ஸ்ரீ கோணேஸ்வரர் கோவிலும் பாடல் பெற்ற ஸ்தலங்கள். யாழ்ப்பாணத் தீபகற்பத்திலுள்ள திருக்கேதீஸ்வரம் பாழடைந்து கிடக்கிறது. கோணேஸ்வரர் ஆலயம் கடலுக்கே இரையாகிவிட்டது. பார்லிமெண்ட் அங்கத்தினர் ஸ்ரீ கே. கனகரத்தினத்தின் தலைமையில் சமீபத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்திலே திருக்கேதீஸ்வர ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து அமைக்கச் செல்வாக்குள்ள ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள இதர புராதன இந்துக் கோவில்களைப் புதுப்பித்து அமைப்பதற்கும் திருக்கேதீஸ்வரப் புனருத்தாரணம் வழி காட்டியா யிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் புனித கைங்கரியத்திலே இலங்கை இந்தியர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று ஸ்ரீ கனகரத்தினம் தமது பிரசங்கத்தில் கேட்டுக்கொண்டார். பாடல் பெற்ற ஸ்தலங்களின் புனருத்தாரணத்துக்கு இலங்கை இந்தியர்களின் ஒத்துழைப்பு பரிபூரணமாகக் கிடைக்குமென்று புனருத்தாரணக் கமிட்டியார் நம்பலாம்.

சிநேகபாவ அனுமான்!

கொழும்பிலே நாகூர் சங்கத்தினர் நடத்திய விழாவுக்கு இந்திய கவர்னர் ஜெனரல் ராஜாஜி ஓர் அழகான செய்தியை அனுப்பிவைத்திருக்கிறார். அந்தச் செய்தியில் அவர் சொல்லியிருப்பதாவது :—

"மதம், கலை, நாகரிகம், இலக்கியம், வர்த்தகத் தொடர்புகள் முதலியவை இலங்கையையும் இந்தியாவையும் ஒன்றாக இணைத்து வைத்திருக்கின்றன. ஆனால் வெவ்வேறு அரசாங்கங்கள் என்ற மாயைதான் இருதேச மக்களையும் பிரித்து வைத்திருக்கிறது. ஏகோபாவம் என்ற அனுமான் எக்காலத்திலும் நம்மை இணைத்து வைப்பானாக!"

இவ்வாறு ராஜாஜி தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார். இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையில் ராஜீய வேற்றுமைகள் அதிகரித்துள்ள இந்தச் சமயத்தில் ராஜாஜியின் கல்லாசியும் நல்லெண்ணச் செய்தியும் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. சென்னைக் கல்வி மந்திரி ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார் சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்தபொழுது சொல்லியதைப் போல் பழைய கலாசாரத் தொடர்புகளை மீண்டும் பலப்படுத்துவதன் மூலமாகவே இரு தேசங்களுக்கு மிடையில் நல்லுறவை வளர்க்க முடியும். பெரிய பெரிய ராஜ தந்திரிகளினால் சாதிக்க முடியாத காரியங்களைக் கலாசார ஸ்தாபனங்கள் அன்பினால் சாதித்துவிட முடியும். இந்த அரும்பணியைச் செய்ய ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரின் பெயரினால் சென்னையிலும் கொழும்பிலும் நிறுவப்பட விருக்கும் கலாபவனங்கள் உதவி புரியலாம்.

காலக்ஷேபம்

பேஷ்!

நகப்பனார்:—இந்தக் குச்சு நாயை யாருக்காவது கொடுத்துவிடு. அது சதா குரைத்துத் தொலைக்கிறது. நான் உனக்குப் பத்து ரூபாய் தருகிறேன்!

முத்து:—அப்பா, நாளைக்குக் கட்டாயம் அது நம் வீட்டில் இருக்காது.

நகப்பனார் (மறுநாள் காலையில்):—ஏண்டா, முத்து! நாயைக் கொடுத்து விட்டாயா? பேஷ்! இந்தா, பத்து ரூபாய்! நாயை யாரிடம் கொடுத்தாய்?

முத்து:—பக்கத்துத் தெரு சோமுவிடம் நம்ம நாயைக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக அவனிடமிருந்து இரண்டு கறுப்பு நாய்க் குட்டிகள் வாங்கி வந்திருக்கிறேன், அப்பா!

★

எப்படி?

மாஜிஸ்டிரேட் (குற்றவாளியைப் பார்த்து):—நீ செய்த குற்றத்திற்காக உனக்குப் பத்து ரூபாய் அபராதம். போ!

கைதி:—எஜமான், செருப்பு திருடியதற்குப் பத்து ரூபாய் அபராதம் என்கிறீங்களே! அந்தச் செருப்பு என் காலுக்குச் சரியாய்க் கூட இல்லையே?

★

கெட்ட லட்சணம்

அம்மா:—நம்ம சரஸுவுக்குப் பிடில் கற்றுக் கொடுக்கலாமா, இல்லை, வாய்ப்பாட்டு மட்டும் கற்றுக் கொடுக்கலாமா?

அப்பா:—பிடில் கற்றுக் கொடுக்கலாம்.

அம்மா:—அவள் பிடில் வாசித்துக் கேட்டிருக்கிறீர்களா?

அப்பா:—பாடித்தான் கேட்டிருக்கிறேனே!

அவசரமா?

ரயில்வே ஸ்டேஷனில் உள்ள எடை பார்க்கும் யந்திரத்தின் மூலுவன் ஏறி நின்று ஓர் அணா நாணயத்தைத் துவாரத்தில் போட்டான். உடனே ஒரு டிக்கட்டும் கலகலவென்று பல அணாக்களும் வந்து விழுந்தன. அவன் அவைகளை எடுத்துக்கொண்டு பக்கத்திலிருந்த ஒரு குமாஸ்தாவிடம் போனான்.

அவன்:—ஸார், இந்தாருங்கள்! அந்த எடை பார்க்கும் யந்திரத்தில்......

குமாஸ்தா (கோபத்துடன்)—சரிதானய்யா, அந்த மெஷின் ரிப்பேராகிவிட்டதாக்கும்; இந்தாரும், உமது ஓரணாக் காசு!

★

நியாயந்தான்!

ஒருவர்—என்ன, ஐயா! இந்தப் பழைய ஹார்மோனியத்துக்கு இருபது ரூபாய் கேட்கிறீரே, இது நியாயமா?

பாடகர்:—என்ன அப்படிச் சொல்கிறீர்? இந்தப் பழைய ஹார்மோனியத்தை என் பக்கத்து வீட்டுக்காரர், 'எத்தனை ரூபாய் வேண்டுமானாலும் தருகிறேன், தயவு செய்து ஹார்மோனியத்தைக் கொடுத்துவிடும்' என்று கெஞ்சிக் கேட்கிறாரே!

★

தண்டனை!

குழந்தை:—அம்மா, நம்ம ஜிம்மியைப் பார்த்தாயா, அம்மா! என் பூட்டைக் கடித்து விழுங்கி விட்டது.

அம்மா:—அப்படியா? அதற்குச் சரியான தண்டனை கொடுக்க வேண்டும்.

குழந்தை:—ஜிம்மிக்கு நான் தண்டனை கொடுத்துவிட்டேன், அம்மா! அலமாரியில் நீ ஜிம்மிக்கு வைத்திருந்த பாலை எடுத்து நான் குடித்துவிட்டேன்!

வளரும் தமிழ்

தமிழ் இன்பம்

தமிழ் நாட்டில் அறிஞர் ரா. பி. சேதுப் பிள்ளையைத் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள். ஸ்ரீ சேதுப்பிள்ளை பல வருஷ காலமாக எழுத்தாலும் சொற்பொழிவாலும் தமிழ் இலக்கியத்தை வளர்த்து வரும் உத்தமத் தமிழ்த் தொண்டர்களில் ஒருவர்.

ஸ்ரீ சேதுப்பிள்ளை பல சமயங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளையும் பல பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளையும் தொகுத்து, திருச்சி ஜில்லா ராமச்சந்திரபுரம் நியூ இந்தியா புக் ஹவுஸ் கம்பெனிக்காரர்கள் ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் புத்தகத்துக்குத் 'தமிழ் இன்பம்' என்ற பெயர் கொடுக்கப்பட்டிருப்பது ரொம்பப் பொருத்தமானதாகும். தமிழ் பாஷையின் நயத்தையும் இன்பத்தையும் காண வேண்டுமானால் அதை ஸ்ரீ சேதுப்பிள்ளையின் பேச்சிலும் எழுத்திலும்தான் காண முடியும்.

'காயும் கனியும்' 'சேரனும் கீரனும்' 'பாரியும் மாரியும்' 'ஆண்மையும் அருளும்' என்பன இந்தப் புத்தகத்தில் உள்ள சில அருமையான கட்டுரைகள். விலை ரூ. 3.

மனித தெய்வம்

தேச பக்தனான இளைஞன் உல்லாஸ் கலாசாலை உபாத்தியாயராயிருக்கிறான். அவனது புரட்சியுள்ளம் அந்த உத்தியோகத்தைத் தொடர்ந்து பார்க்க இடந்தரவில்லை. ஜமீன் குடிகளின் உரிமைக்காகச் சொற்போர் தொடுக்கிறான். இந்தத் தொண்டுக்கு அவன் சகோதரி அனே நிற்கிறான். கடைசியில் அவனே ஒரு ஜமீன்தாரின் புதல்வன் என்னும் மர்மமான விஷயம் வெளியாகிறது. ஜமீனை ஏற்றுக்கொண்டு ஏழைகளின் நண்பனாக விளங்குகிறான். ஒரு நாவலுக்கு அவசியமாக வேண்டிய காதல், அதில் போட்டி, கொலை, சதி, தியாகம், விரக்தி முதலிய எல்லா அம்சங்களும் இந் நூலில் நிறைந்திருக்கின்றன.

இதை எழுதியவர் ஸ்ரீமதி எம். எஸ். கமலா. கோயமுத்தூர் முத்து நூலகம் இதை வெளியிட்டிருக்கிறது.

உரிமையின் பரிசு : காந்தியடிகளின் பிரிவு

ஆங்கிலத்திலே ஆக்ஸ்போர்டு யுனிவர்ஸிட்டி பிரஸ் எப்படியோ, எவரிமான்ஸ் லைப்ரரி எப்படியோ அதைப்போல நம்முடைய தமிழ் மொழிக்கு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்று சொல்லுவது மிகையாகாது. மேற்படி கழகத்தார்கள் பண்டைத் தமிழ் இலக்கியங்களை வெகு அருமையாக வெளியிட்டு வருவது எல்லோருக்கும் தெரியும். இப்போது அவர்கள் காந்தி மகானைப் பற்றி "உரிமையின் பரிசு—காந்தியடிகளின் பிரிவு?" என்ற நூலைப் புதிதாக வெளியிட்டிருக்கிறார்கள்.

காந்திஜியின் கோர மரணத்தைக் கேள்விப்பட்டுத் திடுக்கிட்ட உலகத்து ராஜ தந்திரிகளுடைய அபிப்பிராயங்களையும், உலகத்துப் பத்திரிகைகளுடைய கருத்துக்களையும் ஒன்று கூட பாக்கிவிடாமல் மிக அருமையாகத் திரட்டி இந்தப் புத்தகத்தில் கொடுத்திருக்கிறார்கள். புத்தகத்தின் ஆரம்பத்திலே காந்திஜியின் வாழ்க்கை சுருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. கடைசியில், காந்தி மகானுடைய பொன் மொழிகளிலே சிலவற்றைப் பொறுக்கியெடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். நல்ல புத்தகம். விலை ரூ. 3—8—0.

யுவன்

"குழந்தாய், காலணா வாங்கிக்கொண்டு போனால் நீ என்ன வாங்குவாய்?" என்று ஒரு தாய் தன் குழந்தையைக் கேட்டாள், அது "'யுவன்' வாங்கப்போகிறேன், அம்மா!" என்றுதான் நிச்சயமாகச் சொல்லும். 'யுவன்' என்றால் மிட்டாயோ, கற்கண்டோ அல்ல; புதுக்கோட்டையிலிருந்து வெளிவரும் பாலர் பத்திரிகை. சிறுவர்கள் விரும்பிப் படிக்கக் கூடிய முறையில் நன்றாக அமைந்திருக்கிறது. விலாசம்: 'பாரதி' அச்சகம், புதுக்கோட்டை.

தமிழிசை மணி மாலை

தமிழிலும் வடமொழியிலும் சிறந்த பாண்டித்யம் உள்ளவரும், இரு மொழியிலும் பல சிறந்த கீர்த்தனைகள் இயற்றியுள்ளவருமான ஸ்ரீ சிதம்பரேசுவர தீட்சிதர் அவர்கள் எழுதிய 'தமிழிசை மணி மாலை' என்ற புத்தகம் கிடைக்கப் பெற்றோம். இதில் மொத்தம் 105 கீர்த்தனைகள் இருக்கின்றன. பெரும்பாலானவை நடராஜப்பெருமான், திருமால், சரஸ்வதி முதலிய தெய்வங்களைப் பற்றியும் மற்றவை கல்வி, வீரம், தயை, தானம் முதலியவற்றைப் பற்றியும் கூறுகின்றன. பாடுபவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் உற்சாகம் அளிக்கத் தக்க முறையில் எளிய நடையில் அமைந்திருக்கின்றன. விலை ரூ. 1—4—0.

விலாசம்:—சரசகவிராஜ என்.எஸ். சிதம்பரேசுவர தீட்சிதர், 49, கீழவீதி, சிதம்பரம்.

Hindus & Muslims-Are they two Nations?

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்களா? அல்லது, வெவ்வேறு சமுதாயங்களைச் சேர்ந்தவர்களா? "முஸ்லிம்கள் ஒரு தனி சமுதாயம். அவர்களுக்கும் மற்ற இந்திய மக்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை" என்றார் காயிதே ஆஜம் முகம்மதலி ஜின்னா. காந்தி மகானோ "நேற்றுவரை எங்களுடன் வாழ்ந்துவந்த எங்கள் சகோதரர்கள் வேறொரு மதம் மாறிவிட்டதற்காக அவர்கள் வேறு சமுதாயமாகிவிட முடியுமா? அப்படிச் சொல்லுவது தப்பு" என்றார். இதில் யார் சொல்லுவது தப்பு என்பதை ஹிந்துவுமல்லாத முஸ்லிமும் அல்லாத ஸ்ரீ சாமுவேல் வைரணப் பிள்ளை என்ற ஒரு கிறிஸ்தவப் பிரமுகர் இந்த நூலிலே வெகு அழகாக ஆராய்ந்து பல புத்தகங்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டி விளக்கியிருக்கிறார். கொஞ்சங்கூடப் பாரபட்சமோ வெறுப்புத் துவேஷமோ இல்லாமல் எழுதப்பட்ட இந்த நூலை ஆங்கிலந் தெரிந்த தமிழ் மக்கள் எல்லோரும் படிக்க வேண்டியது அவசியமாகும். விலை ரூ. 6—12—0. விலாசம்: நியூ இந்தியா புக் ஹவுஸ், ஜயா மான்ஷன்ஸ், சென்னை - 3.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

230. ராமனை நோக்கித் திரும்பி விட்டான்!

அனுமனுடைய பேச்சு முடிந்து விட்டது. விடை பெற்றுப் போக வேண்டியதுதான். அப்போது தான் தலையில் சூடியுள்ளதான சூடாமணியை எடுத்து அனுமனிடம் காட்டிச் சொல்லுகிறாள் சீதை.

சூடை யின்மணி
 கண்மணி ஒப்பது,
 தொல் நாள்
ஆடை யின்கண்
 இருந்தது, பேர்அடை
 யா ளம்,—
நாடி வந்தென(து)
 இன்னுயிர் நல்கிய
 நம் பா!
கோடி யென்று
 கொடுத்தனள் மெய்ப்புகழ்
 கொண் டாள்.

[சூடையின் மணி: சூடாமணி யானது; கண்மணி யொப்பது: இந்தச் சூடாமணி கண்மணிக்குச் சமானம் என்று சொல்லக் கூடிய படி அவ்வளவு சிறந்தது; தொல்நாள் ஆடையின் கண் இருந்தது: அயோத்தியை விட்டுப் புறப்படும்போது எப்படியோ என்னுடைய ஆடையில் முடிந்து கிடக்க நேர்ந்தது; பேர் அடையாளம்: உலகத்திலேயே இது போல் வேறொன்று இல்லாததி னால் என்னைக் குறிப்பிடுவதற்கு நல்ல அடையாளம்; நாடி வந்து என் இன்னுயிர் நல்கிய நம்பா: இவ்வளவு தூரம் தேடி வந்து என் அருமையான உயிரைக் காப்பாற்றிக் கொடுத்த புண்ணிய வானே; கோடி என்று கொடுத் தனள்: வாங்கிக்கொள் என்று கொடுத்தாள்; கோடி: கொள் வாய்; மெய்ப்புகழ் கொண்டாள்: என்றென்றும் நிலை நிற்கும் புக ழுக்குரிய சீதை.]

குறிப்பு:—நான் இலங்கையிருப்பது உண்மையே. இந்த விஷயம் ராமனுக்குத் தெரிந்து விடவேண்டுமே என்ற ஆத்திர மெல்லாம் சூடாமணியைக் கையில் எடுத்து மெல்ல, சாவகாசமாகக் கொடுக்கிற பாவத் தில் தெரிகிறது. மூன்றாவது அடி விளி யாக நின்று சூடாமணிக்கும், அதைக் கொடுப்பதற்கும் இடையே நின்று ஜாக் கிரதையை உணர்த்துகிறது.

கோடி என்று எதுகையில் வைத்துக் கடைசி அடியைச் சொல்லும்போது ஜாக்கிரதை யாகக் கொள்ள வேண்டும் என்பதை அழகாக எடுத்துச் சொல்லுகிறது.

* * *

சீதை மெள்ள ஜாக்கிரதையுடன் சூடாமணியைக் கொடுத்தாள். அனு மன் அதை என்ன செய்தான் என்று பார்க்கலாம்.

தொழுது வாங்கினன்;
 தூசினில் சுற்றினன்;
 சுற் றி,

பின் குறிப்பு!

●

ஒரு சமயம் ஓர் இளந் தம்பதிகளுக்குள்ளே பின் வரும் வாக்குவாதம் நிகழ்ந்தது.

"இந்தப் பெண்களுக்கே 'பின் குறிப்பு' இல்லாமல் கடிதம் எழுதத் தெரிவதில்லை!" என்றான் கணவன்.

"இந்தத் தடவை பாருங்கள்; நான் ஊருக்குப் போனதும் கடிதம் எழுது கிறேன்" என்றாள் மனைவி.

"சரி, பார்க்கலாமே!" என்றான் கணவன்.

அடுத்த வாரம் ஊருக்குச் சென்றிருந்த அவன் மனைவியிடமிருந்து கடிதம் வந்தது. கடிதத்தின் கடைசியில் கீழ்க் கண்டபடி எழுதியிருந்தது:—

"பி. கு.:—என்ன, நான் உங்களிடம் சொன்னது சரியா?"

பழுது ருவகை
பந்தனை செய்தனன்;
பந் தித்(து)

அழுது மும்மை
வலங்கொ(டு) இறைஞ்சினன்;—
அன் போ(டு)

எழுது பாவையும்
ஏத்தினன்; ஏகினன்
இப் பால்.

[தொழுது வாங்கினன்: கையைத் தலை மேல் குவித்து விட்டு அதன் பிறகு மரியாதையாக ஏந்திய கையால் வாங்கினான்; துகிலில் சுற்றினன்: தன்னுடைய ஆடையின் முந்தியில் சுற்றினான்; சுற்றிப் பழுதுரு வகை பந்தனை செய்தனன்: சுற்றி விட்டு எந்த விதத்திலும் நழுவி விழாதபடி இறுகக் கட்டினான்; பந்தித்து அழுது மும்மை வலங்கொடு இறைஞ்சினன்: மேலே சொன்னபடி பந்தோபஸ்து செய்து விட்டுக் கண்ணீர் விட்டுக் கொண்டு சீதையை மூன்று தடவை பிரதக்ஷணம் செய்து தரையில் விழுந்து நமஸ்கரித்தான்: எழுது பாவையும் அன்போடு ஏத்தினன்: அருமையாய்ச் செதுக்கிய பாவையை ஒத்த சீதா பிராட்டியும் அன்போடு வாழ்த்தினாள் அனுமனை: ஏகினன் இப்பால்: ராமன் இருந்த திசையை நோக்கிய வழியைத் திரும்பினான் அனுமன்.]

அருமையான அடையாளப்பொருள் ராமனுக்குக் காட்டுவதற்காகக் கிடைத்துவிட்டது. அதை பந்தோபஸ்து செய்யும் ஜாக்கிரதை ஒரு பக்கம், சீதையை விட்டுப் போக வேண்டியிருக்கிறதே என்ற கவலையினாலுள்ள தயக்கம் மற்றொரு பக்கம்—இந்த இரண்டு பாவங்களும் செய்யுளில் அற்புதமாக உருவெடுத்திருக்கின்றன.

சீதையை இலங்கையில் விட்டுவிட்டு ராமன் இருக்கும் இடத்தைப் போய்ப் பார்க்கலாம்—அடுத்த இதழில்.



அன்று பௌர்ணமி. நிர்மலமான வானவெளியில் பூரண சந்திரன், தனது தண்ணென்ற கிரணங்களை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்தான். முனியன் வீட்டுத் திண்ணையில் தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்த நான், எழுந்து உட்கார்ந்து சுற்றுமுற்றும் பார்த்தேன். விவரிக்க முடியாத ஒரு வேதனை என் உள்ளத்தை அணு அணுவாகத் தாக்கிக் கொண்டிருந்தது. எனக்குக் கொஞ்ச தூரத்தில் படுத்துக்கொண்டிருந்த சோமு குறட்டை விட்ட சத்தம் அந்த இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு வந்தது.

எதிர்வாடையில் துரிஞ்சல்களின் ஏக போக உரிமைக்கு அடைக்கலமா யிருந்த அந்தப் பாழடைந்த சத்திரம்—ஏழைப் பொன்னியின் ஜீவனற்ற கட்டைக்கு இருப்பிடம் அளித்து மனிதர்களின் அருவருப்புக்கும், உதாசீனத்திற்கும் பாத்திரமான அந்தச் சத்திரம்—பல வருஷங்களுக்கு முன்னால் நடந்த ஒரு கோர சம்பவத்திற்கு ஞாபகச் சின்னமாக விளங்கிக் கொண்டிருந்தது.

காலச்சுழலில் புதைபட்டு மக்கிக் கிடந்த அந்தத் துருப் பிடித்த சம்பவத்திற்குக் கிழவன் ஒருவனின் வார்த்தைகள் புது மெருகு தீட்டி மாற்றுருவம் கொடுத்து விட்டன. அது என் மனத் திரையில் படர்ந்து ஓடவும் ஆரம்பித்து விட்டது.

சோமுவும் அந்தச் சம்பவத்தை அதே கிழவன் வர்ணிக்கும்போது கேட்டவன் தானே? அவன் மட்டும் நிம்மதியாகக் கலவரமின்றி உறங்கக் காரணம்? ஒரு வேளை அவன் எதற்கும் கலங்காத கல்நெஞ்சனா யிருக்கலாமோ?

2.

எனது பூர்வீகம் பணம்பட்டிக் கிராமம். என் தந்தை அவ்வூரை விட்டு மதுரைக்குக் குடியேறியபோது, எனக்கு ஐந்து அல்லது ஆறு வயது இருக்கலாம். அதற்கப்புறம் இருபது வருஷங்களாக நான் அந்த ஊரையே எட்டிப் பார்த்தது கிடையாது. இப்போதுகூட ஒரு வழக்கு சம்பந்தமாக வக்கீல் எனது பூர்வீக நிலத்தின் பட்டா நம்பரைக் கேட்டிரா விட்டால், நான் இங்கு வரச் சந்தர்ப்பமே நேர்ந்திருக்காது.

பணம்பட்டிக் கிராமம் கூப்பிடு தூரத்தில் இருக்கும்போதே வருபவர்களை முதலில் வரவேற்பது, அவ்வூர் எல்லையில் இருக்கும் பனந்தோப்புதான். தோப்புக்குள் நுழைந்து கொஞ்சதூரம் நடந்து வந்தால் ஓர் ஓடை இருக்கும். அதன் பக்கத்தில் ஒரு பெரிய ஆலமரம் நின்று கொண்டிருக்கும். அவ்வூருக்கு விருந்தாளிகளாக வருபவர்களெல்லாம் அந்த ஆலமரத்தின் நிழலில் கொஞ்சம் தங்கி இளைப்பாறிவிட்டு, அதற்கப்புறந்தான் ஊருக்குள் பிரவேசிப்பது வழக்கம்.

இவையெல்லாம் எனக்குக் கனவு கண்டதுபோல் தெரிந்தது. ஓடையின் கரைமேல் தாழ்ந்து பரவிய காவல் மரத்துக் கிளையில் இருந்துகொண்டு, "ஆத்தா வீட்டுத் தென்ன மரம் சாயுதோ சாயுது!" என்று சொல்லிக் கொண்டே மடுவில் குதிப்பது; சலவைத் தொழிலாளிகள் கட்டி வைத்திருக்கும் அடுப்புகளை உடைத்துவிட்டு அவர்களிடம் திட்டு வாங்குவது—இவையெல்லாம் என் இளம் பிராயத்துத் திருவிளையாடல்கள். இவற்றைப் பற்றியெல்லாம் என்னுடன் துணையாக வந்த என் நண்பன் சோமுவிடம் சுவாரஸ்யமாகச் சொல்லிக் கொண்டே நான் வழி நடந்தேன்.

அந்தி மயங்கும் வேளை. ஊர் மணியக்காரரிடம் சென்று பல்லைக் காட்டிக் கெஞ்சிப் பட்டா நம்பரைக் குறித்துக் கொண்டோம். உடனே எங்கள் ஊருக்

குத் திரும்புவதென்றால் இருட்டி விடும். ஆகையால் அன்றிரவை அங்கேயே கழிப்பது என்று முடிவு கட்டினோம். ஆனால் படுப்பதற்கு இடம் வேண்டுமே! —அதற்காக அந்த ஊருக்கு வடகோடியி லுள்ள களத்துமேட்டுச் சத்திரத்துக்குப் போக இருவரும் வேகமாக நடையைக் கட்டினோம். ஏனெனில், எங்களுக்கு முன்னால் எந்தப் பரதேசிப் பண்டாரங் களாவது அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டு விடக் கூடாதல்லவா?

நல்ல வேளையாக அங்கே எங்களுக்குப் போட்டியாக ஒருவரும் வந்து விடவில்லை. ஆனால், அந்தச் சத்திரத்திற்குள் மனிதர்கள் புழங்கிப் பல வருஷங்கள் ஆனது போல் தோன்றிற்று. ஒட்டடைகள் சரஞ்சரமாக ஊஞ்சலாடிக் கொண்டிருந்தன. தூரிஞ்சல்கள் அடுத்தாற் போலிருக்கும் தோப்புக்குள்ளிருந்த இலுப்பைப் பழங்களையும், பின்னைக் கொட்டைகளையும் கொண்டுவந்து நிரப்பிச் சத்திரத்தை அசுத்தப்படுத்தியிருந்தன. போதாக் குறைக்கு நாய் ஒன்று ஒரு மூலையில் குட்டி போட்டிருந்தது. 'சத்திரம் இப்போது அந்தக் குடும்பத்தின் சுயாதீனத்தில்தான் இருக்கிறது போலும்!' என்று எண்ணிக்கொண்டோம்.

சத்தம் செய்யாமல் மேல் துண்டால் தரையைத் தட்டிவிட்டு, ஆளுக்கொரு செங்கல்லை எடுத்து வந்து தலைக்கு வைத்துக்கொண்டு படுத்துவிட்டோம். படுத்த ஆயாசம் தீரவில்லை; அதற்குள் தலை நரைத்த கிழவன் ஒருவன், எங்கள் சமீபத்தில் வந்து தன் சொர சொரப்பான தாடிமயிர் என்மேல் உராயும்படியாக என்னைக் குனிந்து பார்த்தான்.

எதிர்வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த அந்தக் கிழவன் நீண்ட நேரம் எங்களையே கவனித்துக் கொண்டிருந்ததை நான் கவனித்தேன். ஆனால் பொதுச் சத்திரத்தில் படுக்கக்கூடவா பிறரைக் கேட்கவேண்டும் என்று அலட்சியமாக இருந்துவிட்டேன். அதைக் கேட்கத்தான் ஒருவேளை வந்துவிட்டானோ என்று நான் நினைக்கும்போதே "தம்பிங்க அசலூரிலேருந்து வந்திருக்காப் போலே யிருக்கு!" என்றான் அந்தக் கிழவன்.

"ஏன், தாத்தா! இங்கே படுக்கலாமில்லே?"


"படுக்கலாம், தம்பி! அதைப் பத்தி ஒண்ணுமில்லே. யாரோ ஒரு தர்மராசா கட்டி வைச்சாரு; அதிலே படுக்கிறதை வேணாமுன்னு சொல்ல நான் யாரு? ஆனா விசயம் தெரிஞ்சா நீங்களாவே எந்திரிச்சிப் போயிடுவீங்க!" என்று கிழவன் புதிர் போட்டான்.

இருவரும் ஆச்சரியத்தால் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். கிழவன், "என் பின்னாலே வாங்க; விஷயத்தைச் சொல்றேன்!" என்று கூறிவிட்டுப் பிகுவோடு நடையைக் கட்டினான். இருவரும் வாரிச் சுருட்டிக்கொண்டு அவனைப் பின் தொடர்ந்தோம்.

எதிர்ப்புறத்தில் இருபது கஜ தூரத்துக் கப்பாலிருந்த ஒரு குடிசைக்குள் நுழைந்த கிழவன், கயிற்றுக் கட்டிலைக் கொண்டு வந்து திண்ணையில் போட்டு எங்களை உட்காரச் சொன்னான். பிறகு ஒரு கந்தல் பாயைக் கொண்டு வந்து வாசற்படியில் விரித்துவிட்டுத் தானும் உட்கார்ந்து கொண்டான். தொண்டையை ஒருமுறை கனைத்துக் கொண்டு கதையை ஆரம்பித்தான்.

* * *

"இந்த ஊரிலே அப்போது பெரிய பணக்காரர் சங்கரம் பிள்ளைதான். அவ



ருக்கு ஏராளமான நிலபுலங்களுண்டு. அதைக் கண்காணிக்க வேலைக்காரர்களுக்கும் குறைவில்லை. அவரிடம் தலைமுறை தலைமுறையாக உழைத்தவன் பொன்னி. கறுப்பா, ஒல்லியா, வெடவெடன்னு இருப்பான். ஒரு நாள் கூழாக்குவதற்குக் கம்பு இல்லாமல் தன் மகனைப் பிள்ளை வீட்டுக்கு அனுப்பி வைத்தான். அந்தப் பையனுக்கு அப்போது ஏழு எட்டு வயது இருக்கும். அந்த வீட்டு எசமானர், 'தொம்பைக்குள் இருக்கிறதை என்னாலே இப்போது எடுக்க முடியாது; வேணும்னு நீயே இறங்கி எடுத்துக்கிட்டுப் போடா!' என்று சொல்லி விட்டாரு! — பாவி மனிசன்! ஊரார் வீட்டுப் பிள்ளைதானே, அவருக்கென்ன வந்திச்சு? நாங்களாயிருந்தால் பிள்ளைகளைக் கம்புக் கூட்டுக்கிட்ட நெருங்க விடமாட்டோமே!

"அறியாத குழந்தை என்ன பண்ணும்? ஏணியைச் சாத்தி ஓசர ஏறித் தொம்பைக்குள் குனிந்து கம்பைப் படி நிறைய அள்ளிக்கிட்டு இறங்க இருந்திச்சு. அந்தச் சமயத்திலே பாருங்க — பிள்ளைக்கு அஞ்சு வயசிலே ஒரு மகன்; பொல்லாத துடுக்குத்தனம் செய்யும். அது எங்கிருந்தோ எமனுட்டம் ஓடி வந்து, ஏணியை இரண்டு கையாலும் வாரி விட்டுட்டுது! அப்புறம் என்ன? குழந்தை பதைபதைச்சித் தொம்பைக்குள் தலைகீழாக விழுந்துச்சு; கம்பு வழ வழான்னு இருந்ததினாலே குழந்தையை அடியிலே கொண்டு போய்ச் சொருகிடிச்சு; விசயம் தெரிஞ்சதும் பொன்னி ஓடி வந்து பிள்ளை காலிலே விழுந்து, 'அநியாயமா என் மகனைக் கொன்னுட்டீங்களே; இப்போ எனக்கு யார் இருக்காங்க? என் மவன் பெரியவனா வளர்ந்து என்னைக் காப்பாத்தும்னு நெனைச்சிருந்தேனே!' என்று அழுது புரண்டான். மனிசன் கொஞ்சமாச்சும் இரக்கப்பட்டு அவனைச் சமாதானப் படுத்தணுமே! ஊஹூம்; அதுக்குப் பதிலா 'யாருடி கொன்னுட்டா? கொஞ்சம் பொறுடா, வந்து இறங்கி எடுத்துத் தரேன்னு சொன்னேன். உன் மகன் தாங்கலே. யாருக்கும் தெரியாமல் எடுத்துக்கிடலாமுன்னு இறங்கிச்சு. அது கடவுளுக்கே பொறுக்கல்லே! இப்போ நீதான் திருடி வரச் சொன்னேன்னு உன் மேலேயே 'கேஸ்' போடறேன், பார்!' என்று பிள்ளை அவனைப் பயமுறுத்தி அனுப்பி வைச்சிட்டாரு!



"பாவம், மகனைப் பறி கொடுத்தது மல்லாமல் தன் மேலேயே பழியையும் சுமத்தினால் அவன் என்ன பண்ணுவான்? கஷ்டம் தாளாமல் அவனுக்குப் பைத்தியம் பிடிச்சுட்டது. அப்புறம் அவன் 'என் மகனைக் கொன்னுட்டீங்களே, என் மகனைக் கொன்னுட்டீங்களே!'ன்னு ஊரெல்லாம் சுத்திக்கிட்டுத் திரிஞ்சான். கடைசியிலே இந்தச் சத்திரத்திலே வந்து படுத்துக்கிட்டு அன்னந்தண்ணி இல்லாமல் உயிரை விட்டுவிட்டான். அவனோடே ஆவி இப்போது அங்கே சுத்திக்கிட்டுத் திரியுது. அது நம்மை ஒண்ணும் பண்ணிப்பிடாது. ஆனா உங்களைப் போல் புதிசா வந்தவங்க மிரண்டு போயிடுவாங்க. அதுக்காவத்தான் அங்கே படுக்கக் கூடாதுன்னேன்!" என்று சொல்லிவிட்டுக் கிழவன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான்.

பிறகு, "ஒண்ணு சொல்ல மறந்துட்டேனே, தம்பி! அதுக்கு அப்புறம் அந்தச் சங்கரன் பிள்ளை குடும்பம் கெட்டே போச்சு! இந்த ஊரிலே இருக்கவே பிடிக்காம அவங்க எங்கேயோ போயிட்டாங்க. அந்தப் பொன்னிக்கு ஒரு பெண்ணுகூட இருந்திச்சாம். அதை அவன் பாட்டன் அப்பவே அழைச்சிக்கிட்டுப் போயிட்டான்னு கொஞ்ச நாளைக்கு

தெய்வச் செயல்!



கணவன் (மனைவியிடம்):— உஸ்.........கத்தாதே! இரும்புப் பெட்டியைக் கீழே கொண்டு போய் வைக்க ஒரு மாசமா ஆளைத் தேடிண்டிருந்தேன்; ரொம்பக் கூலி கேட்டாளுங்க! ஏதோ தெய்வச் செயலா திருடனுங்க கீழே தூக்கிண்டு போறானுங்க!

முன்னேதான் கேள்விப் பட்டேன்!'' என்றான்.

கதையைச் சொல்லி முடித்ததும் கிழவனின் கண்கள் கலங்கின. அதைப் பார்த்து என்னுடைய கண்களும் கலங்கின. ஏனெனில் அவன் சொன்ன கதைக்கும் எனக்கும் சம்பந்த மிருந்தது!

3

சூட்டிச்சுவரின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த கழுதை உச்சஸ்தாயியில் பிடித்த சுருதியைச் சிறுகச் சிறுக இறக்கிக்கொண்டே வந்து நிறுத்தியது. திடுக்கிட்டெழுந்த சோமு நான் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, ''என்னடா, பாலு! இன்னும் ஏன் தூங்கவில்லை?'' என்று கேட்டுக் கொண்டே வந்து என் பக்கத்தில் உட்கார்ந்தான்.

''கிழவன் சொன்னானே, இறந்துபோன பொன்னிக்கு ஒரு பெண் இருக்கிறாளென்று! அவளை எங்கே கண்டு பிடிக்கலாம்?—ஐயோ! அவள் உயிருடன் இருப்பாளா? அல்லது......'' என்று அவன் கொஞ்சமும் எதிர்பாராத விதமாக ஆரம்பித்தேன் நான்.

''அட, பைத்தியமே! என்னடா இது? எவனோ செய்த பழிக்கு நீ ஏன் இப்படி அவதிப்படுகிறாய்?'' என்று கேட்டான்.

''சோமு! நீ இன்னும் உண்மையை அறிந்துகொள்ள வில்லை. நான்தான் அந்தப் பொன்னியின் பிள்ளையைக் கொன்ற பழிகாரன். என் இளமைப் பருவத்துச் சேஷ்டையால் நிகழ்ந்த சம்பவம் அவனுடைய குடும்பத்தை எவ்வளவு தூரம் பாதித்து விட்டது!'' என்று பிரலாபித்தேன் நான்.

ஆச்சரியத்தால் தன்னையே மறந்து உட்கார்ந்து விட்டான் சோமு. நான் அவனுடைய தோளின் மீது கையை வைத்து, ''சோமு! அவளைக் காப்பாற்றுவது மட்டும் அல்ல; அவள் உண்மையில் உயிருடன் இருந்து எனக்குக் கிடைப்பாளேயானால் இறந்து போன என் மனைவியின் ஸ்தானத்தில் அவளை வைத்து நான் பூஜிக்கவும் தயார்!'' என்று ஆவேசம் வந்தவன்போல் கத்தினேன்.

சோமு என்னைத் தேற்ற வகை தெரியாமல் விழித்தான். மறுநாள் பொழுது விடிந்ததும் இருவரும் ஊர் வந்து சேர்ந்தோம்.

பல நாட்கள் கோயில் குளம், திருநாள் தீர்த்தம், பஸ் ஸ்டாண்டு, இங்கெல்லாம் யார் யார் பாட்டனும் பேத்தியுமாகக் காட்சி யளிக்கிறார்களோ, அவர்களிடமெல்லாம் சென்று வட்டமிட்டது என் பார்வை. அவர்களுடைய ஊர் பேர்களையும் விசாரித்துப் பார்த்தேன்; பலன் ஒன்றும் இல்லை.

இந்நிலையில், ஒருநாள் என்னுடைய குழந்தை மணியைத் தூக்கி வைத்துக் கொண்டு வேலைக்காரச் சின்னி பராக்குக் காட்டிக் கொண்டிருந்தாள். வீட்டு வேலைகளைச் செய்ய நாழியாகி விடவே அவனைக் கீழே இறக்கிவிட்டாள். அவ்வளவுதான்; ஒரே அடம் பிடித்து அவன் அழ ஆரம்பித்துவிட்டான். மறுபடியும் அவனைச் சமாதானப்படுத்துவதற்காகச் சின்னி ஒரு மாம்பழத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள். அதை அவன் வாங்கவில்லை. கொஞ்ச நாளைக்கு முன்புதான் புதிதாக வாங்கி வைத்திருந்த ஸெலுலாய்ட் பொம்மையைக் கொண்டு வந்து கொடுத்தாள். அதையும் மணி தூர வீசி எறிந்து விட்டான். அப்புறம் சின்னியின் முதுகைக் காட்டச் சொல்லி

இரண்டடி அடித்த பிறகுதான் மணியின் மனது சமாதான மடைந்தது.

அவன் மெல்லிய கரங்களால் அடி பட்டதைத் தனக்கொரு பெருமையாக எண்ணி இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்திக்கொண்டு அழுவதைப் போல் பாசாங்கு செய்தான் சின்னி. அவன் அழுகையைக் கண்டதும் அவன் முகத்தில் ஒரு மகிழ்ச்சி பூத்தது.

சரிதான்; ஏழைச் சிறுவனின் மரணத்தில் மகிழ்ச்சியைக் கண்ட என்னுடைய சீமந்தப் புதல்வன்தானே இவன்? பழிகாரக் குடும்பத்தின் பரம்பரைச் செயலில் ஈடுபடுவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது!

மூணைக்கும் பருவத்திலேயே இத்தகைய அகம்பாவத்திற்கு இடந் தரக் கூடாது என்று என் அநுபவம் உணர்த்தியதால், பிரம்பை எடுத்து வந்து அவனை ஒரு மிரட்டு மிரட்டிவிட்டுப் பழையபடி வந்து உட்கார்ந்து ஜன்னல் வழியாகப் பார்வையைச் செலுத்தினேன்.

என்ன ஆச்சரியம்! கண்கெட்ட கிழவன் ஒருவன்; அவன் கையில் கோலைக் கொடுத்து மற்றொரு நுனியைத் தான் பிடித்துக்கொண்டு வழிகாட்டிச் செல்கின்றாள் ஒரு சிறுமி. அவளுடைய கக்கத்தில் பிச்சைப் பாத்திரம் ஒன்றும் பந்தோபஸ்தாக இருக்கிறது.

ஒருவேளை அவள் அந்தப் பெண்ணாகத்தான் இருக்குமோ? — விசாரிக்கலாம் என்று எழுந்தேன். அதற்குள் சின்னி தன்னுடைய வேலைகளை யெல்லாம் முடித்து விட்டுத் தயங்கிய வண்ணம் எனக்கு எதிரே வந்து நின்றாள்.

"என்ன சமாசாரம்? வேலையெல்லாம் முடிந்து விட்டதோ?" என்றேன்.

"எல்லாம் செய்துவிட்டேன். நாளைக்கு எங்கள் வீட்டிலே திவசம். ஒருநாள் லீவு வாங்கிக்கிட்டு வரச்சொன்னாங்க, தாத்தா!"

"யாருக்குத் திவசம்?"

"எங்க அம்மாவுக்கு!"

"உனக்கு அம்மா இல்லையா?—ஐயோ பாவம்! உங்கள் அம்மா யாரு?"

"அவுங்களை உங்களுக்கு எப்படிங்க தெரியும்? எங்க அம்மா பேரு பொன்னம்மா. பொன்னின்னு கூப்பிடுவாங்க!"

"என்ன! பனம்பட்டிக் கிராமத்திலே இருந்த பொன்னியா? பைத்தியம் பிடித்து இறந்தாளே, அந்தப் பொன்னியா!" என்று நான் பரபரப்புடன் கேட்டேன்.

எல்லாவற்றிற்கும் சின்னி ஒரேயடியாகத் தலையை அசைத்தாள். நான் அவள் கரங்களைப் பிடித்துக்கொண்டு, "சின்னி! நீ இங்கேயா இருக்கே? உன்னைக் காணாமல் நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன், தெரியுமா?" என்று சொல்லிக் கொண்டே துக்கம் தொண்டையை அடைக்க நான் விக்கி விக்கி அழுதேன்.

அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை; மிரள மிரள விழித்தாள்.

மறுநாள் சந்நிதியில் கிழவனின் ஆசீர்வாதத்தோடு அவன் கழுத்தில் நான் தாலியைக் கட்டினேன். அந்த ஒரு மஞ்சள் கயிற்றினால் எனக்கும் என் குடும்பத்திற்கும் ஏற்பட்டிருந்த பழியைப் போக்கிக்கொண்டேன் என்பதை நினைத்த போது என்னையும் அறியாமல் என் மனம் பெருமிதம் அடையத்தான் செய்தது.

அப்படியும் இருக்கலாம்!



"டாக்டர் பட்டாபி சீதாராமய்யா காங்கிரஸ் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தியைக் கேட்டு ஒவ்வொரு ஆந்திரரும் தாம் ஆறு அங்குலம் உயர்ந்து விட்டதாக நினைத்துக் கொண்டார்கள்!" என்று கனம் கலா வெங்கட்ராவ் தமது அறிக்கையில் கூறி யிருக்கிறார். ஸ்ரீ சந்தோஷநாதம் பூரித்துப் பெருத்தும் போயிருக்கக்கூடும் அல்லவா?

ஒரே நிமிஷத்தில்

ஸோமாஸ்

“உண்மையை ஆணித்தரமாக அச்சமின்றி எழுதுவது ‘குண்டுணி’தான்!” என்று குண்டுணிப் பத்திரிகை எழுதும்.

மறுநாள் “உண்மையை உண்மையாகவே எழுதுவது ‘புரளி உலகம்’தான்!” என்று ‘புரளி உலகம்’ பத்திரிகை எழுதும்.

“தனக்குச் சரி என்று தோன்றும் எந்த விஷயத்தையும் ‘குண்டுணி’ தைரியமாக வெளியிடும்” என்று ‘குண்டுணி’ப் பத்திரிகையில் ஒரு குறிப்பு வெளி வந்தால், ‘புரளி உலகம்’ அதைப் பார்த்து விட்டுச் சும்மா இருந்து விடாது. “தனக்குத் தவறு என்று தோன்றும் எந்த விஷயத்தையும் ‘புரளி உலகம்’ அடித்து எழுதத் தவறியதில்லை” என்று அடுத்த இதழில் வெளியிடும்.

இம்மாதிரி போட்டியும் பொறாமையும் இரண்டு பத்திரிகைகளுக்கு மிடையே வளர்ந்துகொண்டே போயிற்று.

இந்தப் பத்திரிகைப் போட்டி ஸ்ரீமான் சுதர்சனத்துக்கு மிகவும் வேதனையைத் தந்தது. அவருக்கு எப்படியாவது இரண்டு பத்திரிகைகளையும் ஒத்துப் போகும்படி செய்ய வேண்டும் என்று தோன்றியது. யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தார். அதாவது, இரண்டு பத்திரிகையின் ஆசிரியர்களையும் தம் இல்லத்துக்கு அழைத்து, சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தி, ராஜியாகப் போகு டி செய்ய வேண்டும் என்பதுதான் அந்த யோசனை.

அந்த ஏற்பாட்டின்படி ‘புரளி உலகம்’ பத்திரிகையின் ஆசிரியருக்கும் ‘குண்டுணி’ப் பத்திரிகையின் ஆசிரியருக்கும் சுதர்சனம் தனித் தனியே அழைப்புகள் அனுப்பினார்.

உடனே அவர்களுக்கு விருந்தளிக்கவும் ஏற்பாடு செய்தார். இன்னும் பல நண்பர்களையும் விருந்துக்கு அழைத்தார். குறிப்பிட்ட நாளில் சுதர்சனத்தின் வீட்டில் எல்லோரும் வந்து சேர்ந்தனர். கொஞ்சம் நாழிகை கழித்து, ‘குண்டுணி’யின் ஆசிரியர் வந்தார். சுதர்சனம் அவரை அன்புடன் வரவேற்றார். “நமஸ்காரம், மிஸ்டர் சுதர்சனம்! நீங்கள் விருந்துக்கு அனுப்பிய அழைப்பு வந்து சேர்ந்தது. நான் கொஞ்சம் தாமதமாக வந்துவிட்டேன் என்று தோன்றுகிறது. மன்னிக்க வேண்டும்” என்றார் ‘குண்டுணி’ப் பத்திரிகையின் ஆசிரியர்.

“அதெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் சரியாய்த்தான் வந்திருக்கிறீர்கள்” என்று உபசாரமாகச் சொல்லிவிட்டுச் சுதர்சனம் ஏதேதோ விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். அரசியல் சமூகம், பொருளாதாரம், வர்த்தகம் முதலிய பிரச்னைகளை எல்லோருமாகச் சேர்ந்து அலசினார்கள்.

சுவாரஸ்யமான சம்பாஷணைக்கிடையே சுதர்சனம் சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தை அடிக்கடி பார்த்தவண்ணமா யிருந்தார். இது ‘குண்டுணி’யின் ஆசிரியரை உறுத்தியது.


“என் ஸார், யாருடைய வருகைக்காகக் காத்திருக்கிறீர்கள்? அடிக்கடி மணி பார்க்கிறீர்களே!” என்று அவர் துணிந்து கேட்டுவிட்டார்.

சுதர்சனம் மணியைப் பார்த்துக் கொண்டே, “ஆமாம், ‘புரளி உலகம்’ பத்திரிகையின் ஆசிரியரையும் சரியாகப் பத்து மணிக்கெல்லாம் வரும்படி எழுதியிருந்தேன். மணி பதினொன்று ஆகிவிட்டதே! உங்கள் இருவருக்கும் சமரசம் உண்டாக்க நினைத்துத்தான் அவரையும் அழைத்திருந்தேன். நீங்கள் வருவது தெரிந்தால் அவர் வரமாட்டார் என்று எண்ணி உங்களுடைய வருகையைக்கூட நான் அவருக்குத் தெரிவிக்கவில்லை. அவர் வந்தால் ஒரே நிமிஷத்தில் உங்கள் இருவரையும் ஒற்றுமைப் படுத்தி வைத்துவிட முடியும் என்று நினைக்கிறேன்” என்றார்.

“ஒரு நிமிஷம் என்ன, ஒரு வருஷம் நீங்கள் முயன்றாலும் எங்கள் இருவரையும் ஒற்றுமைப்படுத்தி வைக்க முடியாது!” என்றார் ‘குண்டுணி’ப் பத்திரிகையின் ஆசிரியர்.

“ஏன்?” என்று கேட்டார் சுதர்சனம்.

“உங்களுக்குத் தெரியாதா? நான்தானே இரண்டு பத்திரிகைகளையும் நடத்தி வருகிறேன்!” என்றார் அந்தப் பொல்லாத ஆசிரியர்.



காணாமற்போன கரடி வைத்தியர்

பி. எஸ். மணி

ஒரு சமயம் சிங்க ராஜாவுக்குப் பலமான வியாதி வந்து விட்டது. சிங்க ராணி பக்கத்தில் உட்கார்ந்து வேண்டிய உதவிகள் செய்து கொண்டிருந்தாள்.

சிங்க ராஜா வியாதியால் கஷ்டப் படுகிறார் என்ற செய்தி காடு முழுவதும் கண நேரத்தில் பரவியது. ஒவ்வொரு மிருகமும் சிங்க ராஜாவிடம் வந்து தங்கள் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துவிட்டுச் சென்றன.

"நான் போய் வைத்தியரை அழைத்து வருகிறேன்" என்று கூறி விட்டுத் தன் வீட்டை நோக்கி நடந்தது முயல். குரங்கு வரும்பொழுதே சிறிது வெங்காயத்தைக் கண்ணில் தடவிக்கொண்டு வந்து, சிங்க ராஜாவுக்கு முன்னால் கண்ணீரைப் பொலபொல வென்று சொரிந்து விட்டுச் சென்றது.

இவ்வாறு எல்லா மிருகங்களும் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு வந்தபோது, "அரசே! எல்லா மிருகங்களும் தங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கின்றன. ஆனால் அந்தக் கர்வம் பிடித்த நரி மாத்திரம் வரவில்லை" என்று ஓநாய் கோள் சொல்லி, நல்ல பெயர் சம்பாதித்துக் கொள்ளப் பார்த்தது.

அவ்வளவுதான்; சிங்கராஜாவுக்குத் தன்னுடைய வியாதிகூட ஒரு வருத்தமாகத் தோன்றவில்லை. தன்னை நரி அவமதித்ததுதான் பெரிய வருத்தமாகத் தோன்றிற்று. உடனே அது கோபத்துடன், "நாளைக் காலைக்குள் நரியைக் கொண்டு வர வேண்டும். அதற்கு மரண தண்டனை விதித்திருக்கிறேன்!" என்று தன் கழுதை மந்திரியிடம் கட்டளையிட்டது.

கழுதை மந்திரி, "அப்படியே ஆகட்டும்!" என்று தலையைப் பலமாக அசைத்துவிட்டு அங்கேயே நின்றது.

"ஏன் நிற்கிறாய்?" என்று சிங்க ராஜா உறுமியதும், கழுதையின் பாடு வெலவெலத்துப் போய் விட்டது. அதற்கு மேல் ஒரு நிமிஷம் கூடத் தாமதிக்காமல் அது சிங்க ராஜாவின் அரண்மனையை விட்டு வெளியே விரைந்து சென்றது.

கழுதை மந்திரியைத் தொடர்ந்து எல்லா மிருகங்களும் பயத்தால் நடுங்கிக் கொண்டே தங்கள் தங்கள் வீடுகளை நோக்கிச் செல்ல ஆரம்பித்தன. ஓநாய்க்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஒரு பெரிய காரியத்தைச் சாதித்து விட்ட பெருமையுடன் அது தன் வீட்டை நோக்கி மார்பைப் பார்த்துக்கொண்டு நடந்தது.

அன்றிரவு நரியிடம் அனுதாபம் கொண்ட ஒரு காட்டுப் பூனை அதன் வீட்டைத் தேடிக்கொண்டு போயிற்று. நரி, காட்டுப் பூனையை வரவேற்று, "என்ன சேதி?" என்று விசாரித்தது. ஓநாய் சிங்க ராஜாவிடம் கூறியதைக் காட்டுப் பூனை எடுத்துச் சொல்லி விட்டு, "நீ இரவுக்கிரவே இந்தக் காட்டை விட்டுப் போய் விட வேண்டும். நாளை இங்கிருந்தால் உனக்கு மரண தண்டனை கிடைக்கும்" என்று எச்சரித்தது.

நரி அதை லட்சியம் செய்யவில்லை. மறு நாள் காலையில் அது ஓநாயின் வீட்டை அடைந்தது. நரியைக் கண்டதும் ஓநாய்க்குப் பயம் தாங்க முடியவில்லை. அதனிடம் நரி சந்தோஷத்துடன், "அண்ணா! இன்று நான் சிங்கராஜாவைப் பார்க்கப்போகிறேன். நீயும் வருகிறாயா?" என்று கேட்டது.

ஓநாய் முதலில் மறுத்தது. பிறகு நரிக்குக் கிடைக்கப் போகும் தண்டனையைப் பார்த்து மகிழ வேண்டுமென்று எண்ணிச் சம்மதித்தது.

இரண்டும் சிங்க ராஜாவின் அரண்மனையை அடைந்தன. ஓநாய் சற்றுத் தூரத்திலேயே நின்று கொண்டது. நரி மிகவும் களைப்படைந்தது போல் பாவனை செய்து கொண்டே தள்ளாடிய வண்ணம் சிங்க ராஜாவை நெருங்கியது. அதற்குப் பின்னால் அவ்வளவு நேரமும் தூங்கி வழிந்துகொண்டிருந்த கழுதை மந்திரியும் கைகட்டி வாய் பொத்தி வந்து நின்றது.

சிங்க ராஜாவுக்கு நரியைக் கண்டதும் கோபம் பொங்கி வந்தது. "நீ ஏன் நேற்று வரவில்லை?" என்று அது ஆங்காரத்துடன் கேட்டது.

நரி தயக்கத்துடன், "ராஜா! நான் நேற்று வந்திருப்பேன். ஆனால் மற்ற மிருகங்களைப்போல்வெறுங் கையுடன் வந்து தங்களைப் பார்த்து விட்டுப் போக எனக்கு மனமில்லை. மருந்துக்காக அடுத்த காட்டிலிருக்கும் கரடி வைத்தியரிடம் போயிருந்தேன். அவர் நல்ல மருந்து ஒன்று சொன்னார்......" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தது.



அதற்குள் சிங்க ராஜா இடைமறித்து, "என்ன மருந்து?" என்று ஆவலுடன் கேட்டது.

"அதுதான் தெரியவில்லை, அரசே! கரடி வைத்தியர் என்னிடம் அந்த மருந்தைத் தருகிறேன் என்று சொல்லி விட்டுக் கடைசியில் ஏமாற்றி விட்டார்!" என்று சொல்லி நரி கையைப் பிசைந்தது.

"ஏன்?" என்று கோபத்துடன் கேட்டது சிங்கராஜா.

"'உன்னை நம்பமாட்டேன்; உங்கள் காட்டிலுள்ள எனது நண்பர் ஓநாயை அனுப்பினால் அவரிடம் மருந்தைக் கொடுத்து அனுப்புகிறேன்' என்று கரடி வைத்தியர் சொல்லிவிட்டார். நான் உடனே அங்கிருந்து திரும்பி ஓநாயைத் தேடி அலைந்தேன். இப்பொழுதுதான் பார்க்க முடிந்தது. அதை இங்கு அழைத்து வந்திருக்கிறேன். அதனிடம் மருந்தைக் கட்டாயம் பெற்றுக்கொண்டு வந்தால்தான் நீ இந்தக் காட்டுக்குள் காலை வைக்கலாம் என்று நீங்கள் சொன்னால், உடனே அது மருந்தை வாங்கிக் கொண்டு வந்துவிடும்" என்று கூறி முடித்தது நரி.

உடனே சிங்கராஜா ஓநாயை அழைத்து, "நீ இப்பொழுதே அடுத்த காட்டிலுள்ள கரடி வைத்தியரிடம் சென்று மருந்தை வாங்கிக் கொண்டு வந்து சேரவேண்டும். இல்லாவிட்டால் நீ இந்தக் காட்டுக்குள்ளேயே காலடி எடுத்து வைக்கக் கூடாது!" என்று உறுமிற்று.

ஓநாய் பயத்துடன், "ஆகட்டும்" என்று சொல்லிவிட்டு, நரியைப் பரிதாபமாகத் திரும்பிப் பார்த்துக் கொண்டே புறப்பட்டது. அடுத்த காட்டுக்குச் சென்று அது கரடி வைத்தியரைப் பற்றி விசாரித்தது. எங்கு தேடியும் அதனால் கரடி வைத்தியரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர் எப்படி அகப்படுவார்? தான் சிங்கராஜாவிடமிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காக நரி பொய் சொன்ன விஷயம் ஓநாய்க்கு எப்படித் தெரியும்?



எதிர் பாராத உதவி

ரா. வீழிநாதன்

நாட்டிலே எங்கும் பஞ்சம் தாண்டவமாடியது. கிராமங்கள் அனைத்தும் பயிர் பூண்டு அற்றுப் பாலைவனமாகிக் கிடந்தன. இருள் கவிந்த இரவைப் போலப் பகல் பயங்கரமாகக் காட்சி அளித்தது. மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, உட்கார இடமின்றிக் கஷ்டத்துக் குள்ளாகி மிகவும் கேவலமான நிலையை அடைந்திருந்தனர். மக்களிடம் செலவழிக்கச் செல்லாக் காசுகூடக் கிடையாது. எங்கும் 'இல்லை'ப் பாட்டின் ஒலம்தான் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அப்பப்பா! என்ன கோரம்! தெய்வத்தின் திருவிளையாடலை என்ன வென்பது? கண்கள் குழி விழுந்து, வயிறு ஒட்டி, வாய் ஒட்டி மக்கள் சுரைக்காய் வற்றலாக—எலும்புக் கூடாகக் காட்சி அளித்தனர். 'தெய்வத்துக்கு என் இத்தனை கோபமோ?' என்று மக்கள் ஏங்கித் தவித்தனர்.

மாரிகாலம் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தவாறே மறைந்துவிட்டது. குளிர் காலம் கூனிக் குறுகிக் கொண்டு ஓடியது. கோடை வெயில் 'கொலை செய்துவிட்டுத் தன் மறு காரியம்' என்பது போல சிரித்துக் கொண்டிருந்தது. என்ன விசித்திரம்! பஞ்சம் இப்படியா தலைவிரித்தாட வேண்டும்? இயற்கையன்னை மக்களை இப்படி ஏமாற்றுவானேன்?

அந்தக் கிராமமும் அழுது வடிந்து கொண்டிருந்தது. குடிசைகளில் மினுக்கிக் கொண்டிருந்த அகல் விளக்குகளின் ஒளியைச் சந்திரன் திருடிக்கொண்டு விட்டான். நிலவு தன் நிழலில் அமர்ந்திருக்கும் குடிசைகளின் பரிதாபக் கதையைக் கேட்டவாறு காய்ந்து கொண்டிருந்தது. ஒரு புறம் நரிகள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. இன்னொரு புறம் நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன. இருளின் அதிதேவதையான நிசி தேவி மௌனமாக அந்த ஆடல் பாடல்களைக் கண்டு களித்துக் கொண்டிருந்தாள்.

முத்து சிந்தனையில் ஆழ்ந்தவாறு தன் குடிசையில் அமர்ந்திருந்தான். அவன் தூங்கி எத்தனையோ இரவுகள் ஆகி விட்டன. சிந்தனை அலைகள் அவனைத் தூங்க விட்டால் தானே? ஜமீன்தாருக்கு அவன் நிலவரி கட்ட வேண்டும். நிலவரி கட்டாவிட்டால் வீடு-வாசல், ஆடு-மாடு, ஏர் - கலப்பை, வயல் - வெளி அனைத்தையும் அவன் இழக்க வேண்டி வரும்.

முத்து ஏழைக் குடியானவன். யார் சொல்லையும் தட்டாமல் கேட்பவன். அவனுடைய ஆடு மாடுகள், எருமை முதலியவை, கடனுக்காக ஏலம் போய்விட்டன. வயலில் பிரவேசிக்கக் கூடாது என்ற கோர்ட்டார் உத்தரவும் அவன் மீது பிறப்பிக்கப்பட்டது. குடிசையின் மேற்கூரை வேயப் படாமல் சல்லடைக் கண்களைப் போலிருந்தது. ஒரே ஒரு பசு மட்டும் அவனிடம் பாக்கியிருந்தது. அதை அவன் நேசித்து வந்

"இத்தனை பாடா?" என்றுதான் அவனுக்குப் பட்டது.

பத்து வருஷங்கள் ஓடிவிட்டன. முத்துவே அந்தப் பண்ணையை விலைக்கு வாங்கிவிட்டான். முத்து தொழில் நுணுக்கங்களை நன்கு அறிந்தவன் ஆகிவிடவே லாபத்துக்கு மேல் லாபம் வந்து குவியலாயிற்று. ஆனால் சென்னைச் சீதோஷ்ண ஸ்திதி அவனுக்கு அவ்வளவாக ஒத்துக் கொள்ளவில்லை.

"நீங்களும் நாளுக்கு நாள் துரும்பாக இளைத்துப் போகிறீர்கள். எனக்கும் இவ்வூர் கட்டோடு பிடிக்கவில்லை. கடவுள் நமக்கு வேண்டியதைக் கொடுத்திருக்கிறார்; வாருங்கள் ஊருக்குப் போய், விவசாயத்தில் ஈடுபடுவோம். இந்த வாழ்க்கையில் ஒரு சுகமும் இருப்பதாகத் தெரியவில்லை" என்று தங்கம் சொன்னாள்.

தங்கம் சொல்வதைப் போலவே முத்துவும் எத்தனையோ தடவை யோசனை செய்தது உண்டு.

"பணம் ஏராளமாகச் சம்பாதித்துத்தான் நாம் என்ன செய்யப் போகிறோம்? பகல் பூராவும் வயலில் வேலை செய்துவிட்டு மாலையில் குடிசைக்கு வந்து கொண்டிருந்தோமே, அந்தக் காலத்துக்கு எந்த வகையிலும் ஈடாகாது இந்தக் காலம். அது இப்பொழுது கனவைப் போல் அல்லவா ஆகிவிட்டது!" என்றெல்லாம் எண்ணினான்.

சில நாட்களுக்கெல்லாம் முத்து தன் வியாபாரத்தை நிறுத்திவிட்டு, ஒரு செட்டியாருக்குப் பண்ணையை விற்றுப் பணத்தை வாங்கிக் கொண்டான்.

"எத்தனை ரூபாய் இருக்கிறது?" என்று கேட்டாள் தங்கம்.

"ஒரு லட்சத்துக்குக் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது" என்றான் முத்து.

தங்கம் சிலை போல முத்துவைப் பார்த்தவாறு நின்றாள்.

அன்றே இருவரும் புறப்பட்டு விட்டனர்.

இனிமை தாண்டவமாடும் மாலைப் பொழுது. வெகு நாட்கள் கழித்து முத்து ஊருக்குத் திரும்பி வந்திருந்தான். அவனுடைய பாழ் மனையில் ஒரு அழகிய கட்டிடம் எழும்பிக் கொண்டிருந்தது. அந்தக் காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் எத்தனை மாறுதல் என்கிறீர்கள். பணத்தின் மதிப்பே மதிப்பு! கிராமத்தார்கள் ஈபோல முத்துவை மொய்த்துக் கொண்டார்கள். அவன் அவர்களுக்குத் தன் விருத்தாந்தத்தைச் சொன்னான். அதேபோல, அவர்களிடம் பேச்சுக் கொடுத்ததில் 'கிராமத்து ஜமீன்தார் மிகக் கேவலமான நிலைமைக்கு வந்து விட்டார்' என்பதும் அவனுக்குத் தெரியவந்தது.

தன் பொன்னியின் நிலையை எண்ணி முத்து வருந்தினான். அது மிகவும் கிழமாகி எலும்புந் தோலுமாகக் காட்சி அளித்தது. முத்து அன்றைக்கே முதலியாருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்துப் பொன்னியைத் தன் வீட்டுக்கு ஓட்டி வந்துவிட்டான்.

அன்று ஜமீன்தாரின் கிராமமே ஏலம் போவதாக இருந்தது. ஜமீந்தாரின் மாளிகையில் ஏலக் கொட்டு கொட்டிக் கொண்டிருந்தது. பெரிய பெரிய வியாபாரிகள் கூடியிருந்தனர். சுகபோகத்தில்—மோகாந்தகாரத்தில் மூழ்கியிருந்த ஜமீன்தாருக்குத் தனது அவலநிலை தெள்ளென விளங்கியது.

முத்துவுக்கும் அந்தச் செய்தி எட்டியது. அவன் மிகவும் வருத்தமடைந்தான். தன் பண நோட்டுக்களை எண்ணிக் கட்டிக் கொண்டு முத்து புறப்பட்டான். முத்து ஏலத்தில் கிராமத்தை வாங்குவதற்காகத்தான் போகிறான் என்று தங்கம் எண்ணினாள். கிராமத்து மக்களும் 'அவன்தான் ஏலம் எடுப்பான்' என்று பேசிக் கொண்டார்கள்.

முத்து ஏலக் குரலைக் கேட்டான். தனது பழைய பயங்கர நாட்கள் அவன் கண்களுக்கெதிரில் காட்சி அளித்தன.

அவனுள்ளம் உதறல் எடுத்தது. எதிரிலே ஜமீன்தார் தலைகுனிந்த வண்ணம் உட்கார்ந்திருந்தார். முத்துவினால் தன்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை. அவன் சட்டென்று எழுந்து ஜமீன்தார் அருகில் சென்று, நோட்டுக் கட்டுக்களை வைத்து, "எசமான், நான் இம்மாதிரிக் கஷ்டத்தை அனுபவித்திருக்கிறேன். கடவுள் கிருபையில் மற்றவர்களுக்கு இந்தக் கஷ்டம் ஏழேழு ஜன்மத்துக்கும் வேண்டாம். இந்தாருங்கள் இந்தப் பணத்தைக் கொண்டு தங்கள் கிராமத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். நான் இவ்வளவு ரூபாய் சேர்த்ததற்கு நீங்கள்தான் மூலகாரணம். ஆகவே இந்தப் பணம் எல்லாம் உங்களுடையதுதான்" என்று சொன்னான். ஜமீன்தார் ஆச்சரியத்தினால் அகல விரிந்த கண்களுடன் முத்துவை நன்றி பொங்கப் பார்க்கலானார்.

(ஸிந்திக் கதையைத் தழுவியது)

வட்ட மேஜை

மதுரை
1—11—48

காந்தி விளக்கு!

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

இவ்வாரக் 'கல்கி'யின் அட்டை வண்ண ஓவியம் வெகு நேர்த்தியாக அமைந்துள்ளது. ஓவியம் கற்பனை செறிந்து, கலைச் சுவை மலிந்து, கருத்துப் பொதிந்ததாகத் துலங்குகிறது. விளக்கின் உட்புறத்திலே எரி சுடரை நோக்கி அண்ணல் காந்தி எண்ணத் தாழ்ந்து மோனத் தமர்ந்திருப்பது பொருள் தருகிறது! மொத்தத்தில் காந்தி விளக்கு கலை விளக்கம் செய்கிறது. அட்டைப்பட விளக்கம் அழகுக்கழகு செய்வதுபோல உருக்கமாகவும் சிறந்ததாகவும் இருக்கிறது.

காந்தியடிகள் அமரரானது ஒரு வெள்ளிக் கிழமையன்று விளக்கு ஏற்றுகின்றபோதிலே. ஒவ்வோர் வெள்ளி மாலையும் விளக்கிலே சுடர் பொருத்தும்போது எனக்கு அமரரின் நினைவு தப்பாமல் வரும். காந்தி எனும் கூட்டினுள் அடங்கி நின்ற பெருஞ் சுடரே நம் நாடு முழுவதும் பரவி, ஒவ்வோர் வெள்ளி மாலையிலும், பல சிறு சிறு சுடர்களாக, ஒவ்வொரு வீட்டினுள்ளும் புகுந்து வாய்மை, இன்னா செய்யாமை எனும் கொள்கைகளை பரப்பி மடமை இருள் அகற்றுகின்றது என்பது எனது கருத்து!

'கல்கி' அட்டைப் படத்தில் உள்ளதை மாதிரியாகக் கொண்டு பித்தளை, வெண்கல விளக்குகள் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டால் தமிழகத்தோர் மகிழ்வார்கள்.

லலிதா ஸ்ரீநிவாசன்

பம்பாய்
1—11—48

காந்தி அட்டை

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு

சாந்த மூர்த்தி மகாத்மா காந்தியின் உருவப் படத்தைத் தாங்கிய இந்த வாரக் 'கல்கி' இதழ் கையில் கிடைத்தது. எல்லையில்லா ஆனந்தம் உண்டாயிற்று. என்றுமில்லாத உணர்ச்சி ஏற்பட்டது. மனம் புளகாங்கிதமடைந்தது. கை கூப்பி வணங்கினேன்.

எங்கள் அறையில் தீபாவளி இந்த வருடம் விமரிசையாகக் கொண்டாட வேண்டுமெனக் கூறினார்கள், என் நண்பர்கள். நான் இந்த வருடம் தீபாவளி விமரிசையாக நடத்தக் கூடாது என்ற கட்சியைச் சேர்ந்தவன். கட்டாயம் தடபுடலாக நடத்துவோம் என்றார்கள் அவர்கள். நடத்தக் கூடாது என்றேன் நான். இந்தச் சமயத்தில்தான் 'கல்கி' இதழ் கைக்கு வந்தது. அட்டைப் படம் என் நண்பர்களின் மனதை மாற்றியது. இந்த வருடம் தடபுடலாக ஒன்றும் கிடையாது. காலையில் எழுந்து குளித்தோம். 'கல்கி' புத்தகத்தை அலங்கரித்தோம். கை கூப்பி வணங்கினோம். புதுக் கோடி கிடையாது. பட்டாசு கிடையாது.

பம்பாயில் ஹிந்தி, மராட்டி, குஜராத்தி முதலிய பாஷைகளில் தீபாவளிக்காக எவ்வளவோ புத்தகங்கள் வந்து குவிந்து கிடக்கின்றன. ஆனால் 'கல்கி' இதழின் மேல் அட்டைப் படம் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போ லிருக்கிறது. அநேக குஜராத்தி, மராட்டி நண்பர்கள் இந்த வாரக் 'கல்கி' இதழை வாங்கி, மேல் அட்டைப் படத்தைக் கத்தரித்து சட்டம் போடக் கொடுத்திருக்கிறார்கள்.

வே. ராமநாதன்.

[இம்மாதிரியே, 'கல்கி'யின் தீபாவளி இதழ் அட்டைப் படத்தைப் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்திருக்கும் அன்பர்கள் அனைவருக்கும் வந்தனம். — ஆசிரியர்]

இளையான்குடி
28—10—48

பர்மாவில் இந்தியர் நிலம்

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

பர்மாவில் உள்ள விவசாய நிலங்களைத் தேசிய மயமாக்கப் போவதாக பர்மிய சர்க்கார் தெரிவித்துள்ளது. ஆனால் தேசிய மயமாக்கப்படும் நிலங்களுக்கு, நியாயமான நஷ்டஈடு கொடுப்பதே ஒரு சர்க்காரின் நீதியும், நேர்மையுமாகும். இதற்கு நேர்மாறாக, மிகக் குறைந்த அளவுள்ள ஒரு தொகையை நஷ்ட ஈடாகக் கொடுத்து, நிலச் சுவான்தார்களிடமிருந்து நிலங்களைக் கபளீகரம் செய்ய பர்மிய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது.

இதைக் கண்டு பர்மாவிலே 120 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரன் என்ற முறையிலே நான் பெரும் ஏமாற்ற மடைந்திருக்கிறேன்: இந்த 120 ஏக்கர் நிலமும் 1932-ம் வருஷம் ரூ. 22,000-க்கு வாங்கப்பட்டதாகும். இதற்கு வருஷா வருஷம் ரூ 375 வரியாகக் கட்டப்படுகிறது. சர்க்காரின் மதிப்புப்படி, இந்த நிலத்திற்கு வரியைப் போன்று 12 மடங்கு அதாவது ரூ. 4500 தான் நஷ்ட ஈடாகக் கிடைக்கும். நெல்லின் விலையோ இப்பொழுது யுத்தத்திற்கு முன்னிருந்ததைவிட நான்கு மடங்கு அதிகமாய் இருக்கிறது. நெல்லின் விலையுடன் நிலத்தின் விலையையும் எடை போட்டுப் பார்த்தால் நிலமும் முன் விலையைவிட நான்கு மடங்கு உச்சமடைந்திருக்கிறது. ஆகவே பர்மிய சர்க்காரின் நஷ்ட ஈடுக் கொள்கையால், குறிப்பாக அதிக நிலங்களையுடைய தென்னிந்திய நிலச் சுவான்தார்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். மோசடியாலோ பலாத்காரத்தாலோ பர்மிய மக்களிடமிருந்து நிலங்கள் கபளீகரம் செய்யப்படவில்லை. அவை சர்க்காரின் சட்ட திட்டத்திற்குக் கட்டுப்பட்டு வாங்கப்பட்டவையாகும். இதனை பர்மிய சர்க்கார் நன்கு அறிந்திருந்தும் இந்திய நிலச் சுவான்தார்களைப் பெரும் நஷ்டத்திற் குள்ளாக்குவது அநீதியாகும். ஆகையால் இந்த விஷயத்தில் நமது சர்க்கார் முக்கிய கவனம் செலுத்தி நியாயமான நஷ்ட ஈட்டை நாங்கள் பெறுவதற்கான முயற்சி எடுக்குமென்று நம்புகிறேன்.

கு. ச. ஷேக் அப்துல் காதர்

வேப்பேரி
20—10—48

ரிக்ஷா ஒழியுமா?

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

சென்னையில் எந்தத் தெருவில், எந்த நேரத்தில் நாம் பார்த்தாலும், நிச்சயமாக நம் கண்களில் படும் வஸ்துக்களில் ரிக்ஷா வண்டியும் ஒன்று. அவைகள் இல்லாத இடமே இல்லை. சில நாட்களுக்கு முன்பு, அரசாங்கம், இவைகளை படிப்படியாய்க் குறைத்து, பின்பு ஒரேயடியாய் ஒழிப்பதற்கு ஏற்பாடு செய்யப் போவதாய் ஒரு செய்தி வந்தது. ஆனால் இதுவரை அப்படி ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை.

நல்ல கடும் வெய்யிலில் வேலையில், இடுப்பு வஸ்திரத்தைத் தவிர வேறு ஒன்றும் அணியாத உடலோடு, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, உடம்பு முழுவதும் வியர்வை ஆறாய்ப் பெருக, சோர்ந்த முகத்தோடு, ஏங்கிய கண்களோடு, தள்ளாடும் நடையோடு, இழுக்க மாட்டாமல் இழுத்துக் கொண்டு இந்த ரிக்ஷாக்காரர்கள் ஓடும் காட்சியைப் பார்த்த எந்த 'மனிதத்தன்மை'யுள்ள மனிதனும் மனம் உருகாமல் இருக்க முடியாது.

மனிதனை மனிதனாக வாழவைக்க வேண்டுமென்று விரும்பினால், "நாம் எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு" என்று நமது அமர கவி சொன்னதை, எழுத்தோடு பேச்சோடு மட்டுமல்லாமல், நடைமுறையில் உறுதியாக்க விரும்பினால், இந்த ரிக்ஷாக்களை அடியோடு ஒழித்தல் மிக முக்கியமானதாகும்.

கூடிய சீக்கிரம், தைரியமாக முன்வந்து, இவைகளை ஒரேயடியாக, அரசாங்கம் ஒழித்துவிடும் என்று எதிர்பார்க்கலாமா?

நோ. அ. கு. பாலகோபால்

மதுரை.
23—10—48

புதுமுறை ஹிந்தி பிரசாரம்

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு

சனிக்கிழமை அன்று வழக்கம் போல் காப்பி சாப்பிட்டவுடன் நாற்காலியில் சாய்ந்தேன். மேஜை மேலே இருந்த 'கல்கி' இதழ் என் கவனத்தைக் கவர்ந்தது. ஏதோ புதையல் பெற்றவன் போல் ஆவலுடன் பத்திரிகையைப் புரட்டினேன். பார்த்துக் கொண்டே வந்த என்னை திடீரென்று தூக்கி வாரிப் போட்டது. ஸ்ரீ ரமன் அவர்கள் எழுதியிருந்த "மோசா புல் புல்" என்ற தலைப்புள்ள கதை தான் அதற்குக் காரணம். "மோசா புல் புல்" என்னும் தலைப்பைப் பார்த்த பின்னும், ஒரு ஹிந்தி அன்பன் அதைப் படிக்கத் தவறினால் அது கிடைத்த ரேஷன் கார்டைத் தொலைத்து விடுவது போலாகும். ஆகையால் மடமடவென்று ஒரே மூச்சில் படித்து முடித்துவிட்டேன்.

"அரே! ஹமாரே தோஸ்த் ரமன்!", "க்யோம் ரமன்! ஐஸே தேக்தே ஹோ?" "ஜரூர், ஜரூர் ரமன்! மை ஹூங் ரஞ்சன்" "ஓனர் ஷாதி கீ ஹோ கயீ", "டஹரோ! அபீ ஆதா ஹூங்" போன்ற சாதாரணமான சில சில ஹிந்துஸ்தானி வாக்கியங்களைப் புகுத்திக் கதையை எழுதியிருப்பது கண்டு ஹிந்துஸ்தானி ஞானம் கொண்ட எவராலும் புகழாதிருக்க முடியாது.

ஹிந்துஸ்தானியின் மதிப்பைக் குறைத்து விட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு வேலை செய்து வரும் ஒரு சில பேர் வழிகளுக்கு, இது வரையில் நடந்தது ஹிந்துஸ்தானி பிரசாரத்தின் அஸ்திவாரம் தான் என்றும், இனிமேல்தான் ஹிந்துஸ்தானியின் அரண்மனை உருவாகப் போகிறது என்றும் பறைசாற்றுவதுபோல் அமைந்திருக்கிறது "மோசா புல் புல்" என்னும் கதை.

பி. வி. ராமமூர்த்தி

கடலூர் O. T.
22—10—48

ஏன் இந்த வித்தியாசம்?

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

எங்களூரின் தற்கால கஷ்டநிவாரண ரேஷன் கடைகளில் டவுனுக்குள் இருப்பவர்களுக்கு 4 அவுன்ஸ் அரிசியும் கிராமத்திலிருப்பவர்களுக்கு 2 அவுன்ஸ் அரிசியும் கொடுக்கிறார்கள். ஏன் என்று கேட்டால், சர்க்கார் உத்தரவு என்று சொல்லுகிறார்கள். கிராமத்தில் இருப்பவர்கள் மட்டும் சாப்பிடாதவர்களா? டவுனில் இருப்பவர்கள் மட்டும் கிராமத்தார்களை விட அதிகமாகச் சாப்பிடுபவர்களா? அல்லது அதிகம் உழைப்பவர்களா என்பதே புரியவில்லை.

அதே போல் தற்கால ரேஷன் கார்டில் தீபாவளிக்காக கார்டு ஒன்றுக்கு 5 கெஜம் துணி விதம் கொடுக்கிறார்கள். அதுவும் கிராமத்தில் உள்ளவர்களுக்குத் துணி கிடையாதாம். இதன் அர்த்தம் என்ன?

மு. சிங்காரவேலு

நம்புதாளை
25—10—48

பிரயாணிகள் ஒட்டகங்களா?

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

தண்ணீர் கிடைக்காத பாலை வனங்களில் பிரயாணஞ் செய்பவர்கள் ஒட்டகங்களை உபயோகிப்பது வழக்கம். பல தினங்களுக்கு வேண்டிய தண்ணீரை ஒரே தினத்தில் குடித்து அதை உடம்பின் ஒரு பாகத்தில் சேமித்து வைக்கும் சக்தி ஒட்டகங்களுக்குத்தான் உண்டு. இம்மாதிரி ஒட்டகப் பிரயாணஞ் செய்வதற்குத் தென் இந்திய ரயில்வேயின் மூன்றாவது வகுப்புப் பெட்டிகள் பழக்கிக் கொடுக்கின்றனவோ என்று தோன்றுகிறது.

தனுஷ்கோடியிலிருந்து சென்னை எழும்பூர் ஸ்டேஷன் வரை பல நூறு மைல்கள் தூரம். சற்றேறக்குறைய இருபத்திநாலு மணிநேரம் ஒரே மூச்சில் பிரயாணஞ் செய்யவேண்டியிருக்கிறது. இந்த நீண்ட பிரயாணத்தைச் செய்யும் ரயில் தொடரின் மூன்றாம் வகுப்புப் பிரயாணி யொருவர் மூர்ச்சித்து விழ நேர்ந்தால் அவர் முகத்தில் தெளிப்பதற்கு ஒரு சொட்டுத் தண்ணீர் அந்தப் பெட்டிகளில் கிடையாது. தாகவிடாய் ஏற்பட்டால் பிரயாணிபடும் அவஸ்தையை பிரயாணவஸ்தை என்று மட்டுமல்ல, பிராணாவஸ்தை என்றே சொல்ல வேண்டும்!

யுத்தம், ரயில் பெட்டிகளுக்கும் தளவாடங்களுக்குந்தான் கட்டுப்பாட்டை உண்டாக்கியதென்றால் குடி தண்ணீருக்கும் கூடவா கஷ்டத்தை விளைவித்து விட்டது?

கே. எஸ். சௌக்கத் அலி.

திருச்சி
31—10—48

பரீக்ஷை முடிவும் மாப்பிள்ளைகளும்

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

இந்த யூனிவர்ஸிடிக்காரர்கள் இருக்கிறார்களே, மிகவும் பொல்லாதவர்கள்! இவ்வருடம் செப்டம்பர் மாதம் நடந்த பரீக்ஷைகளின் விவரங்களை 30—10—48 அன்று அதாவது தீபாவளிக்கு முதல் தினத்தன்று வெளியிட்டிருக்கிறார்கள். தேறினவர் பாடு கொண்டாட்டம்; தேறாதவர் பாடு திண்டாட்டம்.

ஆனால் ஒன்று. பரீக்ஷையில் தேறாத மாப்பிள்ளைகள் தாங்கள் போட்டிருக்கும் திட்டப்படி துள்ள மாட்டார்கள். சிலர் கௌரவத்துடன் 'அசௌகரியமாக இருப்பதால் வர முடியாது' என்று எழுதியிருப்பார்கள். சிலர் தலை தீபாவளிக்கு வந்திருந்தாலும் பேசாமல் இருந்துவிட்டு, கொடுத்ததை வாங்கிக் கொண்டு மறுநாளே திரும்பிப் போயிருப்பார்கள். வைர மோதிரம் வேண்டும், பயில்கண் பட்டு வேஷ்டி வேண்டும், தங்கச் செயின் போட்ட கைக்கடிகாரம் வேண்டும் என்று அவர்கள் நிபந்தனை போடா வண்ணம் இந்த முடிவு செய்திருக்கும். 'தீமையிலும் நன்மை உண்டு' என்று சொல்வதுபோல் மாப்பிள்ளைகள் தேறாம லிருப்பது பல மாமனார்களுக்கு மிகவும் சௌகரியமாக இருந்திருக்கும்!

ரா. கோபாலன்.

சிலோன்
30-10—48

திருகோணமலையில்!

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு

சுதந்திர இந்தியக் கடற்படையைச் சேர்ந்த 'டில்லி' என்ற யுத்தக் கப்பலும் அதற்குத் துணையான காவேரி, கிருஷ்ணா, ஸட்லஜ் என்ற மூன்று உதவிக் கப்பல்களும் அக்டோபர் 29-ம் தேதி முதலாவது முறையாக இலங்கையைச் சேர்ந்த திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தன. இது வரை அந்நிய நாட்டுக் கப்பல்களே வருவதும் தங்குவதும் போவதுமாக இருந்த திருகோணமலைத் துறைமுகத்தில், இந்த நாளு சுதந்திர இந்தியக் கப்பல்களின் வரவினால் என்றுமில்லாத ஒரு புதிய கலகலப்பு ஏற்பட்டது. வெள்ளைக்காரக் கடற்பட்டாளத்தினர் தமது உத்தியோக முறைப்படி இந்தியக் கடற்படைக்கு அளித்த மரியாதைகள் ஒருபுற மிருக்க, திருகோணமலை ஜனங்கள் அளித்த மரியாதையும் வரவேற்பும் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கவை.

கப்பல்காரர்கள் என்றால் இத்தனை காலமும் ஓடி ஒளிந்து கொண்டிருந்த ஆண், பெண் சிறுவர் சிறுமியர் யாவருமே இன்று இந்தியக் கப்பல்காரர்களை வரவேற்பதில் மிகுந்த உற்சாகம் காட்டினார்கள்.

ராமகிருஷ்ண மிஷன் பள்ளிக்கூடமொன்றில் இந்திய மாலுமிகளுக்குக் காப்பியும் தேநீரும் சிற்றுண்டிகளுமாக ஒரு பெரிய விருந்து ஒருநாள் மாலையில் நடைபெற்றது. இந்திய ஹை கமிஷனர் ஸ்ரீ வி. வி. கிரி அவர்களும், திருகோணமலை, மூதூர் பார்லிமெண்ட் பிரதிநிதிகளும் இன்னும் பல நகரப் பிரமுகர்களும் விருந்தில் கலந்து கொண்டு இந்திய மாலுமிகளை உபசரித்தார்கள். தமிழர், பஞ்சாபியர், மராட்டியர், மலையாளி—என்று பலதிறப்பட்டவர்கள் சுதந்திரக் கப்பல்களி லிருந்து வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோருமே இலங்கை மக்களோடு சேர்ந்து ஒரு மேஜையி லிருந்து அளவளாவி, விருந்துண்ட காட்சி கவர்ச்சியா யிருந்தது. பரஸ்பரம் க்ஷேமங்களை விசாரித்து, வரலாறுகள் தெரிவித்து நீண்ட காலம் பழகியவர்களைப்போல மிக்க அந்நியோந்நியமாய்ப் பழகினார்கள். மூவர்ணக் கொடி காற்றில் பட பட வென்று அடித்துக் கம்பீரமாகப் பறந்து நின்ற இந்தியக் கடற்படைக் கப்பல்களைத் தரிசிப்பதற்காகத் தினந்தோறும் கூடிய பெண்களையும் குழந்தைகளையும் புருஷர்களையும் கணக்கிட முடியாது. ஆகவே ஒரு ஜன சமுத்திரமா யிருந்தது என்று சொல்லிவிடலாம்.

'டில்லி'யையும் 'காவேரி'யையும் பார்ப்பதற்கு ஒரு பக்கத்தில் இவ்வாறு பலர் படையெடுத்து நிற்க, சிலோனைப் பார்ப்பதற்கென இந்திய வீரர்கள் துறைமுகத்தின் மற்றொரு வழியாகக் கூட்டம் கூட்டமாகக் கரையில் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

இம்முறை தீபாவளி திருகோணமலையில் இப்படிப் பெருமகிழ்ச்சியுடன் கழிந்தது.

அ. செ. முருகானந்தன்.

காஞ்சிபுரம்.
27—10—48

காஞ்சியைக் கவனிப்பார்களா?

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

சுதந்திர இந்தியாவின் சுதந்திர வாலிபனான நான் தங்கள் சுதந்திர மலரைப் பார்த்து அக மகிழ்ந்தேன். அதில் "இந்தியப் பேரரசுகள்" என்ற கட்டுரையைப் பார்த்தேன். இதில் தாங்கள் சந்திரகுப்த மௌரியனும், சாணக்கியரும் சேர்ந்து ராஜ்யபாரம் நடத்தியபோது, மக்களுடைய சுகாதாரமும், பந்தோபஸ்தும் நன்கு கவனிக்கப்பட்டு வந்ததென்றும், சுகாதாரத்தை மீறி நடப்பவர்களுக்குக் கடுந் தண்டனை விதிக்கப்பட்டதென்றும், எழுதி யிருக்கிறீர்கள். மேலும் நமது நகர சபைகளும், ஜில்லா போர்டுகளும் சுகாதாரத்தை இதுபோல் சற்றுக் கவனித்தால் எவ்வளவு நன்றாக இருக்கு மென்றும் எழுதி யிருக்கிறீர்கள்.

எங்கள் நகரத்தில் ரோடுகள் கல்லும், மண்ணும் இட்டுச் செப்பனிடப் பட்டுள்ளன. ஒரு மழை பெய்தால் போதும், மண்ணெல்லாம் கரைந்து கற்கள் காலைப் பதம் பார்க்கின்றன. நகரத்து பஸ்களும் வெளியூர் பஸ்களும் அவ்வழியே செல்லும்போது நம் மீது விபூதி அபிஷேகம் செய்து விட்டுச் செல்கின்றன. சைக்கிளில் சென்றாலோ சைக்கிள் நாசம் போகிறது. எங்கள் ஊர் முனிஸிபாலிடி இதையெல்லாம் கவனிக்காமல் ஏன் இருக்கிறதோ தெரியவில்லை!

இதை உங்களுக்கு ஏன் தெரிவித்தேன் என்றால், நீங்கள் காஞ்சியின் புகழை 'சிவகாமியின் சபத'த்திலும், 'பார்த்திபன் கனவி'லும் எழுதி யிருப்பதைப் படித்துள்ளேன். உங்களுக்காவது அக்கறை இருந்து எங்களூர் முனிஸிபாலிடிக்குத் தெரிவிப்பீர்களோ என்ற நம்பிக்கையினால்தான் எழுதினேன்.

டி. சே. இராஜசேகரன்

• இந்த இதழில் வெளியாகி யிருக்கும் வட்ட மேஜைக் கடிதங்களில் மதுரை ஸ்ரீ வி. நா. ஸ்ரீநிவாசன் எழுதி யிருக்கும் கடிதத்துக்கு ரூ. 25 பரிசு வழங்கப்பட்டது.

திருஷ்டி தொலைந்தது!



கோணல்

பிறர் கண்களுக்குப் பார்ப்பதற்கு அழகாகவும் ஆடம்பரமாகவும் இருக்க வேண்டும் என்பதை நான் உணர்ந்ததே யில்லை. அதை உணர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபொழுது எனக்கு மிகவும் சங்கடமாகவும் சிரமமாகவும் தானிருந்தது.

"இதோ பாருங்கோ! உங்களை என்னால் கண்கொண்டு பார்க்கச் சகிக்கல்லே; என்ன அவலட்சணம்! நீங்க இப்படியே இருந்தால் எனக்குத் துளிக்கூடப் பிடிக்காது" என்று அவள் வீட்டுக்கு வந்த முதல் நாளே சொல்லி விட்டாள்!

'நான் அவலட்சணமா? இப்படியே இருந்தால் அவளுக்குத் துளிக்கூடப் பிடிக்காதாமே? அவளுக்குப் பிடிக்காவிட்டால் என்ன செய்வாளோ? பிறந்த வீட்டிற்கே திரும்பிப் போய்விடலாம்...... இல்லாவிட்டால் விவாக ரத்து..............' இப்படியெல்லாம் நடப்பது பெருத்த பயங்கரமாகத்தான் எனக்குப் பட்டது. இருந்தாலும் அவளோடு விவாதித்து முடிவுக்கு வருவதுதான் சுத்த வீரனின் லட்சணமாகப் பட்டது. "இதோ பார் அல்மு! என்னைத்தான் உனக்குப் பிடிக்கவில்லையே, ஏன் என்னைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்?" என்றேன்.

"ஹூம்! என்ன செய்யறது. பெண்ணாய்ப் பிறந்துட்டா யாரையாவது கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று விதியிருக்கே" என்றாள் அலுத்துக்கொண்டே.

"அந்த விதிதான் ஆண்பிள்ளைகளுக்கும் இப்படித் தொல்லை கொடுக்கிறது. ஹூம், நான் இவ்வளவு 'அவலட்சணம்'னு நீ பார்த்துச் சொன்ன பிறகுதானே தெரிந்து கொள்ள வேண்டியிருக்கு......"

"நீங்க அவலட்சணமாக இருக்கிறீர்கள் என்று நான் சொல்ல வரல்லே. லட்சணமாக இருக்கிற உடம்பையும் முகத்தையும் ஏன் இப்படி அவலட்சணமாகச் செய்து கெடுத்துக் கொள்கிறீர்கள் என்றுதான் நான் கேட்கிறேன்."

"இப்படி இருக்கிறதினாலே என் கௌரவம் யோக்யதை இதெல்லாம் குறைந்து போயிடல்லே."

"கௌரவம், யோக்யதை யெல்லாம் குறைந்து போயிடுத்துன்னு சொல்றேன். நீங்க ஒரு இடத்துக்குப் போனா உங்க உருவமும் முகமும் நாலுபேருக்குப் பார்க்கச் சகிக்க வேண்டாமா?"

"என்னைப் பார்க்கிறவா என் அழகிலே மயங்கி இனிமேல்தான் எனக்குப் பெண் கொடுக்கணுமா?"

"அப்படி ஒருவரும் உங்களைப் பார்த்தவுடனே மயங்கி ஓடிவந்து பெண் கொடுத்துடுவா என்று நான் பயப்படல்லே. இந்தப் புருஷனுக்கும் ஒரு பெண் வாழ்க்கைப் பட்டிருக்காளேன்னு சிரிப்பா, பாருங்கோ! அதுக்காகத்தான் வெட்கப் படுகிறேன்."

இதற்குமேல் விவாதம் நீடித்துக் கொண்டே போனால் அது எங்கே போய் முடியும் என்று நிர்ணயிக்க முடியாததால், அதோடு ஒரு சமாதானத்துக்கு வர நினைத்தேன். "ஓஹோ, அப்படியா! இப்போ நீ என்னை என்னதான் செய்யச் சொல்கிறாய்?" என்றேன்.

"நான் என்ன சொல்கிறேன். காலா காலத்திலே க்ஷவரத்தைப் பண்ணிக் கொள்ளுங்கோ; தலையை நன்றாகப் படிய வாரிக்கொள்ளுங்கோ; நல்ல வேஷ்டியும் சட்டையுமா 'பளிச்'சென்று வெளியே புறப்படுங்கோன்னுதான் சொல்கிறேன்" என்றாள் அவளும் ஒரு சமாதானத்திற்கு வந்தவள்போல்.

மறு நாளிலிருந்து என்னை நான் அலங்காரம் செய்து கொள்வதில் அதி தீவிரமாக முயன்றேன். நான்கு சில்க் ஷர்ட்டுகள் தைத்தேன். பெட்டியிலிருந்த ஜரிகை வேஷ்டிகளை யெல்லாம் உபயோகத்திற்கு எடுத்தேன். சூரியன் உதயமாகிறானா இல்லையா என்று நான் கவனிப்பதே கிடையாது. தினம் படுக்கையை விட்டு எழுந்ததும் முகக்ஷவரம் செய்து கொள்வதுதான் முதல் வேலையாக இருந்தது. ஸ்னோ, கிரீம், பவுடர் இவைகளெல்லாம்

மூக்கத்திலிருந்து வந்து மேஜைமேல் கொலு வீற்றிருந்தன. முகத்தின் லட்சணத்தை மூக்கு குறைத்துவிடுவதாக எண்ணிய நான் மூக்கின் அவலட்சணத்தை மறைக்க ஒரு மூக்குக் கண்ணாடியை வாங்கி மாட்டிக் கொண்டேன். அடிக்கடி கலைந்துபோகும் தலையை வாரிக்கொள்ளவும், வியர்வை கசியும் முகத்தைத் துடைத்துக் கொள்ளவும் ஒரு சிறிய கண்ணாடி, சீப்பு இரண்டையும் கைக்குட்டையோடு சுருட்டி சட்டைப் பையோடு வைத்துக் கொண்டேன். கொஞ்ச நாளில் என்னோடு பழகும் சிநேகிதர்களுக்கெல்லாம் நான் முற்றிலும் புதியவனாகிவிட்டேன். என்னைப் பார்க்கப் பார்க்க அலமுவின் ஆனந்தம் எல்லை கடந்துவிட்டது.

"நீங்க இவ்வளவு அழகாகவும் கம்பீரமாகவும் இருப்பீர்கள் என்று நான் சொப்பனங்கூடக் கண்டதில்லை" என்றாள் பெருமை தாங்க மாட்டாதவள்போல். நான்கூடக் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டே 'கல்யாணத்திற்கு முன்னால் இப்படியெல்லாம் இருந்திருந்தால் சில்லறை விஷயம்கூடக் கொஞ்சம் தாராளமாகக் கிடைத்திருக்குமே' என்று மனதிற்குள் அங்கலாய்த்துக் கொண்டேன்.

என்னோடு சேர்ந்து நின்று பெரிதாக ஒரு போட்டோ எடுத்து விட்டு வெளி வாசற்படிக்கு நேரே அழகாக மாட்டி வைக்க வேண்டுமென்று அவள் அடக்க மாட்டாத ஆசையோடு சொன்னாள். காரணமில்லாமல் புதிதாக மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டதால் எனக்கு அடிக்கடி தலைவலி ஏற்பட ஆரம்பித்தது. ஆனால் அது மூக்குக் கண்ணாடியால் ஏற்பட்டது என்று அலமு ஒப்புக்கொள்ளவேயில்லை. எனக்குத் தலைவலி ஏற்படும்போதெல்லாம் யாருடைய கண் திருஷ்டியோதான் பட்டிருக்கிறது' என்று சொல்லி ஊரிலுள்ளவர்களை யெல்லாம் திட்டிக் கொட்டி திருஷ்டி பரிகாரமாக மிளகாய் நெடியிலும் சாம்பிராணிப்புகை நடுவிலும் உட்காரவைத்து என்னைத் திணற வைத்துக் கொண்டிருந்தாள். இப்படி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகவோ பொழுதொரு மேனியும் நாளொரு வண்ணமுமாகவோ என் ஆடம்பரம்—அழகு—அலமுவின் அடங்காத பெருமை, ஊரிலுள்ளவர்களின் கண் திருஷ்டி—அதற்கான பரிகாரம்—எல்லாம் தீவிரமாக வளர்ந்துகொண்டே வந்தன. அதோடு மட்டுமல்ல; ஒவ்வொரு நாளும் நான் ஆபீஸிற்குப் போய்விட்டு வந்ததும் என் அழகில் மானேஜர் எப்படி மயங்கினார், பஸ் கண்டக்டர் என் வசீகரமான முகத்தைப் பார்த்ததும் டிக்கட்டிற்குக் காசு வாங்க மறுத்தது, பழக் கடைக்காரனை வசீகரித்து டஜன் மூன்று ரூபாய் சொன்ன சாத்துக்குடிப் பழத்தை முக்கால் ரூபாய்க்கு வாங்கியது முதலிய சுவாரஸ்யமான விஷயங்களைச் சொல்லுவது வழக்கமாகி விட்டது. அவளுக்கும் அவைகளைக் கேட்பதில் தாங்க மாட்டாத ஆனந்தம் பொங்கி வழிந்தது.

ஒரு நாள் இந்தப் பேச்சு ஒரு உன்னதமான கட்டத்தைப் போய்த் தொட்டது. "அலமு, இதைக் கேட்டாயா?" என்று ஆரம்பித்த பீடிகையிலேயே களைகட்டி விட்டது. அவளும் "என்ன?" என்று அதிசயத்தோடு கேட்கத் தயாரானாள்.

"இந்தத் தெருவிற்குப் பக்கத்திலே ஒரு சந்து இருக்குப் பாரு! அதிலேயிருந்து இரண்டு பெண்கள் காலேஜுக்குப் போறா, தெரியுமா?"

"இதை யெல்லாம் யார் கண்டா? எத்தனையோ பெண்கள் காலேஜிலே படிக்கிறதுகள்......"

"அதுதானிருக்கே! முக்கியமா இந்த இரண்டு பெண்களும் ரொம்ப நல்ல பெண்களென்று சொல்ல வந்தேன். ஒரு பெண் பெயர் லீலா: இன்னொரு பெண் பெயர் லோசனா."

"சரிதான்! லீலாவுக்கும் லோசனாவுக்கும் இப்போ என்ன?"

"ஒன்றுமில்லை — கொஞ்சம் ஆடம்பரமா 'டிரஸ்' பண்ணிக்கொண்டு போனா யாரா யிருந்தாலும் மயங்கத்தான் வேண்டியிருக்குன்னு சொல்ல வந்தேன்."



இப்படியானேன்......

இதைக் கேட்டதும் அலமுவுக்கு ஏதோ தேவதையின் சான்னித்தியமே வந்துவிட்டதுபோலிருந்தது. "அவாளைக் கண்டு நீங்க மயங்கினீர்களா, உங்களைக் கண்டு அவா மயங்கினா?" என்றாள் படபடப்போடு. "ஊ—ம்! நானு அவர்களைக் கண்டு மயங்குகிறவன்......?"

"சரிதான் உங்களைக் கண்டதும் அந்த இரண்டு பெண்களும் அப்படியே மயங்கி......"

"மயங்கறதுன்னு அசல் மயக்கத்தைச் சொல்லவில்லே. என்ன இருந்தாலும் என்னைப்போல அழகாகவும் ஆடம்பரமாகவும் இருக்கிறவர்களைப் பார்த்தால் யாருக்குத்தான் நெருங்கிப் பழக ஆசை இருக்காது, சொல்லு......?"

"அவா இரண்டு பேரும் உங்களுக்கு ரொம்ப சிநேகிதமாயிட்டாப் போலிருக்கிறது?"

"இன்னும் அவ்வளவு சிநேகிதமாகல்லே. அவா ரெண்டு பேரு கண்ணும் பட்டிருக்கே. நீ எனக்கு ஏதாவது திருஷ்டி கழித்து......"

"இதுக்கு ஒரு திருஷ்டியும் கழிக்க வேண்டாம். அது கிடக்கட்டும்; அவா இரண்டு பேரும் உங்களுக்கு எப்படிச் சிநேகமானா?"

"அதுவா? நான் காலையில் எந்த பஸ்ஸில் ஆபீஸிற்குப் போவேனோ அதிலேயே தான் அவர்களும் வருவார்கள். நான் வருவதற்குக் கொஞ்சம் நாழிகையானாலும், பாவம்! பஸ் நிற்குமிடத்திலேயே இரண்டு பேரும் காத்திண்டிருப்பா. எங்கள் மூன்று பேருக்கும் எந்த பஸ்ஸிலே இடம் கிடைக்கிறதோ அதிலே தான் ஏறுவோம். இப்படியிருந்து......"

"கொஞ்சம் கொஞ்சமா சிநேகமாயிடுத்தாக்கும். அதுகள் இரண்டும் கல்யாணமான பெண்கள்தானே?"

"கல்யாணமானதாகத் தெரியல்லே அப்படி ஒண்ணும் வயசானதாகவும் தெரியல்லே. இருபத்தி மூணு, இருபத்திநாலு வயசுதானிருக்கும். இன்னும் பி. ஏ. பாஸ் பண்ணவில்லையாம்."

"அது எப்படி வேணுமான்னு தொலையட்டும். உங்களுக்குக் கல்யாணமாயிட்டுதுன்னு அவாளுக்குத் தெரியுமோல்லியோ?"

"ஓ! தாராளமாகத் தெரியும். உங்க அகமுடையான் ரொம்ப அழகா இருப்பானோன்னு லோசனகூடக் கேட்டாள்..."

"அதற்கு நீங்க என்ன பதில் சொன்னீர்கள்?"

"உங்களைப்போல அவ்வளவு அழகா இருக்கமாட்டா. ஏதோ சுமாரா இருப்பான்னு சொன்னேன்—"

"ஏன் அப்படிச் சொன்னீர்கள்?"

"உள்ளதைச் சொல்லித்தானேயாகணும்."

"உள்ளதைச் சொன்னீர்களா? என்னைவிட அவாளெல்லாம் உங்களுக்கு அழகாய்ப் போயிட்டாளா?" என்று சீறினாள்.

"உன்னைவிட அவா ரொம்ப அழகுன்னு சொல்வதற்குக் காரணமாயிருந்ததே— அந்த லோசனா ஒரு ஜாக்கட் போட்டுக்கொண்டிருந்ததுதான். அந்த ஜாக்கட் அவள் அழகை ரொம்ப ரொம்ப பிரகாசப்படுத்தியது..."

"ரொம்ப லக்ஷணம்-போதும். இதோ பாருங்கோ, நாளையிலேயிருந்து நீங்க பஸ்ஸிலே ஆபீஸுக்குப் போக வேண்டாம். டிராமிலே போயிட்டு வாங்கோ, கொஞ்சம் நடைக்குச் சோம்பாமல். அரையணா லாபமாகக்கூட இருக்கும். ஒரு பாஸ் வாங்கி வைத்துக் கொண்டால் கூட இன்னும் லாபமாயிருக்கும்" என்று முடிவாகவும் கண்டிப்பாகவும் சொல்லி விட்டுச் சமையலறையைப் பார்க்கப் போய்விட்டாள்.


மறுநாள் காலையில் ஆபீஸிற்குப் புறப்படும்போது சில்க் ஷர்ட்டையும் ஜரிகை வேஷ்டியையும் எடுத்தேன். சட்டென அதை என் கையிலிருந்து வாங்கி "இதோ பாருங்கோ! வெறும் நாளிலே எல்லாம் இதையெல்லாம் போட்டு ஏன் வீணாயடிக்கிறீர்கள்? தினசரி உபயோகத்துக்குச் சாதாரண வேஷ்டியும் சட்டையும் போறாதோ? சலவை பண்ணின துணி கூட அவ்வளவு சுகாதாரத்துக்கு ஒத்ததில்லையாம். தினம் தோய்த்துக் கட்டுகிறதுதான் நல்லதாம்" என்று சொல்லிச் சாதாரண வேஷ்டியையும் ஜிப்பாவையும் எடுத்துக் கொடுத்தாள்.

அவைகளை வாங்கி அணிந்து கொண்டு 'கிரீமை' எடுத்துத் தலையில் தடவிக் கொள்ளப் போனேன். அவள் அதையும் என் கையிலிருந்து வாங்கி மேஜைமீது வைத்துவிட்டு, "இதோ பாருங்கோ! இனிமேல் 'கிரீ'மே தடவிக்க வேண்டாம். எங்க மாமா பிள்ளை மணி இப்படி கண்ட கிரீமையெல்லாம் தடவிக் கொண்டதனாலேதான் தலை முழுவதும் நரைத்துப் போயிடுத்து. முகத்துக்கு ஸ்நோவும் பவுடரும்கூடப் போட்டுக் கொள்ளாதீர்கள். எங்க அத்தைப் பெண் ராஜியின் முகம் பூராவும் சிரங்கும் பருவும் வந்ததற்குக் காரணம் இந்த ஸ்நோவும் பவுடரும்தான்" என்றாள்.

இப்படியாக எனக்கும் நீலா—லோசனா இவர்களுக்கும் ஏற்பட்ட சிநேகிதத்தை அலமுவிடம் சொல்லப் போக, நான் வாங்கி வைத்த அழகு சாதனங்கள் எல்லாம் உபயோகமில்லாமல் போய் விட்டன. திடீரென்று நான் பூர்வாசிரமத்திற்குத் திரும்பி வந்தது எல்லோருக்கும் வியப்பாகத்தானிருந்தது. ஆனால் எனக்கு ஏதோ பெரிய தண்டனையிலிருந்து விடுதலையடைந்த உணர்ச்சி தான் ஏற்பட்டது. திருஷ்டி தோஷத்திற்குச் சாந்தியாக நான் என் மனைவியிடம் படும் அவஸ்தையிலிருந்து மீண்டதே எனக்குத் திருஷ்டி கழித்து விட்டது மாதிரி இருக்காதா, சொல்லுங்கள்!



ஜலதோஷம்
அதிகரித்துக்கொண்டே வருகின்றது
ஆரம்பத்திலேயே
'ஆஸ்ப்ரோ'
சாப்பிடுங்கள்.
இவ்விதம் செய்க:
இப்போது
சீதோஷ்ண நிலை வெகு ஜாக்கிரதையாக இருககும்படியானது
இதுவே 'ஆஸ்ப்ரோ'வின்
ரகசியம்
அணா 15 க்கு 30 வில்லைகள்
அணா ½ க்கு 3 வில்லைகள்
As. 15
30 TABLETS
ASPRO
ENGLAND
ASPRO
REG. TRADE MARK



இலையுதிர்காலம்

மழைக்காலம் சென்றுவிட்டது. [illegible]
[illegible]
[illegible] தானியங்கள் [illegible].
[illegible] தானியங்களைச் சேகரி[illegible]
[illegible]
[illegible]
[illegible] காலம் இது.

[illegible] — கிராமக் [illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]



[illegible]



பரிசுத்தத்துடன் புஷ்டி நிறைந்த
கிளாக்ஸோவை குழந்தைக்கு ஊட்டுங்கள்.
......கை படாதது......
இரும்புத் தாதுவும் வைடமின் D-யும்
ஒருங்கே கொண்டது.
Glaxo
குழந்தை ஆகாரம்
இந்தியாவுக்கு சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
ஹெச். ஜே. பாஸ்டர் அன் கோ லிட்., பம்பாய் - கல்கத்தா - மதராஸ்


நாளுக்கு நாள்
உங்கள் சருமம் அதிக
அழகைப் பெறும்
Rexona
கேடில் கலந்த சோப் ரெக்ஸோனா ஒன்றே. அது உங்கள் சருமத்திற்கு புது ஆரோக்கியமும், மாசற்ற சோபையும், புது அழகும் தரும்.
இன்றே ரெக்ஸோனா சோப் உபயோகிக்க ஆரம்பியுங்கள். அதன் நுரையை மெதுவாக சருமத்தில் தேய்த்துக்கழுவுங்கள். கேடில், சருமத்தை சுத்தம் செய்து மிருதுவாக்கி ஆரோக்கியமூட்டும் சக்தி வாய்ந்த தைலங்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட கலப்பு மருந்து. அது உங்கள் சருமத்தை அதிக ஆரோக்கியமுடையதாகவும், அப்பழுக்கற்றதாகவும், திடமாகவும் செய்ய உதவும். அன்றியும் உங்கள் சருமம் நீடித்து நிற்கும் புது அழகைப்பெறும்.
கேடில் சேர்ந்த
ரெக்ஸோனா தான்
இதைச் செய்கிறது!
ரெக்ஸோனா
சோப்
RP. 42-172 TM

டன்லப்

ஜூபிலி

1898 - 1948



50 வருஷ வளர்ச்சி

சென்ற காலத்தில் வழி காட்டியவர்கள்

வருங்காலத்தலைவர்கள்

கோல்கேட்

சுவாசத்தையும் பற்களையும் சுத்தப்படுத்துகின்றது

கோல்கேட் பவுடரோ அல்லது கிரீமோ உங்கள் இஷ்டப்படி வாங்கிக் கொள்ளலாம்.

- ★ உங்களது பற்களைச் சுத்தம் செய்வதுடன் உங்களது சுவாசத்தையும் சுத்தமாக்குகிறது.
- ★ கோல்கேட்டிலுள்ள மிருதுவான பளபளப் பூட்டும் பொருளானது எனாமலை மிக எளிதாகவும், கேடு விளைவிக்காமலும் பரிபூரணமாகவும் சுத்தப் படுத்துகின்றது.
- ★ கோல்கேட் ஒரு சிறந்த உயர் ரகப் பொருள், மிருகக் கொழுப்பு அற்றது.
- ★ பல் வைத்தியர்களால் சிபார்சு செய்யப் படுவது. விலை குறைவு-அதிக நாட்கள் வரும்.





பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

6,00,000 நூற்கும் கதிர்கள். நம்பர் 80 வரை நூல்கள்.

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒத்தை நூல், இரட்டை நூல் பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள். எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்: ஏ & எப். ஹார்வி லிமிடெட்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras


கல்கி
ALKI நவம்பர் 14, 1948
4 அணா

டி.எஸ்.ஆர்.



டி. எஸ். ஆர். தைலங்களை ஆயிரக்கணக்கான மக்கள் விரும்பி உபயோகிப்பதற்குக் காரணம் அவைகளின் சிறந்த குணமே. ஆயுர்வேத சாஸ்திரீய முறைப்படி தயாரித்த சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம் மூளைக்குக் குளிர்ச்சியையும் சருமத்திற்குப் பளபளப்பையும் கொடுக்கின்றன



டி.எஸ்.ஆர் & கோ.
கும்பகோணம்

FAS 375

மதராஸ் ஏஜண்டு:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்

கோவை, நீலகிரி ஜில்லாக்கள் & பாலக்காடுக்கு ஏஜண்டு:
B. பாலபட்டாபி
(Estd. 1933)
P. B. No. 182, கோயமுத்தூர்

குழந்தைகளின் ஈரல் குலைக் கட்டிகளுக்கு இன்றியமையாத மருந்து!




குழந்தைகளின் ஈரல் குலைக் கட்டிகளை குணப்படுத்தும் ஜம்மியின் லிவர்க்யூர் வைத்திய சாஸ்திரத்திற்கே அவசியமானதும் பெருமை அளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

இந்த அற்புத நிவாரணியால், முற்றிப் போய் கைவிடப்பட்ட ஈரல் குலைக் கட்டி வியாதிகளும் ஆச்சரியகரமான முறையில் குணப்படுத்தப் பட்டிருக்கிறது என்று இந்தியாவில் உள்ள பிரக்யாதி பெற்ற பல டாக்டர்களால் பாராட்டப் பட்டுள்ளது.



ஜம்மியின் லிவர்க்யூர்

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்
மைலாப்பூர் மதராஸ் 4 (போன் நெ. [illegible])
தெப்பகுளத்தெரு, பெரியதெரு கும்பகோணம், பெங்களூர், பம்பாய் 4, (போன் நெ. [illegible])
[illegible]

(ESTD:  1907)

கிளைகள் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டுரோடு, ராயப்பேட்டை
மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர் & ராயபுரம்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 53,00,000
ரிசர்வ் நிதி	ரூ. 62,00,000

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

என். கோபால அய்யர், செக்ரடரி

தி இந்தியன் பாங்க் லிட்.,

தலைமை ஆபீஸ்: இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்.
நார்த் பீச் ரோடு, மதராஸ்.



நாள் முழுவதும்
குதூகலம்தான்!

நியதியின்படி-காலையிலிருந்து இரவு வரை-எக் கவலையுமில்லாமல் உத்ஸாகத்துடன் இருக்கலாம். ஆனால் - குடல் சரிவர சுத்தம் செய்யப்படா விட்டால், வெறுப்பும், கடுகடுப்பும் ஏற்படுவது இயற்கையே ஆகையால், உடலின் இயற்கை நியதிகளைப் பாதுகாக்கும் பொருட்டு, புத்திசாலிகளான எல்லா தாய்மார்களும் தங்கள் குழந்தைகளுக்கு காலாகாலத்தில் இந்த மிருதுவான போனோமின்டை கொடுப்பார்கள்.

சுத்தமான மலமிளக்கும் உன்னத சஞ்சீவி

ரூ. 1—2—0 ரூ. 0—7—0 ஆகிய இரு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்.

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜெண்டுகள் :

ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி,
99-A, அரமனைக்காரத் தெரு, சென்னை

BONOMINT
LAXATIVE
CHEWING GUM

REGD. No. M. 4392



சந்தோஷச் செய்தி!

அக்டோபர் மாதம் முதல் தேதியிலிருந்து
விலைகள் மிகவும் குறைக்கப் பட்டுள்ளன

★

பம்பாய் தேவிதயாள் கம்பெனியார்

தயாரித்த

எவர்ஸில்வர் பாத்திரங்கள்

வெள்ளியின் அழகும் இரும்பின்
உறுதியும் ஒருங்கே கொண்டவை

பேஸின்கள், தட்டுகள், டப்பாக்கள், டேபிள் ஸ்பூன்கள்
டீ ஸ்பூன்கள், கிண்ணங்கள், டபராக்கள், அடுக்குகள்
இன்னும் விதவிதமான பாத்திரங்கள் வந்து குவிந்துள்ளன

•

தட்டுகள், பம்பாய் அடுக்குகள், பவுண்டு
ஒன்றுக்கு ரூ. 9/- குத்தடுக்குகள் பவுண்டு ரூ. 10/8/-
இதர சாமான்கள் பவுண்டு ரூ. 10/-

*சமஸ்தானங்கள் உள்பட தென்னிந்தியா
கிளோருக்குப் பூரண விநியோகஸ்தர்கள்*

ஸாம்ஸன் & கோ., லிமிடெட்

8-22, பிராட்வே (போன் : 4521) மதராஸ்